Stay Connected with:
.Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

உதயன்
UTHAYAN - A Lively National Tamil Daily


மழைக்கான சாத்தியம் உண்டு.
27.°C 26.°C



# வருகிறார் மன்மோகன்

## 13ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கும் பயணம்
## வடக்கு மாகாண முதல்வருடனும் சந்திப்பு



புதுடில்லி, நவம்பர் 8
கொழும்பில் நடைபெறும் பொது நலவாய மாநாட்டில் பங்கேற்பதா அல்லது மாநாட்டைப் புறக்கணிப்பதா என இறுதித் தீர்மானமொன்றை எடுப்பதற்காக தடுமாறிவந்த இந்தியப்பிரதமர்மன்மோகன் சிங், குறித்த மாநாட்டில் பங்கேற்பதென முடிவெடுத்துள்ளார் என்று டில்லி இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது.
இதேவேளை எதிர்வரும் 13ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் அவர் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதுடன் இந்திய அபிவிருத்தித் திட்டங்களையும் பார்வையிடுவார். இதற்கான ஏற்பாடுகளை இந்திய துணைத் தூதரகம் மேற்கொண்டுள்ளதாக நம்பகரமாகத்தெரியவருகிறது.
நேற்று இரவு இடம்பெற்ற இந்திய அமைச்சர வைக் கூட்டத்திலும் மன்மோகன் கலந்து கொள்வது குறித்து

21

### சிசு கொலை பெண் கைது

வவுனியா, நவ.8
கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டிருந்த நிலையில் ஆண் சிசு ஒன்றின் சடலத்தை வவுனியா பொலிஸார் மீட்டுள்ளனர்.
அதிக இரத்தப் போக்கு காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த பெண் ஒருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் மூலம்

21

## போகக் கூடாது மன்மோகன்
## பொங்கி எழுகிறது தமிழகம்

சென்னை, நவ.8
இனப்படுகொலை நடத்திய இலங்கையில் இடம்பெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியப்பிரதமர்மன்மோகன் சிங் பங்கேற்கக்கூடாதென்று வலியுறுத்தித் தமிழகத்தில் நடத்தப்பட்டு வந்த போராட்டங்கள் நேற்று வியாழக்கிழமை உச்சக் கட்டத்தை எட்டின.
இந்தப் போராட்டத்தை ஒடுக்கும் நடவடிக்கைகளில் தமிழகப் பொலிஸார் முழு மூச்சாகச் செயற்படுகின்றனர் என்று குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.
ஊடகவியலாளர்களும் போராட்டம்
இசைப்பிரியாவின் படுகொலையைக் கண்டித்தும், பொது நலவாய அமைப்பிலிருந்து இலங்கையை நீக்குமாறு வலியுறுத்தியும் தூத்துக் குடியில் ஊடகவியலாளர்கள் சார்பில் போராட்டம் நடத்தப்பட்டது.
தூத்துக்குடி பாளை வீதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் மோகன் ராஜ் தலைமை வகித்தார்.
சட்டத்தரணிகளும்
இலங்கையில் நடைபெறவுள்ள

21

### வலி.வடக்கில் மீள் குடியமர்வுக்கு பிரார்த்தனை

வலி.வடக்கு, நவ.8
வலி.வடக்கு மக்கள், சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும் என்று ஆசி வேண்டி இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் கூட்டுப்பிரார்த்தனை ஒன்று இடம் பெறவுள்ளது.
இதற்கான ஏற்பாடு

21

## மோதல் தவிர்ப்பு வலயம் நேற்றுப் புதுடில்லியில்




புதுடில்லி, நவ.8
இலங்கையில் அடுத்த வாரம் பொதுநலவாய மாநாடு இடம்பெறவுள்ள நிலையில், இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்த 'மோதல் தவிர்ப்பு வலயம்' என்ற ஆவணப் படம் புதுடில்லியில் நேற்று வியாழக்கிழமை திரையிடப் பட்டது.
முன்னதாக இந்த நிகழ்வில் பங்கேற்பதற்காக குறித்த ஆவணப்படத்தின் இயக்குநர் கெலும் மக்ரே இந்தியா செல்வதற்கு, நுழை விசைவுக்கு (விஸா) விண்ணப் பித்திருந்த போதும் அவருக்கு அது வழங்கப்படவில்லை.
இருப்பினும் சமூக ஜனநாயகத்துக்கான மையம் நேற்று ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சி ஒன்றில் இந்தத் திரைப்படம் திட்டமிட்டவாறு திரையிடப்பட்டது. (த-5)

## காணாமற் போனோருக்காக மெழுகுவர்த்திப் போராட்டம்
### கொழும்பில் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ.8
பொதுநலவாய மாநாடு இடம் பெறவுள்ள காலப் பகுதியில் கொழும்பில் போராட்டம் நடத்தத் தமக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த காணாமற்போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் தலைவர் சுந்தரம் மகேந்திரன், இருந்தும் தாம் மெழுகுவர்த்திப் போராட்டம் நடத்தவுள்ளதாகக் கூறினார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொழும்பில் பொதுநல வாய தலைவர்களின் மாநாடு எதிர்வரும் 13ஆம் திகதி முதல் 15ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.
இந்த மாநாடு இடம்பெறும் காலப் பகுதியில் கொழும்பில் போராட்டங்கள் நடத்துவதற்கு இலங்கை அரசு தடை விதித்துள்ளது.
இருப்பினும் ஐ.தே.க. தலைமையகமான ஸ்ரீ கோத்தாவின் பின்னால் உள்ள மைதானத்தில், 13ஆம் திகதியும் 14ஆம் திகதியும் போராட்டம் நடைபெறவுள்ளது.
இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை கண்டித்தும், காணாமற் போனோர் கண்டறியப்பட வேண்டுமெனக் கோரியும் போராட்டம் நடத்தப்படவுள்

21

## இலங்கை அரசிடம் நியாயம் கேட்போம்
### கூறுகிறது பிரிட்டன்



கொழும்பு, நவ.8
பொதுநலவாய மாநாட்டில் பங்குபற்றுவதன் மூலமே பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் கேள்வி எழுப்பி நியாயம் கோர முடியும் என்று பிரிட்டன் வெளிவிவகார செயலர் வில்லியம் ஹேக் தெரிவித்துள்ளார்.
இலங்கையில் நடைபெறும் பொதுநலவாயத் தலைவர்கள் மாநாட்டில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் கலந்து கொள்வார் என்றும், பிரிட்டன் தமது ஆசனத்தை வெறுமையாக விடாது கலந்து கொள்வதன் மூலமே தூதரக ரீதியில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இது குறித்து அவர்

21

## காணாமற் போனோரின் நிலை என்ன? கண்டறியப்படும் என்கிறது ஆணைக்குழு

கொழும்பு, நவ.8
காணாமற் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை இயன்றளவு கண்டறிவதற்கு தமது ஆணைக்குழுமுயற்சிக்கும் என்று காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.
மன்னார் பிரஜைகள் குழுவினால் காணாமற் போனவர்கள் தொடர்பில் வடக்கில் திரட்டப்பட்ட ஆவணங்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஜனாதிபதி ஆணைக் குழுவிடம் கையளிக்கப்பட்டன.
இந்த நிகழ்வுக்கு ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம மற்றும் சுரஞ்சனா வித்தியரட்ண, திருமதி மனோகரி ராமநாதன் ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.
இதன்போது கருத்துத் தெரிவித்த ஆணைக்குழுவின் தலைவர் காணாமற்போனோரின் உறவினர்கள் அச்சமின்றி எமது ஆணைக் குழுவில் முறைப்பாடுகளைச் செய்ய முடியும். இதில் ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் எங்களிடம் நேரடியாக முறைப்பாடு செய்யலாம்.
முடியுமானவரை காணாமற் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிந்து உதவுவதற்கு முயற்சிக்கின்றோம். எமது விசாரணைகள் சுயாதீனமான முறையில் முன்னெடுக்கப் படும்.
பெரும்பாலானவர்கள் கொழும்பில் நடந்த ஆள்கடத்தல்களையும் விசாரிக்குமாறு கோருகின்றனர். இது தொடர்பில் நாம் ஆராய வேண்டியுள்ளது.
இதேவேளை வடக்

21

## காணி சுவீகரிப்பு அலுவலராக இனிப் பிரதேச செயலர்கள்
### வேறு அதிகாரிகள் முன்வராமையால்

யாழ்ப்பாணம், நவ.8
வடக்கில் காணி சுவீகரிப்புத் தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எந்தவொரு அதிகாரிகளும் முன்வராத நிலையில், ஒவ்வொரு பிரதேச செயலர்களையும் அந்தப் பகுதிக்குரிய சுவீகரிப்பு அலுவலராக நியமிக்கக் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நம்பகரமாக அறியமுடிகின்றது.
வடக்கில் இராணுவத்தினருக்குத் தேவையான காணிகளைச் சுவீகரிப்பதற்காக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் ஒவ்

21

## இசைப்பிரியாவுக்கு நடந்தது போன்று பலருக்கு நேர்ந்தது

### மாகாண சபை உறுப்பினர் கருத்து

யாழ்ப்பாணம், நவ.08

இசைப் பிரியாவை வைத்து அரசியல் செய்வது வேதனையளிக்கின்றது. மாண்டது இசைப்பிரியா மட்டுமல்ல. இன்னும் பல பெண்கள் இறுதிப் போரின் போது இவ்வாறு மாண்டுபோயிருக்கின்றனர் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் அயூப் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை வட்டக்கண்டல்தமிழ் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது நம்பிக்கை வைத்து தமிழ் மக்கள் வாக்களித்ததன்மூலம் 30 ஆசனங்களை நாம் பெற்றுக்கொண்டோம். இது மக்களின் வெற்றி.

எனவே தேர்தல் காலத்தில் மட்டும் மக்களுடன் நெருக்கமாக இருந்துவிட்டு, பின்னர் விலகும் நிலை வடக்கு மாகாண சபையில் இருக்கக் கூடாது. அது மட்டுமல்ல எமக்கு மக்களின் பங்களிப்பு வேண்டும் என விரும்புகின்றோம். வடக்கில் தமிழ் - முஸ்லிம் உறவு வலுப்பட வேண்டும். இரு சமூகங்களுக்கும் இடையில் உடன்பாடுகள் இருக்க வேண்டும்.

தமிழ் சமூகத்தின் அரசியல் ஒழுங்கில் சுயநிர்ணய உரிமை, தேசியம் குறித்து பரவலாக பேசப்படுகின்றது. முஸ்லிம்களும் இது தொடர்பாக அறிமுகத்தை அதிகப்படுத்த வேண்டும். நீதி கிடைப்பதற்காக முயற்சி செய்ய வேண்டும் - என்றார். (ஜ-10)

## மாகாண சபைகளும் வங்கிகளில் கடன்

### வங்குரோத்தில் ஓடுகிறது அரச நிர்வாகம்

கொழும்பு, நவ.8

மாகாண சபைகளை இயக்குவதற்கு அந்தந்த மாகாண சபை நிர்வாகத்திடம் போதிய பணம் இன்மையால் வங்கிகளிலிருந்து கடன் பெறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பளக் கொடுப்பனவுகள் உள்ளிட்ட அன்றாட நிர்வாகச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு, மாகாண சபைகள் வருமானம் பெற முடியாத நிலை காணப்படுகின்றது. இவ்வாறு மாகாண சபைகள் திறனற்றுக் காணப்படுவதாலேயே வங்கிகளில் கடன் பெற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

இந்த நிலைமை இனியும் தொடருமானால் மாகாண சபைகளின் செயற்பாடுகள் தொடர்பில் பாரதூரமான சிக்கல்கள் எழக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதத்தில், மாகாண சபைகளின் கீழ் இயங்கும் பெருமளவு நிறுவனங்களின் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு வங்கி மேலதிகப் பற்றுகள் மூலமாக அரச வங்கிகளிலிருந்து பெரும் கடன் தொகை பெறப்பட்டுள்ளது.

இந்தச் சிக்கலுக்கு விரைவில் தீர்வு கிடைக்காது போனால், தற்போது சபைகளை நடத்திச் செல்வதற்கு மத்திய அரசிடமிருந்து வழங்கப்படும் தொகையை இரு மடங்காக வழங்க வேண்டி ஏற்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-5-22)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், நவ.8

தீவக கல்வி வலயத்துக்குட்பட்ட காரைநகர் கோட்டப் பாடசாலைகளில் சுகாதாரக் கழகங்களை மேம்படுத்துவதற்கான செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வைத்திய கலாநிதி வி.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் காரைநகர் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் இருந்து ஆசிரியர் ஒருவரும் ஐந்து மாணவர்களும் கலந்து கொள்ளுமாறு தீவகக் கல்விப் பணிப்பாளர் நிஜோண் குயின்ரஸ் அறிவித்துள்ளார். (வ-7)



கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாள் இன்றாகும். இன்று முருகன் ஆலயங்களில் சூரன் போர்த் திருவிழா நடைபெறவுள்ளது. இந்த நிலையில் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் சூர பத்மன் வீதியுலா வந்து மக்களுக்கு காட்சி கொடுத்தான். (ஜ-9-17)

## நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவர் சில்வா காலமானார்

கொழும்பு, நவ.8

நல்லிணக்க ஆணைக் குழுவின் தலைவரும், முன்னாள் சட்டமா அதிபருமான சி.ஆர்.டி.சில்வா நேற்று வியாழக்கிழமை காலமானார்.



சுகவீனமுற்ற நிலையில் கொழும்பு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே அவர் நேற்றுக் காலை காலமானார்.

இலங்கையில் இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் ஆராயவென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக் குழுவின் தலைவராக சி. ஆர். டி.சில்வா செயற்பட்டார்.

இவரது மனைவி கமலினி டி. சில்வா நீதியமைச்சின் செயலாளராகப் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (து-5)

## ஒருங்கிணைப்பு கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.8

கிளிநொச்சி மாவட்டத்துக் குரிய மாவட்ட ஒருங்கிணைப் புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை கிளிநொச்சி மாவட்ட கூட்டு றவு சபை மண்டபத்தில் மு.ப. 10 மணிக்கு இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

## வருமானம் இன்மையால் சம்பளம் நிலுவையில்

### இ.போ.ச. யாழ்.சாலை பணியாளர்கள் அவதி

யாழ்ப்பாணம், நவ.8

இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலைப் பணியாளர்களுக்குரிய செப்ரெம்பர் மாதச் சம்பளமாக 9 இலட்சம் ரூபா பணம் பணியாளர்களுக்கு இதுவரை செலுத்தப்படவில்லை.

போதிய வருமானமின்மையே அதற்குக் காரணம் என்று சாலை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலைப் பணியாளர்களுக்கு என மாதாந்தம் 78 இலட்சம் ரூபா பணம் சம்பளமாக வழங்கப்பட வேண்டியுள்ளது.

பணியில் ஈடுபடுத்தப்படும் பஸ்கள் மூலமான வருமானம் போதியதாக இல்லை. அதனால் தேவையானளவு பணம் யாழ்.சாலைக்குக் கிடைப்பதில்லை. கிடைக்கும் நிதி மூலமே பஸ்களுக்கு எரிபொருள் கொள்வனவு செய்யப்படுகிறது. மிகுதிப் பணத்தையே பணியாளர்களுக்கு மாதாந்தச் சம்பளமாக வழங்கப்படுகிறது. அவ்வாறு சம்பளமாக வழங்குவதற்கு ஒரு மாதத்துக்கு 78 இலட்சம் ரூபா பணம் தேவைப்படுகிறது. சம்பளத்தைக் கூட பணியாளர்களுக்கு உரிய திகதிக்குள் வழங்கமுடியாதுள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாத சம்பளம் இன்னும் கொடுத்து முடிவடையவில்லை. தவிர ஒக்ரோபர் மாதச் சம்பளம் வழங்குவதற்கான திகதியும் அண்மித்துக் கொண்டிருக்கிறது. விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கையை எடுத்து வருகிறோம் என்று மேலும் தெரிவித்தனர். (ஜ-4)

## ஒரே நேரத்தில் இரு பஸ்கள் ஒரே வழித்தடத்தில் சேவையில்

### சாரதிகளிடையே மோதல்

யாழ்ப்பாணம், நவ.08

**குறிக்கப்பட்ட நேரத்தில் செல்லாமல் பயணிகளை ஏற்றிக்கொண்டு வேகம் குறைந்த சேவையில் பயணித்துக் கொண்டிருந்த போது பின் தொடர்ந்து வந்த 768 வழி சேவை பஸ் முந்திச் செல்ல முற்பட்டுள்ளது.**

ஒன்றை ஒன்று தொடர்ந்து வந்த இரண்டு பஸ்களின் சாரதிகள் கைகலப்பில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை இணுவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

769 சேவையில் ஈடுபடும் தெல்லிப்பழை தனியார் பஸ்ஸும், 768 சேவையில் ஈடுபடும் அளவெட்டி பஸ்ஸும் நேற்றுக் காலை 6.10 மணியளவில் குறித்த சேவை நிலையங்களில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளுடன் புறப்பட்டுள்ளன. 769 வழிச் சேவை தனியார் பஸ் சுன்னாகம் பஸ் தரிப்பிடத்தில் நேரக்கணிப்பாளரிடம் நேரத்தைப் பதிவு செய்வதற்காகத் தரித்து நின்றது. இதே வேளை 768 அளவெட்டி சேவை பஸ் பின்னால் வந்ததை அவதானித்து விட்டு 769 பஸ் சாரதி தரிப்பிடத்திலிருந்து பஸ்ஸை நகர்த்தியுள்ளார்.

769 வழி பஸ் குறிக்கப்பட்ட நேரத்தில் செல்லாமல் பயணிகளை ஏற்றிக்கொண்டு வேகம் குறைந்த சேவையில் பயணித்துக் கொண்டிருந்த போது பின் தொடர்ந்து வந்த 768 வழி சேவை பஸ் முந்திச் செல்ல முற்பட்டுள்ளது. எனினும் அதற்கு 769 வழி பஸ் சாரதி வழி விடவில்லை.

இதன் காரணமாக 769 வழி பஸ்ஸை இடைமறித்து சாரதியை தாக்கியுள்ளார் 768 இலக்க பஸ் சாரதி. இதனால் இருவருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

குறித்த நேரத்தில் தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபட வேண்டும் என்பதற்காக நேரக் கணிப்பாளர்கள் இந்த வழித்தடத்தில் கடமையாற்றுகின்றார்கள். எனினும் அவர்கள் இது குறித்து கவனம் எடுக்கவில்லை. இதன் காரணமாக சாரதிகளுக்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டதாக பயணிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தனியார் பஸ் சங்கத்தின் உப தலைவர் பொ. கெங்காதரனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது:

சம்பவத்தில் தொடர்புடைய இரு சாரதிகளும் விசாரணைகள் முடியும் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது - என்றார். (ஜ-14-5)

## மின் தடை

யாழ்ப்பாணம், நவ.8

மின் பரிமாற்றல் வலையமைப்பில் இணைப்புகளை சீர் செய்வதற்காகவும், பராமரிப்பு மற்றும் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை பின்வரும் இடங்களில் மின் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

நெடுங்குளம், மணியந்தோட்டம், துண்டி, எழிலூர், கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், நாயன்மார்கட்டு, அரியாலை, செம்மணி, ஈஞ்சடி வைரவர் கோயிலடி பிரதேசம், பரமேஸ்வரா பிரதேசம், தபால் பெட்டி பிரதேசம், ஆரிய குளம் பிரதேசம், கந்தர்மடம் வேம்படி, ஸ்ரான்லி வீதி, முலவை, கொன்வன்ற், குரு நகர், பாசையூர், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம் மற்றும் பண்ணைப் பிரதேசம் ஆகிய இடங்களிலேயே மின் தடைப்பட்டிருக்கும். (து-400)

## மாற்று வலுவுடையோருக்கு சாரதி அனுமதி கிளிநொச்சியில் மருத்துவ பரிசோதனை



கிளிநொச்சி, நவ. 8

கிளிநொச்சி மாவட்டத்தில் மாற்று வலுவுள்ளோருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் பெற்று கொள்வதற்கான மருத்துவ பரிசோதனைகள் நேற்று மாவட்டச் செயலக வளாகத்தில் இடம்பெற்றன.

மேலதிக அரச அதிபர் செ. ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மருத்துவ பரிசோதனைகளை கொழும்பிலிருந்து வருகை தந்த விஷேட மருத்துவ அதிகாரிகள் மேற்கொண்டனர்.

மருத்துவ பரிசோதனையில் சுமார் 200 இற்கு மேற்பட்ட மாற்று வலுவுள்ளோர் கலந்து கொண்டனர். ஆரம்ப கட்டப் பரிசோதனைகளின் பின்னர் மோட்டார் சைக்கிள், ஓட்டோ, கார் ஆகியவை செலுத்தக் கூடிய 70 பேர் தெரிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இவர்களுக்கான சாரதி அனுமதிப் பத்திரம் எழுத்துப் பரீட்சை, வாகனம் செலுத்தும் பரீட்சை போன்ற வழமையான நடவடிக்கைகளின் பின்னர் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-9)

## கடை சேதம்; 8 பேருக்கு மறியல்

தென்மராட்சி, நவ.8
மந்துவில் கிழக்கு சின்னச் சந்தையில் கடையை அழித்து சேதமாக்கிய எட்டுப் பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் உத்தரவிடப்பட்டது.
செவ்வாய்க்கிழமை காலையில் கடை திறக்கச் சென்ற வேளையில் கடை அடித்து நொருக்கப்பட்டிருந்ததைக் கண்ட வர்த்தகர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.
விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மந்துவில் கிழக்கைச் சேர்ந்த எட்டுப் பேரைக் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர். (வ-9)

## வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், நவ.8
நல்லூர் பிரதேச சபையின் 2014ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற பிரதேச சபையின் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.
அடுத்த வருடத்துக்கான வரவு ரூபா 80.5 மில்லியனாகவும் செலவீனங்கள் ரூபா 2 கோடி 61 லட்சத்து 64 ஆயிரத்து 996 ஆகவும் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. பிரதேச சபைக் கூட்டம் நல் லூர் பிரதேச சபைத் தலை வர் ப.வசந்தகுமார் தலை மையில் நடைபெற்றது. (வ-7)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு பிசியோதெரபி

தென்மராட்சி, நவ.8
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு உடற்கூற்றுப் பயிற்சியாளர் (பிசியோதெரபி) புதன்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றிய இவர் அங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.
இந்த உத்தியோகத்தர் கடமைகள் பொறுப்பேற்றதையடுத்து திங்கள் தொடக் கம் சனிக்கிழமை வரை சாவகச்சேரி வைத்தியசாலையில் உடற் ப்யிற்சி பரிசோதனைகள் இடம்பெறும் என்று வைத்தியசாலை விளம்பரப் பலகையில் அறிவிக்கப்பட்டுள்ளது.
சாவகச்சேரி வைத்தியசாலையில் இதுவரை மந்திகை வைத்தியசாலையிலிருந்து வரும் உத்தியோகத்தர் ஒருவர் வாரத்தில் இரு நாள்கள் நோயாளர்களுக்கு உடற் பயிற்சிகள் வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)



கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் ஐக்கிய நாடுகள் நிறுவனங்களில் கடமை புரியும் உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் காலை ஐ.நா.தின நிகழ்வுகளையும் வீதிப் போக்குவரத்து விழிப்புணர்வு நிகழ்வையும் ஏ-9 வீதியில் நடத்தினர். பொதுமக்கள் வீதிப்போக்குவரத்து தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய விழிப்புணர்வு அட்டைகளைத் தாங்கியவாறு வீதியோரத்தில் நின்றனர். பின் அங்கிருந்து ஊர்வலமாக மாவட்டச் செயலகத்துக்கு சென்று மேலதிக அரச அதிபரிடம் மனு கையளித்தனர். (வ-9)

# வழி வாய்க்காலை மறித்து வேலி; வலி.கிழக்கு பிரதேச சபை வழக்கு

யாழ்ப்பாணம், நவ.08
தோட்டத்துக்குச் செல்லும் வழி வாய்க்காலைக் குறுக் கறுத்து பிரதேச சபை யினரின் அனுமதி பெறப் படாது முட்கம்பி வேலி அமைப்பதற்காக தூண் நிறுவப்பட்டுள்ளமைக்கு எதிராக வலி. கிழக்குப் பிரதேச சபையினர் யாழ். நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்துள்ளனர்.
வழிவாய்க்காலைக் குறுக் கறுத்து முட்கம்பி வேலி அமைப்பதற்கு எதிராக விவசாயியும் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.
கோப்பாய் கல்வியியற் கல்லூரிந்ய அண்மித்து உள்ள தோட்டக்காரரே பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதா வது;
குறித்த விவசாயி குறித்த காணியில் நீண்ட காலமாக தோட்டம் செய்து வருகிறார். அதற்கு சற்றுத் தூரத்திலுள்ள பொதுக் கிணற்றிலிருந்து பயிர்களுக்கு நீர் இறைத்து வருகிறார். தோட்டத்துக்கும் பொதுக் கிணற்றுக்கும் இடையே தனியார் காணி ஒன்று உள்ளது.
அந்தக் காணியின் ஒரு பகுதியாக பொதுக் கிணற்றிலிருந்து தோட்டத்துக்குச் செல்வதற்கென சிறு வழி வாய்க்காலும் உள்ளது. என்று காணி உறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
எனினும் இவற்றைக் கவனத்தில் கொள்ளாத காணி உரிமையாளர், வழி வாய்க்காலை குறுக்கறுத்து தூண் நிறுவி முட்கம்பி வேலி அமைத்துள்ளார். அதனால் தோட்டத்துக்குச் சென்று வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வழிவாய்க் கால் இருப்பது பற்றி பலர் காணி உரிமையாளருக்கு எடுத்துக் கூறியும் அவர் அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படு கிறது.
இது தொடர்பில் வலி.கிழக்கு பிரதேச சபையினருக்குத் தகவல் தெரி விக்கப்பட்டது. பிரதேச சபையினரின் அனுமதி பெறப்படாது தூண்நிறுவ முடியாது என்று பிரதேச சபையின ரின் கோப்பாய் உப அலுவலகத்தினர் காணி உரிமையாளருக்குத் தெரிவித்திருந்தனர் என்றும், அதனையும் கவனத்தில் கொள் ளாது தூண் நிறுவியதனால், சபையினர் காணி உரிமை யாளருக்கு எதிராக நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

## 19 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு

யாழ்ப்பாணம், நவ. 8
யாழ்.மாநகர சபையின் வியாபார உரிமம் அல்லது வரியை செலுத்தத் தவறிய 19 வர்த்தகர்களுக்கு எதிராக யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டின் யாழ்.மாநகர சபையின் வியாபார உரிமம் அல்லது வரியை செலுத்தத் தவறியவர்கள் மீது சட்ட நடவடிக்கையாக யாழ்.மாநகர சபை இந்த வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளது. இதற்கமைவாக கடந்த மாதம் 29 ஆம் திகதி 19 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (வ-14)

## 21 அடி உயரமான பாலமுருகன் உருவச்சிலை இன்று திறந்து வைப்பு



நெடுங்கேணி, நவ.8
நெடுங்கேணி கதிர்வேலாயுத சுவாமி ஆலய முன்றலில் புதிதாக அமைக்கப்பட்ட 21 அடி உயரமான பாலமுருகன் உருவச்சிலை இன்று வெள்ளிக்கிழமை ஆலய பிரதம குருக்களான ஜெயசுதக் குருக்களால் திறந்து வைக்கப்படவுள்ளது. ஆலயப் பிரதம குருக்களின் ஞான சக்தியினால் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படும் இந்தச் சிலை ஆலயத்தின் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு முன்பாக 21 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
இந்தச் சிலை பிரதம குருக்கள் மற்றும் நெடுங்கேணிப் பகுதி மக்களின் 4 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலையை அளவெட்டி மேற்கு கஜேந்திரன் அமைத்துள்ளார். (க-435)

# வீடழிப்பை நிறுத்துங்கள்

## யாழ்.நகரில் தம்பிராசா உண்ணா விரதம்

யாழ்ப்பாணம், நவ.8
வலி.வடக்கில் இராணுவத் தினரால் பொதுமக்களின் வீடுகள் இடிக்கப்படுவதை நிறுத்துவதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் மற்றும் சில கோரிக்கைகளையும் முன்வைத்தும் மு.தம்பி ராசா என்பவர் யாழ்.முனீஸ்வரன் கோயில் முன்பாக உணவு தவிர்ப்புப் பேராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.
தம்பிராசா வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த போதும், வவுனியாவிலிருந்து நல்லூர் கந்த சுவாமி கோயில் வரை நடைபயணம்மேற்கொண்டிருந்தார். நாளை சனிக்கிழமை மீண்டும் நல்லூரிலிருந்து வலி.வடக்கு வரையான நடைபயணத்தை ஆரம்பிக்க உள்ளதாக அவர் தெரிவித்தார்.



"ஆழத் துயர்ப்படும் ஈழத் தமிழரின் வாழ்வு, தீர்வு உலகிடம் அல்ல இந்திய மண்ணிடமே," "இந்திய தேசமே ஈழத் தமிழரின் வாழ்வில் கருணை எப்போது?" "ஈழ தேசத்தை உணர்ந்து எழுந்த இந்திய தேசமே ஈழத் தமிழரின் வாழ்வை வளர்த்தெடுப்பது எப்போது?" "விடுவிக்கப்பட்ட அரசியல் கைதிகள் காணாமற்போவது எப்படி?" "விடுதலை பெற்ற அரசியல் கைதிகளின் பாதுகாப்பை அரசே உறுதிசெய்", "விடுவிக்கப்பட்ட அரசியல் கைதிகளின் இருப்பை சர்வ தேசமே கவனி!", "விடுதலை பெற்றும் உயிருக்கு அஞ்சும் அரசியல் கைதிகளை சர்வதேசமே காப்பாற்று" ஆகிய வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் நேற்றைய உண்ணா விரதத்தின்போது அவர் தனது அருகில் காட்சிப் படுத்தி இருந்தார்.
வலி.வடக்கில் பொது மக்களின் காணிகளிலுள்ள வீடுகளை இராணுவத்தினர் இடித்தழிப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஜனாதிபதி மஹிந்தவுடன் கலந்துரையாடிய போது அதனைத் தடுத்து நிறுத்துவதாக ஜனாதிபதி உறுதி அளித்திருந்தார். அந்த உறுதி மொழியை ஜனாதிபதி செயலில் காட்ட வேண்டும் என்றும் அவர் நேற்றுத் தெரிவித்தார். (ஒ-4-7-17-21-86)

# சாரணர் இயக்கத்தில் இணைவதால் மாணவர்களுக்கு உயர்ந்த பண்புகள்

## மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.8

மாணவர்கள் பாடசாலைப் பருவத்தில் சாரணர் இயக்கத்தில் இணைந்து செயற்படும் போது சிறந்த தலைமைத்துவப் பண்பையும் நல்ல ஒழுக்கத்தையும் பெறுகின்றனர்.

இன்றைய இளம் மாணவ சமுதாயத்தினர் ஏதாவது ஓர் அமைப்புடன் தம்மை இணைப்பதன் ஊடாகவே தம்மை வளர்த்துக் கொள்ள முடியும்.

இவ்வாறு தெரிவித்தார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணித்தலைவருமான பா.கஜதீபன்.

யாழ். மாவட்ட சாரணர் சங்கத்தின் தீபாவளித் திருநாள் நிகழ்வு யாழ். மத்திய கல்லூரியின் சாரணர் சங்கத்தின் மாவட்ட ஆணையாளர் தேவரஞ்சன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனும் சிறப்பு விருந்தினராக வலி.வடக்குப் பிரதேச சபை உறுப்பினர் சி.ஹரிகரனும் கலந்து கொண்டனர்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய கஜதீபன் ஏராள மான கழகங்கள் பாடசாலை மாணவர் மத்தியில் செயற்படுகின்றன. இதில் ஏதாவது ஒரு கழகத்தில் மாணவர்கள் தம்மைக் கட்டாயம் இணைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர்கள் மத்தியில் மனத்தைரியம் ஏற்படும். சமூகத்தில் ஒரு சிறந்த நற்பிரஜையாகத் தம்மை உருவாக்கிக் கொள்ள முடியும். எதையும் இலகுவாக எதிர்கொண்டு போராடுகின்ற போராட்ட குணம் உருவாகும்.

சாரணர் கழகங்களினூடாக மாணவர்கள் வாழ்க்கைக்குத் தேவையான சிறந்த தலைமைத்துவம், ஆளுமை, நேர முகாமைத்துவம், ஒழுக்கம், விவேகம், புத்திசாதுரியம் போன்ற பாடங்களைக் கற்கின்றனர்.

இதன் மூலம் அவர்கள் எதிர்காலத்தில் நாட்டை வழி நடத்தும் சிறந்த தலைவர்களாகத் தம்மை வளர்த்துக் கொள்கின்றனர். - என்றார். (க-5)

## கோழி நோய் தடை மருந்து

# சனிக்கிழமைகளில் வழங்கப்படும்

அச்சுவேலி, நவ. 8

"கோப்பாய் பிரதேச கால் நடை வைத்திய அதிகாரியின் அச்சுவேலி உப அலு வலகத்தில் இந்த வாரத்தில் இருந்து பிரதி சனிக்கிழமை தோறும் கோழிகளுக்கான நோய்த் தடை மருந்துகள் வழங்கப்படவுள்ளன. உரிய நேரத்துக்கு தடை மருந்துகளைப் பெற்றுப் பயன்படுத்துமாறு" யாழ்.மாவட்ட கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வக்சலா அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

அச்சுவேலி உப அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமைகளில் மட்டும் கோழி நோய்களுக்கான தடை மருந்து வழங்கப்படும் என கடந்தவாரம் கோப்பாய் கால்நடை வைத்தியரால் அறிவித்தல் விடுக்கப்பட் டது.

இது தொடர்பாக வலி. கிழக்கு பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் பண்ணையாளர்கள் திணைக்களப் பணிப்பாளரின் கவனத்துக் குக் கொண்டுவந்து சனிக் கிழமைகளில் தடை மருந் துகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கோரி இருந்தனர். அதனை ஏற்றுக்கொண்ட திணைக்களப் பணிப்பாளர் இந்த வாரத்தில் இருந்து பிரதி சனிக்கிழமைகளில் கோழி நோய்த் தடை மருந்துகளை அச்சுவேலி உப அலுவலகத்தில் வைத்து வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளது என அறிவித்துள்ளார். (வ-11)

### பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ளன

யாழ்ப்பாணம், நவ.08

யாழ்.மத்திய கல்லூரியில் 2012 ஆம் ஆண்டு சிங்களம், ஆங்கில மொழி கற்றவர்களின் இறுதிப் பெறுபேறுகள் தேசிய கல்வி நிறுவகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் பெறுபேற்றினைப் பெறுவதற்கான கட்டணத்தை இலங்கை வங்கியில் செலுத்திப் பற்றுச் சீட்டை நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை யாழ். மத்திய கல்லூரியில் ஒப்படைக்குமாறு இணைப்பு நிலையச் செயலாளர் அறிவித்துள்ளார். (கு-400)


## மரண அறிவித்தல்

### சிவசாமி செம்பொற்சோதி (பத்தர்)



அளவெட்டி வடக்கு கணேஸ்வரத்தைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசாமி செம்பொற்சோதி (பத்தர்) நேற்று (07.11.2013) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசாமிப்பத்தர்-மற்றும் புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், ரமணி அம்மாளின் அன்புக் கணவரும், சுலோஜினி தேவியின் அன்புச் சகோதரனும், பத்மநாதன், ஆனந்தராஜா, சிவராசா, வதனி, ஆகியோரின் மைத்துனரும், சுகன்ஜா, வேணுஜா, சங்கீர்த்தா, யாதவன், அருணன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கபிலன், டனிஸ்குமார், கனிஷ்டா ஆகியோரின் அன்பு மாமனும், அனுசன், அபர்ணா, ஆதீசன், ஆஞ்சயன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2013) வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3.00 மணியள வில் தகனக்கிரியைக்காக குசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 63, இலுப்பையடி, ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருநாவுக்கரசு சிவகுமாரன்



உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு சிவகுமாரன் நேற்று (07.11.2013) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வர்களான நாகரட்ணம், தங்கரட்ணம் ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற முத்தையா மாஸ்ரரின் பெறாமகனும், இந்திராணியின்(ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்புக் கணவரும், ரஜீவி (காணி நிர்வாகத் திணைக்களம்) கோபிநாத் (மூதாலாம் வருட மாணவன், மருத்துவ பீடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்திரபுரம், உடுவில், சுன்னாகம் 021 2255319

தகவல்: மனைவி, பிள்ளைகள்

## தவறிவிட்டது

தமிழேந்தி சண்முகரத்தினம் என்பவரது 97022429V இலக்க, NIC, ATMCART, லைசன்ஸ் காப்புறுதி. வரிச்சிட்டை அடங்கிய சிறிய பேர்ஸ் நல்லூர் வைமன் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்து தவவும்.

தொடர்பு- 077 3474692, 021 2227075

## அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபை வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய அங்கத்தவர் தெரிவும்

27.10.2013 ஆம் திகதி நடைபெற இருந்த தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலனசபை பொதுக்கூட்டம் உபயகாரர் வரவு போதியளவு இன்மையால் 10.11.2013 ஞாயிற்றுக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது. எனவே அன் றைய தினம் உபயகாரர்கள் வருகைதந்து பரிபாலன சபை புதிய அங்கத்தவர்கள் தெரி விலும் ஏனைய வழமையான நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு தாழ்மையாக கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

## தேங்காய் விற்பனைக்கு

மலிவான விலையில் தேங்காய் விற்பனைக்கு மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

தொடர்பு: 635,K.K.S. றோட்.
(பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில் அருகில்)
075 6700680

## வீடு வாடகைக்கு

யாழ். நகரில் புதிதாக அமைக்கப்பட்ட கீழ் வீடு வாடகைக்கு உண்டு. இரண்டு அறை. பெரிய Hall, Attached bath (சிறிய குடும்பம் விரும்பத்தக் கது) முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்டது.

தொடர்பு: 077 5005972

## நல்லூர் பிரதேச சபை கொக்குவில் உப அலுவலகம் ஆதனப் பெயர் மாற்றம்

### வட்டாரம் - 02, நந்தாவில் ஒழுங்கை, ஆதன இலக்கம் 17

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கொக்குவில் உப அலுவலக வட்டாரம் - 02, நந்தாவில் ஒழுங்கை, 17 என்ற இலக்க ஆதனம் செல்லப்பா ஆறுமுகம் எனும் பெயரில் எமது ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது.

இவ் ஆதனத்தை ஆறுமுகராசா கைம்பெண் சறோஜினிதேவி என்பவர் நொத்தாரிசு P.புலோகசிங்கம் என்பவரது 1168 ஆம் இலக்க 20.11.2005ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் தனது பெயருக்கு வெளிப்படுத்தல் செய்து நொத்தாரிசு அ.இராஜரட்ணம் என்பவரது 4859 ஆம் இலக்க 11.11.2008 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் சாந்தினிகேதன் பெண் புஸ்பராணி என்பவருக்கு விற்றுள்ளார். மீண்டும் 8732 ஆம் இலக்க 31.01.2012 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் பொ.குகநேசன் பெண் திருமகள்தேவிக்கு விற்றுள்ளார்.

இவ் ஆதனத்தை பொ.குகநேசன் பெண் திருமகள்தேவி என்ற பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார்கள். இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பொ.குகநேசன் பெண் திருமகள்தேவிக்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ப. வசந்தகுமார்
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

(F/13591) (45.6.3)

## மரண அறிவித்தல்

### ஆரோக்கிய நாதர் வில்விறட் றொபின் கெனடி (சந்திரகுமார்)



பாஷையூரைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட வில்விறட் றொபின் கெனடி கடந்த (02.11. 2013) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆரோக் கியநாதர் மற்றும் சிவக்கீனம்மா தம்பதியரின் அன்பு மக னும், காலஞ் சென்றவர்களான ஜோசேப்பு -ஆகத்தம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வதியின் (ஜேர்மனி) அன்புக் கணவரும், மொறிஸ், நிசா, மிலான் (ஜேர்மனி ) ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரி, ரஜனி (லண்டன்), சுகந்தி, சுகர்ணா, வந்தனா, ஜேம்ஸ் (ஜேர்மனி), யூலி யஸ் (பிரான்ஸ்), ஈசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.11.2013) வெள்ளிக் கிழமை ஜேர்மனியில் நல்லடக் கம் செய்யப்படும் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் நாளை (09.11.2013) சனிக்கிழமை காலை6.00 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2ஆம் குறுக்குத் தெரு, பாஷையூர், யாழ்ப் பாணம்.

தகவல்: தாய், சகோதரர்கள், மைத்துனர்கள், மருமக்கள்

(39816)

பிரதேச செயலகங்களில் கடமையாற்றும்

## ஆண் அலுவலர்களுக்கு சீருடை வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.8

யாழ்.மாவட்ட பிரதேச செயலங்களில் கடமையாற்றும் ஆண் அலுவலர்களுக்கு சீருடை வழங்கும் நடவடிக்கைகளை யாழ்.மாவட்ட செயலகம் ஆரம்பித்துள்ளதாகப் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர்யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலங்களிலும் கடமையாற்றும் ஆண் ஊழியர்கள் புதன் கிழமைகளில் நீலச் சேட்டும் நீலக் காற்சட்டையும் பெண்கள் நீலச் சேலையும் அணிய வேண்டும் என்று மாவட்ட செயலகம் அறிவித்தது.

அதனைத் தொடர்ந்து செயலகமே அவர்களிடமிருந்து பணத்தைப் பெற்று சேலைகள் மற்றும் சேட், நீல காற்சட்டைக்கான துணிகளையும் கொள்வனவு செய்தும் வழங்கியிருந்தது.

இதனால் அரச ஊழியர்கள் மத்தியில் பலத்த விமர்சனங்கள் எழுந்த போதிலும், அது அரச உயர் அதிகாரிகளின் பணிப்புரை என்பதனால் எதனையும் செய்ய முடியாத நிலையில் இருந்தனர். குறிப்பிட்ட அரச அதிபர் இடமாற்றம் பெற்ற நிலையில் கடந்த பல மாதங்களாகத் தமது வசதிக்கு ஏற்ப சாதாரணமான உடைகளை அணிந்து வந்தனர்.

தற்போது மீண்டும் யாழ்.மாவட்ட செயலகம் ஆண் அலுவலர்களுக்குச் சீருடை வழங்கவுள்ளதாகவும் அது குறித்து விவரத்தை அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலங்களுக்கு அறிவித்துள்ளது. இதனால் குறைந்த சம்பளத்துடன் கடமையாற்றும் பல்வேறு தரத்திலும் உள்ள ஊழியர்கள் மனம் நொந்து விசனம் தெரிவிக்கின்றனர்.

பொதுவாக அரச ஊழியர்களுக்குச் சீருடை வழங்குவதாக இருந்தால் சீருடைக்கான கொடுப்பனவுகள் அரசினால் வழங்கப்பட வேண்டும் என நிதிப்பிரமாணத்திலும் தாபனக் கோவையிலும் அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# நெடுந்தீவில் புத்தர் சிலை

## மாகாண சபை உறுப்பினர்களான விந்தன், பரஞ்சோதி கண்டனம்

யாழ்ப்பாணம், நவ.8

நெடுந்தீவு மேற்கு, கோட்டைக்காடு பகுதியில் வெடியரசன் கோட்டைப் பகுதியில் நெடுந்தீவுப் பொலிஸாரால் வைக்கப்பட்ட புத்தர் சிலை தொடர்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான கே. என்.விந்தன் கனகரத்தினம், அ.பரஞ்சோதி ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வடக்கு மாகாண சபையின் கவனத்துக்குக் கொண்டுவரவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:- யாழ்ப்பாணம், நயினாதீவுப் பகுதிகளில் நீண்ட காலமாக உள்ள பௌத்த விகாரைகள் உள்ள நிலையில் பௌத்த மதத்தினரோ சிங்கள மக்களோ இல்லாத வேலணைத்துறை, நெடுந்தீவுப் பகுதியிலும் ஏனைய பகுதிகளிலும் புத்தர் சிலைகளை அமைப்பதும், நயினாதீவில் மேலும் ஒரு விகாரை அமைப்பதும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

திட்டமிட்ட முறையில்பௌத்த விகாரைகளை அமைப்பது எதிர்காலத்தில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்கான தூர நோக்குடன் மேற்கொள்ளப்படும் செயற்பாடாகவே தெரிகின்றது. இந்துக்கள், கத்தோலிக்க மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் புத்தர் சிலை அமைப்பது பௌத்தத்தையும் அதன் தார்மீகத்தையும் அவமதிக்கும் செயலாகும்- என்றனர். (வ-7)

"–"

திட்டமிட்ட முறையில் பௌத்த விகாரைகளை அமைப்பது எதிர்காலத்தில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்கான தூர நோக்குடன் மேற்கொள்ளப்படும் செயற்பாடாகவே தெரிகின்றது.

## விபத்தில் ஒருவருக்கு கால் முறிந்தது



வலி.வடக்கு, நவ. 7

மருதனார் மடத்தில் இடம்பெற்ற ஓட்டோ, மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் கால் முறிந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் இணுவிலைச் சேர்ந்த யோகராசா நயித் (வயது-25) என்பவரே காயமடைந்தவராவர். அன்றைய இரவு மருதனார்மடம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்பிக்கொண்டு புறப்பட்ட ஓட்டோவும் காங்கேசன்துறை வீதி வழியாக வந்த மோட்டார் சைக்கிளும் மோதுண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்து குறித்து சுன்னாகம் பொலிஸாரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (வ-86)

## 9 மாதங்களின் பின் மதகு திருத்தப் பணி

வடமராட்சி, நவ.8

அல்வாய் மாலிசந்தி- வியாபாரி மூலை வீதியில் உடைந்து விழுந்த மதகை 9 மாதங்களின் பின்னர் புதிதாகத் திருத்தி அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன.

லொறி ஒன்று பயணிக்கும் போது உடைந்து விழுந்த குறித்த மதகு 9 மாதங்களுக்கு மேலாகத் திருத்தப்படவில்லை. இதனால் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கு வந்து சிரமத்தின் மத்தியில் மாற்றுப் பாதைகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

போதிய நிதியின்மையால் திருத்தப்படாத குறித்த மதகைத் திருத்தித் தருமாறு இதனூடாகப் பயணிக்கும் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அதிகாரிகளுக்குக் கோரிக்கை விடுத்திருந்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

அதனையடுத்துப் பல மாதங்களின் பின்னர் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு நிதி ஒதுக்கப்பட்டதையடுத்து உடைந்த மதகுக்குப் பதிலாக புதிய பாலம் அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன. (வ-8)

தீவக மக்கள் பிரச்சினைக்கு

## முதலமைச்சருடன் கலந்துரையாடி விரைவில் தீர்வு பெற்றுத் தரப்படும்

### தீவகத்துக்குச் சென்ற மாகாண சபை உறுப்பினர்கள் உறுதிமொழி

யாழ்ப்பாணம், நவ.8

தீவுப்பகுதி மக்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளான வீதிகள் புனரமைப்பு, கல்வி, போக்குவரத்து, கடல் நீர் உட்புகுதல், விளையாட்டு மைதானம் போன்ற விடயங்கள் தொடர்பில் வடக்கு முதலமைச்சருடனும் அமைச்சர்களுடனும் கலந்துரையாடி உரிய தீர்வுகளை பெற்றுத்தர நடவடிக்கை எடுப்போம் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான விந்தன் கனகரத்தினம், ஆ.பரஞ்சோதி ஆகியோர் தீவுப் பகுதி மக்களிடம் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஆ. பரஞ்சோதி, விந்தன் கனகரத்தினம் ஆகியோர் தீவுப் பகுதியின் அல்லைப்பிட்டி, நாரந்தனை, மண்கும்பான், தம்பாட்டி, வேலணை ஆகிய பகுதிகளுக்குப் பயணம் மேற்கொண்டு அங்குள்ள பொது நிறுவனங்களையும் மக்களையும் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தனர்.

பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு முழு ஆதரவும் வழங்கியமைக்கான நன்றிகளையும் கூட்டமைப்பின் சார்பில் தெரிவித்துக் கொண்டனர்.

சனசமூக நிலையங்களில் ஒரு கட்சி சார்பான பத்திரிகை மட்டுமே போடப்படுவதாகவும் யாராவது ஒருவர் குறிப்பிட்ட பத்திரிகைகளைப் போட்டால் அவர் அச்சுறுத்தப்படுகின்றார்.

அபிவிருத்தி மற்றும் உதவித் திட்டங்களில் தமது பகுதிகள் புறக்கணிக்கப்படுகின்றன.

விளையாட்டுத்துறையை ஊக்குவிப்பது தொடர்பான நடவடிக்கைகள் தேவை. கடற்றொழிலாளர்கள் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்க்க உதவவேண்டும் என சந்திப்பில் கலந்துகொண்ட மக்கள் கேட்டுக் கொண்டனர்.


சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள், முன்பள்ளிகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பெருமளவு மக்கள் உறுப்பினர்களைச் சந்தித்துத் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறினர். (வ-7)

## திருப்திகரமான சேவை வழங்காத கடற்பாதை

### நயினாதீவு மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், நவ .8

நயினாதீவு-குறிகாட்டுவான் மார்க்கத்தில் சேவையில் ஈடுபடுத்தவெனத் தருவிக்கப்பட்ட கடற்பாதை (FERRY) திருப்திகரமான சேவையை வழங்கக் கூடியதாக இல்லை என்று நயினாதீவு மக்கள் தெரிவிக்கின்றனர்.



கடந்த செப்ரெம்பர் 17 ஆம் திகதி வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பாதையின் சேவை ஆரம்பிக்கப்பட்ட போதும் இன்றுவரை அதன் சேவை தகுந்த முறையில் மக்களுக்குக் கிடைக்கவில்லை. ஏற்கெனவே 17 வருடங்களுக்கு மேலாக திருகோணமலைப் பகுதியில் சேவையில் ஈடுபட்ட பாதை கடந்த 3 வருடங்களாகக் குறிகாட்டுவான் பகுதியில் கவனிப்பாரின்றிக் கிடந்தது. தற்போது அந்தப் பாதை புதிய வடிவம் பெற்று சேவை ஆரம்பிக்கப்பட்ட தினத்தன்றே குறிகாட்டுவானில் இருந்து நயினாதீவுக்குச் செல்ல முயன்ற போதும் அது கைகூடாமல் மீண்டும் குறிகாட்டுவானுக்கே திரும்பியது.

பாதையின் இயந்திரங்களில் ஒன்று பழுதடைந்த நிலையில் புதிதாக ஓர் இயந்திரம் தருவிக்கப்பட்டு பொருத்தப்பட்டுச் சேவையில் ஈடுபடத் தொடங்கியது. அதைச் செப்பனிட்டவர்களுக்கே அதன்மேல் நம்பிக்கை இல்லாத நிலையில் இன்றுவரை அதில் மக்களை ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இதேவேளை பாதை சேவையில் ஈடுபடவுள்ளது எனத் தகவல்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபை அடிக்கடி வெளியிட்ட போதும் இன்னமும் முழுமையான சேவை மக்களுக்குக் கிடைக்கவில்லை. கல், மண் மற்றும் வாகனங்களை ஏற்றி இறக்கும் பணியிலேயே ஈடுபடுகிறது என்று நயினாதீவு மக்கள் தெரிவிக்கின்றனர். (வ-7)



தென்மராட்சிக் கல்வி வலய அலுவலகத்தில் வாழ்வெழுச்சித் (திவிநெகும) திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வீட்டுத் தோட்டச் செய்கையில் அறுவடைக்குத் தயாரான நிலையில் பயிர்கள் காணப்படுகின்றன. (வ-9)

# இலங்கை செல்லக்கூடாது பிரதமர்

## தமிழகத்தில் வலுக்கின்றது எதிர்ப்பு

சென்னை, நவ.8
இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்று கோரித் தமிழகத்தில் நடத்தப்பட்டுவரும் போராட்டங்கள் தீவிரமடையத் தொடங்கியுள்ளன.

இலங்கையில் நடை பெறும் பொதுநலவாய மாநாட்டை இந்திய அரசு முற்றாகப் புறக்கணிக்க வேண்டும், அதில் இந்தியா சார்பாக எவரும் பங்கேற்கக் கூடாது என்று தமிழகத்தைச் சேர்ந்த அரசியல் கட்சிகளும், தமிழக அரசும் வலியுறுத்தி வருகின்றன. இந்திய மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தமிழகத்தைச் சேர்ந்த அமைச்சர்களும் தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மத்திய அரசு மதிப்பளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதுவரை பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்வது குறித்து உறுதியான முடிவுகள் எதனையும் இந்திய மத்திய அரசு அறிவிக்கவில்லை. இன்று அதுகுறித்து அறிவிப்பு வெளியாகும் என்று தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், தமிழகத்தில் இலங்கைக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன.



தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் மாணவர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளால் சாலை மறியல் போராட்டங்கள், ரயில் மறியல் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் என்பன நடத்தப்பட்டு வருகின்றன. அந்தப் போராட்டங்களில் இந்திய அரசு, இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கக் கூடாது, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் போர்க்குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டன. (ற)

### தேர்தலில் போட்டியிட முடியாததால் தற்கொலை

போபால், நவ.8
மத்தியப்பிரதேச சட்டசபை தேர்தலில் போட்டியிட அனுமதி கிடைக்காத விரக்தியில், காங்கிரஸ் தலைவர் ஒருவர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அந்தக் கட்சியினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

மத்தியப்பிரதேச மாநிலம் அகர் என்ற இடத்தை சேர்ந்தவர் நரசிங்மால்வியா. மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினரான அவர், கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக காங்கிரஸ் கட்சியில் உள்ளார். ஆனால் இதுவரை தேர்தல் எதிலும் போட்டியிட்டதில்லை.

இந்த நிலையில் எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் போட்டியிட விரும்பிய அவர், அனுமதி கேட்டு கட்சி மேலிடத்துக்கு விண்ணப்பித்தார். இந்த முறை தமக்கு நிச்சயம் போட்டியிட வாய்ப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருந்தார். ஆனால் அவருக்கு தேர்தலில் போட்டியிட அனுமதி வழங்கப்படவில்லை.


அதனால் விரக்தி அடைந்த நரசிங் மால்வியா தற்கொலை செய்வதற்காக விஷம் குடித்தார். மயங்கிய நிலையில் அவர் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதும், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் மத்தியப் பிரதேச காங்கிரஸாரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. (ற)

### தொடங்கியது இந்தியா-அமெ. கூட்டுப்பயிற்சி

சென்னை, நவ.8
இந்திய-அமெரிக்க கடற்படையினர் பங்கேற்கும் ஐந்து நாள் கூட்டுப் பயிற்சி வங்காள விரிகுடா கடல் பகுதியில் நேற்றுத் தொடங்கியது.

'மலபார்-2013' என்று பெயரிடப்பட்டுள்ள அந்தப் பயிற்சியில் பங்கெடுக்க 300க்கும் அதிகமான இராணுவத்தினருடன் அமெரிக்க போர் கப்பல் 'மெக்காம்பெல்' ஏற்கனவே சென்னை அருகே உள்ள கடல் பகுதியில் தரித்து நிற்கிறது. வான்வெளி மற்றும் கடல் வழியாக நடத்தப்படும் தாக்குதல்களை எவ்வாறு முறியடிப்பது என்பது தொடர்பாக இரு நாட்டுக் கடற்படையினரும் பயிற்சி மேற்கொள்கின்றனர். கூட்டுப் பயிற்சியின் மூலம் இரு நாட்டுக் கடற்படையினருக்கும் கடற்கரைப் பாதுகாப்பை வலுப்படுத்தும் திறன் மேம்படும் என்றும் நம்பப்படுகிறது. (ற)



சென்னையில் நேற்று மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் நடைபெற்றது. சோதனை ஓட்டத்தைக் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஆரம்பித்து வைத்தார். ஜப்பானிலும், சீனாவிலும் நடைமுறையில் இருக்கும் இந்த ரயில் சேவை போல சென்னையிலும் அதிவேகத்துடன் மெட்ரோ ரயில்கள் இயங்கும். (ற)

### பஞ்சாப்பில் நிலநடுக்கம்

புதுடில்லி, நவ.8
பஞ்சாப் மாநிலத்தில் இமாச்சலபிரதேச எல்லைப்பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிச்டர் அளவுகோலில் அது 4.9 ஆகப் பதிவாகியுள்ளது அந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் விவரங்கள் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை.


15 நொடிகள் நீடித்த நிலநடுக்கத்தை அடுத்து அப்பகுதி மக்கள் வீடுகளை விட்டு வெளியேறிப் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்தனர். (ற)

## வெடித்தது மீண்டும் கலவரம்

### உத்தரப் பிரதேசத்தில் ஒருவர் சாவு

முசாபர்நகர், நவ.8
உத்தரப்பிரதேச மாநிலம் முசாபர் நகரில் வணிகர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்து அங்கு மீண்டும் கலவரம் வெடித்துள்ளது.


ஷாபூர் நகரில் நாற்பது வயதுடைய இர்பான் என்ற வணிகரே அடையாளம் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதையடுத்து ஆத்திரமடைந்த அவரது ஆதரவாளர்கள் ஷாபூர் நகரில் வன்முறையில் ஈடுபட்டனர். அங்குள்ள வீடு, கடைகள், வாகனங்களுக்கு தீ வைக்கப்பட்டது.



அதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த பொலிஸார் கலவரம் மேலும் பரவாமல் தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ஏராளமான பொலிஸார் முசாபர்நகர் முழுவதும் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர். வன்முறைகள் தொடர்பாக சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் முசாபர் நகர் மாவட்டத்தில் நடைபெற்ற இரு சமூகங்களுக்கு இடையேயான ஏற்பட்ட கலவரத்தில் 60க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். (ற)

## சட்டீஸ்கரில் வெடிகுண்டு



சட்டீஸ்கர், நவ.8
இந்தியாவின் சட்டீஸ்கரில் காங்கிரஸ் தலைவி சோனியா மற்றும் பா.ஜ. பிரதமர் வேட்பாளர் மோடி ஆகியோர் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் பங்குகொள்ள உள்ள நிலையில், அங்கு 100 கிலோ எடையுள்ள சக்திவாய்ந்த வெடிகுண்டொன்று கண்டு பிடிக் கப்பட்டுள்ளது.

பஸ்தார் என்ற இடத்திலேயே இவ்வாறு வெடிகுண்டு புதைக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டு, பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்டது.

சட்டீஸ்கரில் நடைபெற உள்ள முதல்கட்ட சட்டசபைத் தேர்தலின்போது மாவோயிஸ்ட்டுகள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளனர் என்று உளவுத்துறை எச்சரிக்கை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## இராணுவக் கல்லூரியின் இணையத்தளம் முடக்கம்

சென்னை, நவ.8
சென்னையில் உள்ள இராணுவப் பயிற்சிக் கல்லூரியின் இணையத்தளம் இனந்தெரியாதோரால் முடக்கப்பட்டுள்ளது.

குறித்த இணையத்தளம் மீதான தாக்குதல் பங்களாதேஷில் இருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இணையத்தளம் முடக்கப்பட்டதுடன், பங்களாதேஷ் எல்லையில் இந்திய இராணுவத்தினரில் அத்துமீறல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்ற வாசகங்கள் இணையத் தளத்தில் பொறிக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் அ.தி.மு. கட்சியின் இணையத்தளம் இனந்தெரியாதவர்களால் முடக்கப்பட்டது. (ற)

## தேர்தலின் பின்னர் நரேந்திர மோடிக்கு 'கல்தா'

### உத்தரப் பிரதேச அமைச்சரின் ஆரூடம் இது

லக்னோ, நவ.8
2014ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் பா.ஜ.க. வினர் நரேந்திர மோடியைக் கழற்றி விட்டு விட்டு அத்வானியைப் பிரதமர் ஆக்குவார்கள் என்று ஆரூடம் கூறியுள்ளார் உத்தரப் பிரதேச அமைச்சர் காயத்ரி பிரசாத் பிரஜபதி.

"ராமர் கோயில், தேசிய வாதம் போன்றவற்றின் மூலம்பிரபலமடைந்தவினய் கட்டியார், உமா பாரதி போன்ற பா.ஜ.க. தலைவர்கள் எல்லாம் எப்படி ஓரம் கட்டப்பட்டார்கள்? கட்சியில் அவர்களின் தற்போதைய நிலைமை என்ன? என்று எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இதை மோடி முதலில் புரிந்துகொள்ள வேண்டும். இந்தச் சதி மோடிக்கு புரியவில்லை. அவர் புரிந்து கொள்ளும் போது எல்லாம் முடிந்துபோய் இருக்கும்" என்று தெரிவித்துள்ளார் அவர். (ற)

## உளவு பார்த்தமை: பிரிட்டனிடம் விளக்கம்கோரும் ஜேர்மனி

பெர்லின், நவ.8

தமது நாட்டுப் பிரதமரை உளவு பார்த்தமை தொடர்பாக விளக்கம் அளிக்குமாறு பிரிட்டன் தூதருக்கு அழைப்பணை அனுப்பியுள்ளது ஜேர்மன்.

ஜேர்மன் தலைநகர் பெர்லினில் 2000ஆம் ஆண்டு முதல் பிரிட்டன் தூதரகம் செயற்பட்டு வருகின்றது. அங்கு அதிநவீன உபகரணங்களைப் பயன்படுத்தி உளவு பார்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை தற்போது தெரியவந்துள்ளது.

அரச நடவடிக்கைகளை கண்காணிக்கும் பொருட்டு பிரதமர் அலுவலகத்தில் ரகசிய கருவிகளை பிரிட்டன் உளவுத் துறை பொருத்தியுள்ளது. அந்த உபகரணங்களின் மூலம் கைத்தொலைபேசி அழைப்புகள், தொலை தூர உரையாடல்கள் போன்றவற்றை எளிதாக கேட்க முடியும். இந்தத்தகவல்கள் எட்வேர்ட் ஸ்நோடென் வெளியிட்ட ஆவணங்களின் அடிப்படையில் உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதைத் தொடர்ந்து இத்தகைய உளவு நடவடிக்கையானது சர்வதேச விதிமுறைகளுக்கு புறம்பானது என்று குறிப்பிட்டுள்ள ஜேர்மனி, அந்நாட்டிற்கான பிரிட்டன் தூதர் சைமன் மெக்டொனால்டுக்கும் அழைப்பாணை அனுப்பியுள்ளது டன், அதுகுறித்து உடன் விளக்கமளிக்குமாறும் கோரியுள்ளது. எனினும் இது தொடர்பில் பிரிட்டன் தரப்பில் இருந்து தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. (ற)



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் மனைவி மிச்செல் ஒபாமா வெள்ளை மாளிகையில் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடினார். இந்த நிகழ்ச்சியில் ஜனாதிபதி ஒபாமாவின் அரச நிர்வாகத்தின் கீழ் பணிபுரியும் அமெரிக்க வாழ் இந்தியர்கள் பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிகளின் இறுதியில் இந்தியப் பாடல் ஒன்றுக்கு மிச்செல் ஒபாமா நடனமாடினார். (ற)

## 'டிரோன்' தாக்குதல்களை இனியும் பொறுக்க மாட்டோம் -இம்ரான்கான்

**இஸ்லாமாபாத், நவ.8**

**ஆளில்லா** விமானங்களின் மூலம் தாக்குதல் நடத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று அமெரிக்காவுக்கு இம்ரான்கான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாகிஸ்தான்- ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதிகளில் பதுங்கியுள்ள தீவிரவாதிகள் மீது ஆளில்லா விமானங்களின் மூலம் அமெரிக்கா தாக்குதல் நடத்தி வருகிறது. இதுகுறித்து இம்ரான் கான் கருத்துத் தெரிவிக்கும் போது,

"பாகிஸ்தான் மண்ணில் அமெரிக்கா அத்துமீறி தாக்குதல் நடத்துவதை ப இதற்கு மேலும் அனுமதிக்க மாட்டோம். அமெரிக்காவுக்கு எதிரான எங்களது பதிலடி கடுமையாக இருக்கும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

### ஈரான் அணுச் செரிவூட்டல் விவகாரம்

# பேச்சுகள் விரைவில்

தெஹ்ரான், நவ.8

சர்ச்சைக்குரிய அணு உலைத் திட்டங்கள் தொடர்ப்பாக ஈரானுக்கும் மேற்குலக நாடுகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளன.

ஈரானின் அணு செரிவூட்டல் தொடர்பாக மேற்குலக நாடுகள் தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டி வருகின்றன. ஈரான் அணு ஆயுதங்கள் தயாரிக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது என்று அந்த நாடுகள் கூறுகின்றன.

ஆனால் அந்தக் குற்றச்சாட்டை அடியோடு மறுக்கும் ஈரான், அணு செரிவூட்டல் ஆக்கபூர்வ நடவடிக்கைகளுக்காகவே என்று கூறிவருகின்றது.

இந்த நிலையில் குறித்த பிரச்சினை தொடர்பாக இணக்கப்பாடு ஒன்றை எட்டும்பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேச்சுக்கள் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இரண்டு நாள்கள் நடைபெறவுள்ள இந்த முதற்கட்டப் பேச்சுக்களில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படவுள்ளன.

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா கடும் பொருளாதார தடைகளை விதித்துள்ளது. தற்போது ஈரான் சில விட்டுக்கொடுப்புகளைச் செய்துள்ள நிலையில் அணுத் திட்டப் பேச்சுகள் சர்வதேச அரங்கில் கூடுதல் கவனத்தைப் பெற்றுள்ளன. (ற)

## வீட்டுச் சிறையிலிருந்து முஷாரப் விடுதலை

இஸ்லாமாபாத், நவ.8

பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் மீது சுமத்தப்பட்ட அனைத்து வழக்குகளுக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளதால் அவர் வீட்டுச் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ கடந்த 2008ஆம் ஆண்டு நடந்த தேர்தல் பரப்புரையின் போது தற்கொலைப் படையினரால் கொல்லப்பட்டார்.

பலூசிஸ்தான் தலைவர் பக்டிக்கு எதிராக முஷாரப் இராணுவ நடவடிக்கை மேற்கொண்டதில் அவர் உயிரிழந்தார். அது தொடர்பாக முஷாரப் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டது. அத்துடன் லால் மசூதியின் இஸ்லாமிய குரு அப்துல் ரஷீத் கொல்லப்பட்ட வழக்கில் முஷாரப் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

குறித்த இருவழக்குகளுக்கும் தற்போது பிணை வழங்கப்பட்டுள்ளதை அடுத்து அவர் வீட்டுச் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார். அதையடுத்து முஷாரப் ஆதரவாளர்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர். (ற)

## பிரிட்டன் அரசுக்கெதிராக லண்டனில் போராட்டம்

பிரிட்டன், நவ.8

பிரிட்டன் அரசின் சிக்கன நடவடிக்கைகளை கண்டித்து நூற்றுக்கணக்கானோர் நேற்றுமுன்தினம் லண்டனில் போராட்டம் நடத்தினர். அரச குடும்பம் வசிக்கும் பக்கிங்காம் அரண்மனை பகுதியிலும் புகழ்பெற்ற வெஸ்ட் மினிஸ்டர் பிரிட்ஜ் பகுதியிலும் இந்த போராட்டங்கள் நடந்தன.

சம்பளக் குறைப்பு, ஆள் குறைப்பு போன்ற அரசின் சிக்கன நடவடிக்கைகளால் சாமானிய மக்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று அவர்கள் குற்றஞ்சாட்டினர். (ற)

## சீனாவில் தொடர் குண்டுவெடிப்பு: ஒருவர் சாவு

பீஜிங், நவ.8

சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் அருகே நேற்று நடந்த தொடர் குண்டு வெடிப்பில் ஒருவர் உயிரிழந்தார். எட்டுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர். அதில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

ஷான்க்சி பிராந்தியத்தின் தலைநகர் டையுனில் உள்ள சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் அருகே ஒருசிறிய வாகனத்தில்வைக்கப்பட்டிருந்த குண்டுகளே வெடித்தனஎன்றுசம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்துக்கு இதுவரை யாரும் பொறுப்பேற்கவில்லை. இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடந்த அக்ரோபர் 28ஆம் திகதி பாதுகாப்பு நிறைந்த தியானமென் சதுக்கத்தில் தற்கொலைப்படை தாக்குதல் நடத்தப்பட்டதில் 5 பேர் உயிரிழந்தனர். இத்தகைய தாக்குதல்கள் தொடர்ச்சியாக இடம்பெறுவதை அடுத்து எதிர்வரும் 9ஆம் திகதி பெய்ஜிங்கில் நடைபெற உள்ள முக்கிய தலைவர்கள் பங்கேற்கும் ஆலோசனைக் கூட்டத்துக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ற)

## விஷம் வைத்தே கொல்லப்பட்டார் அரபாத்: அவரது மனைவி கூறுகிறார்

பரிஸ், நவ.8

தனது கணவர் அரபாத் விஷம் வைத்தே கொல்லப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ளார் அவரது மனைவி சுஹா.

பலஸ்தீனத்தின் முன்னாள் ஜனாதிபதி யசீர் அரபாத் பொலோனியம் என்ற விசம் வைத்து கொல்லப்பட்டிருக்கலாம் என சுவிட்சர்லாந்தின் ஆய்வு அறிக்கை ஒன்று முன்னர் தகவல் வெளியிட்டிருந்தது. மருத்துவத் தடவியல் சம்பந்தப்பட்ட நிபுணர்களால் நடத்தப்பட்ட ஆய்வுகளை அடுத்து அந்த விடயம் கண்டறியப்பட்டது.

இந்தநிலையில் யசீர் அரபாத்தின் மனைவி சுஹா பரிஸில் நேற்றுமுன்தினம் பத்திரிக்கையாளர்களை சந்தித்து பேசினார்.

அப்போது அவர் "எனது கணவர் (யசீர் அராபத்) இயற்கை மரணத்தால் உயிர்இழக்கவில்லை. அவர் பொலோனியம் என்ற விஷத்தால் கொல்லப்பட்டுள்ளார் என்பதற்கான அறிவியல் பூர்வமான ஆதாரங்கள் என்னிடம் உள்ளன.

அவரது மரணம் இயற்கையானது அல்ல. அரசியல் படுகொலை தான் என்ற எனது சந்தேகம் இப்போது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணமாகியுள்ளது. அது தொடர்பாக எந்தவொரு நாட்டையோ எந்தவொரு தனிநபரையோ நான் குற்றம்சாட்ட விரும்பவில்லை" என்று தெரிவித் துள்ளார்.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் முன்னாள் தலைவர் யசீர் அரபாத் நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் 2004 ஆம் ஆண்டு உயிரிழந்தார். யசீர் அரபாத் பிரான்ஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் விஷம் வைத்து கொல்லப்பட்டிருந்தார் என்ற செய்திகள் முன்னர் வெளியாகிப் பெரும் சர்ச்சைகள் ஏற்பட்டிருந்தன. இஸ்ரேலே இந்தப் படுகொலையை மேற்கொண்டது என்று பலஸ்தீனர்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர். எனினும் அதனை நிராகரித்துள்ள இஸ்ரேல் அரசு, சுவிட்சர்லாந்தின் மருத்துவ அறிக்கை தொடர்பில் அதிருப்தி வெளியிட்டுள்ளது. (ற)



## உதவி கல்வி பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், நவ.8

தீவகக் கல்வி வலயத்தில் தமிழ்ப் பாடத்துக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடமாக உள்ளது. இதற்குத் தீவகக் கல்வி வலயத்தில் கடமையாற்றும் இலங்கை ஆசிரியர் வகுப்பு 1, 2-1 ஐச் சேர்ந்த ஆசிரியர்கள் விண்ணப் பிக்கலாம்.

தீவக வலயத்தில் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத இடத்து தீவகக் கல்வி வலயத்துக்கு வெளியேயுள்ள மேற்படி தரத்தைச் சேர்ந்த ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தீவகக் கல்வி வலயத்தில் சமர்ப்பிக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ந)

## மருந்தகங்களில் திடீர் சோதனை வசமாகச் சிக்கினர் நான்கு பேர்

தென்மராட்சி, நவ.8

தென்மராட்சிப் பிரதேசத்தில் இயங்கும் தனியார் மருந்தகங்கள் மற்றும் ஆயுள்வேத வைத்திய நிலையங்கள் ஆகியவற்றில் சுகாதார திணைக்களத்தினர் மேற்கொண்ட திடீர்ப் பரிசோதனையில் 4 பேர் வசமாக மாட்டிக் கொண்டனர்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்பின் பேரில் பருத்தித்துறை, கோப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரிகள் கடந்த திங்கட்கிழமை தென்மராட்சிப் பிர தேசத்தில் திடீர் பரிசோதனைகளில் ஈடுபட்டனர். சுகாதாரத் திணைக்களத்தில் தனியார் மருந்தகத்துக்குரிய உரிமம் பெறாமல் மருந்தகம் நடத்தியமை, அங்கு மருத்துவர் இன்றியும் அவரின் பரிந்துரையின்றியும் மருந்துகள் விற்பனை செய்தமைக்காக இரு தனியார் மருந்தகங்களும் மேற்கத்திய மருந்து கள் பற்றிய போதிய அறிவின்றி ஆங்கில மருந்துகள் பயன்படுத்திய இரு ஆயுள் வேத நிலையத்தினரும் சுகாதாரக் குழுவிடம் மாட்டிக் கொண்டனர்.

குறித்த நால்வருக்கும் எதிராக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரியால் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகள் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வழக்குகளை விசாரித்த நீதிவான் வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இருவருக்கும் தலா 15 ஆயிரம் ரூபாவும் ஆயுள்வேத நிலையத்தினரில் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபாவும் மற்றவருக்கு 5 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது.

(வ-9-422)

## லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்ட ஆளுநர் வருகை

தென்மராட்சி, நவ.8

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்ட ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்ணாண்டோ அண்மையில் தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்துக்குச் சென்று கழகத்தின் பல்வேறு நலத்திட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.

கழகத் தலைவர் லயன் த.இரவீந்திரன் தலைமையில் கழக அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு நுளம்பு வலைகளும், ஐந்தாம் தரப் புலமைப் பரீட்சையில் சித்தி பெற்ற கழக எல்லைக் குட்பட்ட மாணவர்களுக்கு பரிசில்களும், மரக்கன்றுகள் வழங்கும் செயற் றிட்டத்தின் கீழ் தென்னை மீள் நடுகைக்காக 500 தென்னம்பிள்ளைகளும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

(ந-9)

## உடுவிலில் தொழிற் சந்தை

வலி.வடக்கு, நவ. 8

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களமும் உடுவில் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு தனியார் துறையில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் மாபெரும் தொழிற் சந்தை எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தத் தொழிற் சந்தையில் 18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் கலந்துகொள்ள முடியும் எனவும் இதில் பத்துக்கும் மேற்பட்ட தனியார்துறை நிறுவனங்கள் கலந்து கொள்ளவுள்ளதாகவும், முறையாகத் தயாரிக்கப்பட்ட சுய விவரக் கோவை மற்றும் கல்விச் சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை என்பவற்றைக் கொண்டு வரும்படியும் அறிவிக்கப் பட்டுள்ளது.

உடுவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்டவர்கள் இந்தத் தொழிற் சந்தையில் கலந்து கொள்ள முடியும் எனவும் பிரதேச செயலக மனிதவலு வேலை வாய்ப் புத் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-86)


### NSB தேசிய சேமிப்பு வங்கி
National Savings Bank

**மீட்கப்படாத அடகு நகைகளின் ஏலவிற்பனை**

தேசிய சேமிப்பு வங்கியின் மானிப்பாய், சங்கானை, அச்சுவேலி ஆகிய கிளைகளில் அடகு வைத்து குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மீட்கப்படாத நகைகள் நாளை (09.11.2013) சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அந்தந்தக் கிளைகளில் நடைபெறும் ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

இந்த ஏலவிற்பனையை இரத்துச் செய்யும் அல்லது பிற்போடும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

பிராந்திய முகாமையாளர் (வடக்கு)
தேசியசேமிப்பு வங்கி.

(39795)(3.6.4)



### வீடு வாடகைக்குண்டு

Near C.C.T.M School Lane
ஆனைக்கோட்டை றோட், கொக்குவில் மேற்கு, கொக்குவிலில் சகல வசதிகளுடன் கூடிய பெரிய வீடு வாடகைக்குண்டு.
(தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.)
தொடர்பு:077 984 6916
(39745)(6.3.4)



### பாராட்டி வாழ்த்துகின்றோம்




புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில்அபிவிருத்தி உதவிஉத்தியோகத்தராகக் கடமையாற்றி கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்கு கணக்காளராகப்பதவி உயர்வுபெற்றுச்சென்றுள்ள எமது சங்கத்தின் இயக்குநர்சபை உறுப்பினரான திருமதி **சுதர்ஜினி சிவநந்தரன்** அவர்கள் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று மக்களுக்காகச் சேவையாற்றி பல்லாண்டு காலம் வாழ்க! வாழ்க! என வாழ்த்தி நிற்கின்றோம்.

தலைவர், பொது முகாமையாளர்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
**வி.ப.நோ.கூ.சங்கம் விசுவமடு.**



## அரசாங்க அறிவித்தல்

**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்**

**வழங்குநரை பதிவு செய்தல் - 2014**

யாழ் மாவட்ட செயலகம், யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2014 ஆம் ஆண்டுக்கு கீழ்க்குறிப்பிடப்படும் பொருள்கள் சேவைகளை விநியோகிப்பதற்கான வழங்குநர்களை பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக்கிளை, பிரதேச செயலகங்கள் என்பவற்றில் 2013.11.08 தொடக்கம் 2013.11.28 வரை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் www.jaffna.dist.gov.lk என்ற இணையத்தளத்தில் இருந்தும் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணபப்படிவங்களை 29.11.2013 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் (9''x4'') இடது பக்க மேல் மூலையில் **''வழங்குநரைப் பதிவு செய்தல் - 2014''** எனக்குறிப்பிட்டு **''அரசாங்க அதிபர், களஞ்சிய நலன்புரிக்கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்''** என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாகக் கையளிப்பதாயின் மாவட்டச் செயலகத்தின் களஞ்சிய நலன்புரிக்கிளையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

**வழங்கல்கள், சேவைகள் விவரம்.**

01. காகிதாதிகள், எழுது பொருள்கள்
02. மர, உருக்கு, பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ் தளபாடங்கள் வழங்கலும், திருத்தலும்
03. இலத்திரனியல், மின்சாரப் பொருள்கள், உதிரிப்பாகங்கள் வழங்கலும், திருத்தலும், பராமரித்தலும்
04. சுத்திகரிப்பு சேவை, சுத்திகரிப்புப் பொருள்கள்
05. கட்டட நிர்மாணம், திருத்த வேலைகள் செய்தல், தீந்தை(பெயின்ற்), ஹாட்வெயர் பொருள்கள் வழங்கல்
06. மோட்டார் வாகனங்கள் திருத்தம், பராமரிப்பு செய்தல், ரயர், ரியூப், பற்றிகள், உதிரிப்பாகங்கள் வழங்கல்
07. குடிநீர், பால்மா, மென்பானம் உணவு வகைகள்
08. திரைச்சீலைகள், சீருடைகள், மேசை விரிப்புக்கள், நில விரிப்புக்கள்
09. தோல் வகை உற்பத்திப் பொருள்களும், விளையாட்டுப் பொருள்களும்
10. அச்சிடுதல், புத்தகம் கட்டுதல், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகள், அடையாள அட்டைகள் செய்தல்
11. நீர் விநியோக பொருத்துக்கான பொருள்கள், நுகர்வுப் பொருள்கள் வழங்கல்

சுந்தரம் அருமைநாயகம்,
மாவட்டச் செயலரும், அரசாங்க அதிபரும்,
யாழ். மாவட்டம்.

(C/13590)(3.6.4)



### பெயர்மாற்றம்

சாவகச்சேரி வடக்கு மீசாலையைச் சேர்ந்த **முருகேசு சிவஞானம்மா** என் னும் எனது பெயரை இன்றிலிருந்து (08.11.2013) **முருகேசு சிவமலர்** எனப் பெயர்மாற்றம் செய்து கையொப்பமிடுவேன் என அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.
மு.சிவமலர்
(29681)(12.3.6)



### நாய்க்குட்டி விற்பனைக்கு

45 நாள்கள் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 239 5849
(39804)(3.6.4)



### பெயர்மாற்றம்

இல.124, உபதபாலக வீதி, இரத்தினபுரம், கிளிநொச்சி என்னும் முகவரியைச் சேர்ந்த குமாரசாமி தேவேந்திரம்பிள்ளை ஆகிய நான் எனது பெயரை குமாரசாமி தெய்வேந்திரம் என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
(29597)(3.6.4) குமாரசாமி தெய்வேந்திரம்



### தேவை

கொழும்பிலுள்ள பிரபல சைவ உணவ கத்திற்குத் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய சமையல்காரர் தேவை. சமை யல், பிட்டு, மோதகம் போன்றவை தயாரிக்கத் தெரிந்திருக்க வேண்டும். தங்குமிடம் இலவசம். சம்பளம் 35000/=.
தொடர்பு: 011 232 6289/077 300 0469
131, 2ஆம் குறு.வீதி, கொழும்பு -11
(39777)(12.3.6)



### வேலையாள் தேவை

யாழ். நகரில் இயங்கும் மொத்த வியாபார ஸ்தாபனத்துக்கு (பலசரக்கு) முழுநேரமாக வேலை செய்யக்கூடியவர் தேவை. (ஆண் வயது 20-30 விரும்பத்தக்கது)
தொடர்பு: 077 844 7088 (39798)(3.6.4)



### பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை

2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றோர்







க.கவிசனா - 178 அ.ரிஷவன் - 177 சி.துஷந்தி - 176 ந.அனுசியா - 166 வ.கஜிந்தன் - 164







ந.ஹரினி - 164 க.நங்கியா - 164 க.ஜநூர்ஜன் - 163 வி.கம்சியா - 155

இவர்களுடன் வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு, இவர்களை **தரம் - 1** இல் இருந்து வழிப்படுத்திய ஆசிரியப் பெருந்தகைகளையும், **தரம் - 5 இல்** சிறப்பாக வழிப்படுத்திய ஆசிரியர்களான திருமதி **சு.ஜெகநாதன், ப.சந்திரமோகன், யோ.லிங்கேஸ்வரன்** ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துவதோடு இவர்கள் அனைவரையும் நெறிப்படுத்திய பாடசாலை முதல்வர் **கா.கந்தசாமி** அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்.**

(39997) (45.6.3)

# வெள்ளாங்குளம் புதிய சந்தை கால்நடைகளின் கூடாரமானது



துணுக்காய், நவ.8

மன்னார் மாவட்டத்திலுள்ள வெள்ளாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொதுச் சந்தை பயன்படாத நிலையில் காணப்படுகின்றது.

வெள்ளாங்குளம் கிராமத்தின் பிரதான வீதியில் பல மில்லியன் ரூபா செலவில் இந்தப் பொதுச்சந்தை அமைக்கப்பட்டது. ஆனால் இதனை மக்கள் பயன் படுத்துவதாகத் தெரியவில்லை.

இது தொடர்பாக இந்தச் சந்தையிலிருந்து சுமார் 4 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருக்கும் தேவன் பிட்டிக் கிராம மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர். தேவன்பிட்டியில் சுமார் 300 இற்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. விவசாயம், மீன்பிடி ஆகிய தொழில்களை இந்தக் குடும்பங்கள் மேற்கொண்டு வருகின்றன.

இங்கு சந்தையொன்று அமைக்கப்படாததால் தமது உற்பத்திப் பொருள்களை மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மல்லாவி ஆகிய பொதுச் சந்தைகள் உள்ள இடங்களுக்கு பெரும் தொகை செலவழித்து இவர்கள் எடுத்துச் செல்கின்றனர்.

இங்கு சந்தையொன்று அமைக்கப்பட்டிருந்தால் வெளியூர் வியாபாரிகள் இங்கு வந்து தமது உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்வரென இவர்கள் கூறுகின்றனர்.

இந்த நிலையில் வெள்ளாங்குளம் சந்தியில் அமைக்கப்பட்ட இந்தப் பொதுச் சந்தையினால் எவரும் பயன் பெறுவதில்லை என்பதோடு ஆடு, மாடுகளும் தென்பகுதியில் இருந்து வீதிப் புனரமைப்புக்கென வந்த தொழிலாளிகளும் இதனைப் பயன்படுத்துவதாகவும் தேவன் பிட்டி கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தற்போது தேவன்பிட்டி மீனவ கிராமத்தில் 300 குடும்பங்களும் மூன்றாம் பிட்டியில் 200 குடும்பங்களும் வெள்ளாங்குளம்-துணுக்காய் வீதியில் அமைந்துள்ள கணேசபுரம் கிராமத்தில் 300 குடும்பங்களும் வசித்து வருகின்ற போதிலும் பொதுச் சந்தை வசதியில்லாததால் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே வெள்ளாங்குளம் சந்தியில் முன்பு போன்று பொதுச் சந்தையை இயங்கச் செய்து தமது வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு உதவுமாறு இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-415)

## மோசமான வீதிகளால் இடர்கள்

வவுனியா, நவ.8

வவுனியா தெற்கு பிரதேச சபையின் கீழுள்ள பல வீதிகள் மிகவும் மோச மான நிலையில் காணப்படுவதால் அவற்றைப் புனரமைக்குமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட சமயபுரம், உக்கிளாங்குளம், மணிபுரம், கணேசபுரம், பம்பைமடு, பூவரசங்குளம், செக்கட்டிப்புலவு, வேலன்குளம், சின்னத்தம்பனை, பூம்புகார், கல்மடு, சிதம்பரபுரம், ஆச்சிபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள வீதிகளே தற்போது பெய்துவரும் மழையினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. கடந்த பல வருடங்களாக எதுவித புனரமைப்பு மில்லாத நிலையில் காணப்படுகின்றன.

(க-402)



## கேட்போர் கூடம்

முல்லைத்தீவு, நவ .8

ஒட்டுசுட்டான் ஆறுமுக வித்தியாலயத்தில் 50 அடி நீளமான கேட்போர் கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரால் வழங்கப்பட்ட 5 லட்சம் ரூபா நிதியுதவி மற்றும் பெற்றோர் வழங்கிய நிதி மற்றும் பங்களிப்புடன் இந்தக் கேட்போர் கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

இதனை, அண்மையில் அரச அதிபர் திறந்து வைத்தார்.

(க-500)

## தமிழில் முறையிட்லாம்

மன்னார், நவ .8

மன்னார் தலைமைப் பொலிஸ் நிலையத்தில் 35 தமிழ் பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், இதனால் மக்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக தமிழில் முறைப்பாடுகளை எவ்வித தடையுமின்றி மேற்கொள்ள முடியும் எனவும் மன்னார் தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துஸார தலுவத்த தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

மக்களின் நலன் கருதி தற்போது இரவு நேரங்களிலும் தமிழ்ப் பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர் .

மன்னார் தலைமைப் பொலிஸ் நிலையத்தில் அதிகளவு தமிழ்ப் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

எனவே மக்கள் எதுவித தயக்கமுமின்றித் தமது முறைப்பாடுகளைப் பதிவு செய்ய முடியும் என அவர் தெரிவித்தார்.

(க-12)


# அழிந்தது மஞ்சள் கோடு: ஆரம்பித்தது பிரச்சினை

## வவுனியா பஸ் நிலையப் பகுதியில்

பஸ் நிலையக் காவலாளிக்கும், பொதுமக்களுக்கும் இடையே முறுகல் நிலை தோன்றியுள்ளதால் வவுனியா பஸ் நிலையத்தில் அழிவடைந்த நிலையில் காணப்படும் மஞ்சள் கோட்டுப் பகுதியை மீண்டும் அமைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா பஸ் நிலையத்துக்கு வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் உட்பட உல்லாசப் பயணிகள், வர்த்தகர்கள், நுகர்வோர் எனப் பல தரப்பினரும் வருகை தருகின்றனர்.

முன்னர் இவர்கள் தமது சைக்கிள், மோட்டார் சைக்கிள்களை ஒழுங்கற்ற முறையில் பஸ் நிலையச் சுற்றாடலில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக நிறுத்தி வந்தனர். இதனால் வீதிப் போக்குவரத்துப் பொலிஸார், இலங்கைப் போக்குவரத்துச் சபை நிர்வாகத்தினருக்கும் இவர்களுக்குமிடையில் அடிக்கடி முரண்பாடுகள் ஏற்பட்டன. அதையடுத்து பஸ் நிலைய உள்வட்ட பகுதியில் வாகனங்களை நிறுத்தத் தடை விதிக்கப்பட்டது. இதனால் தமது வியாபாரம் பாதிக்கப்படுவதாக பஸ் நிலைய் உள்வட்டப் பகுதியில் வர்த்தக நிலையங்களை நடத்துவோர் ஆட்சேபத்தையடுத்து வவுனியா நகரசபை நிர்வாகம் சைக்கிள், மோட்டார் சைக்கிள்களை நிறுத்தவென மஞ்சள் கோட்டால் இடம் குறித்தொதுக்கிக் கொடுத்து பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது. தற்போது பஸ் நிலைய உள்வட்டப் பகுதிக்கு காப்பெற் போடப் பட்டதால் மஞ்சள் கோடுகள் அழிந்துள்ளன.



இதனால் மீண்டும் சைக்கிள் மோட்டார்சைக்கிள்களைநிறுத்துவதில் பிரச்சினைகள் தலைதூக்கி உள்ளமையால் குறிப்பிட்ட பகுதிக்கு மஞ்சள் கோடுகள் இட்டு வாகன நெருக்கடியை நேர்சீர் செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(க-402)

# பாடசாலை மாணவருக்கு பஸ் கட்டணக் குறைப்பு

## வடமாகாண போக்குவரத்து அமைச்சர் கோரிக்கை



யாழ்ப்பாணம், நவ .8

பாடசாலை மாணவர்களுக்கு கட்டணக் குறைப்புடன் சேவை வழங்குவது தொடர்பாக தனியார் பஸ் சங்கங்கள் ஆலோசிக்க வேண்டும்என்றுவடமாகாண போக்குவரத்து அமைச்சர் பாடெனீஸ்வரனால் கோரிக்கை முன்வைக்கப் பட்டுள்ளது.

மன்னாரில் இடம்பெற்ற வடமாகாணத்திலுள்ள அனைத்து மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் செயலாளர்களுக்கான விசேட ஒன்றுகூடலில் மன்னார், வவுனியா மற்றும் பருத்தித்துறைச் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்ட போதே அமைச்சர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

மன்னார் நகரசபை ஒன்றுகூடல் மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தக் கலந்துரையாடலில், வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிப மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனும் கலந்து கொண்டார்.

மத்திய அரசினால் இந்த மாதம் முதலாம் திகதி முதல் 7 சதவீத கட்டண உயர்வை செயற்படுத்துவது தொடர்பாகவும், எதிர்காலத்தில் வடமாகாண சபையினால் மேற்கொள்ளப்படும் போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பாகவும் இங்கு கலந்தாலோசிக்கப்பட்டது.

மேலும் இந்தக் கட்டண உயர்வு தற்போதைய எரிபொருள் விலை உயர்வின் அடிப்படையில் சரியானது. இதனால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக் குறித்து கலந்தாலோசிக்கப் பட்டு, இறுதியில் கட்டண உயர்வை நடைமுறைப் படுத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

"அடுத்த ஆண்டிலிருந்து பாடசாலை மாணவர்களுக்கு விசேட குறைந்த கட்டணத்தில் சேவைகளை நடத்துவதற்கு தனியார் போக்குவரத்துச் சங்கங்கள் முன்வர வேண்டும்" என்று அமைச்சர் இதன்போது கேட்டுக் கொண்டார்.

(க-5-12)

# மரக்கறி விலை உயர்வு



வவுனியா நவீன சந்தையில் மரக்கறி வகைகளின் விலை சடுதியாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

தற்போது இடம்பெற்று வரும் கந்தசஷ்டி விரதத்தையொட்டி மரக்கறிகளின் விலைகள் எந்தவித கட்டுப்பாடுமின்றி அதிகரித்துக் காணப்படுகின்றன. ஒரு கிலோ பயிற்றங்காய், போஞ்சி, பாகற்காய், தக்காளிப்பழம், கரட், உருளைக்கிழங்கு, முருங்கக்காய் என்பன 120 ரூபாவுக்கும், அதற்குக் கூடுதலாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. தேசிக்காய் ஒரு கிலோ 250 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதையும் காண முடிகின்றது.

மரக்கறிகளின் விலைகளுக்கு எந்தவித கட்டுப்பாடும் விதிக்காமையால் அவை இரண்டு மடங்காக உயர்வடைந்து காணப்படுகின்றன. இதனால் ஒரு சிலர் லாபம் பெறும்போது நுகர்வோர் பெரிதும் பாதிப்படைவதைக் காணமுடிகின்றது.

(க-402)

# 1000 பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம்

## அமைச்சர் உறுதியளித்தார் என்கிறார் செல்வராசா எம்.பி.

மட்டக்களப்பு.நவ.8
மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டதாரி பயிலுநர்களாக இணைக்கப்பட்டுள்ளவர்களில் 1000 பேருக்கான நிரந்தர நியமனங்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் வழங்கப்படும் என்று பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன தமக்குஉறுதியளித்துள்ளார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்தார்.

பட்டதாரிகள் பயிலுநர்களின் நிரந்தர நியமனம் மற்றும் பல்வேறு பிரச்சினைகள் தொடர் பில் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்னவை அவரது அலுவலகத்தில் பொன். செல்வராசா சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் கருத்து வெளியிட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டதாரி பயிலுநர்களாக இதுவரையில் 1938பேர் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். அவர்களுக்கான நிரந்தர நியமனங்கள் இதுவரை வழங்கப்படவில்லை. இது தொடர்பில் பட்டதாரிகள் எனது கவனத்துக்கு கொண்டுவந்துள்ளனர் என் பதை அமைச்சருக்கு சுட்டிக்காட்டினேன்.






276 பேருக்கு நிரந்தர நியம னக் கடிதங்கள் மாவட்ட செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டு அவை இதுவரையில் வழங்கப்படாமை தொடர்பிலும் அமைச்சின் கவனத்துக்கு கொண்டுவந்தேன் என்று அவர் கூறினார்.

இதன்போது 276 பேருக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளன என்றும் மேலும் 100 கடிதங்கள் அனுப்புவதற்கான தயாரிப்புப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் இந்த மாத இறுதிக்குள் 400 பேருக்கான நிரந்தர நியமனக்கடிதங்கள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் என்னிடம் தெரிவித்தார்.

அத்துடன் இந்த வருட இறுதிக்குள் மிகுதி 600 பேருக்குமான நிரந்தர நியமனக் கடிதங்களை வழங்கு வதற்கான அனைத்து பணிகளும் இடம்பெற்று வருவதாகவும் இந்த வருடத்துக்குள் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 1000 பட்டதாரிப் பயிலுநர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (ச-32)

## செயலிழந்தன மணிக்கூடுகள்



மட்டக்களப்பு.நவ.8
மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மணிக்கூட்டு கோபுரங்களின் கடிகாரங்கள் செயலிழந்து காணப்படுகின்றன என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த கடிகாரங்கள் செயலிழந்து பல மாதங்களாகியும் இதுவரை சீரமைக்கப்படவில்லை என்றும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

## கால் நடைகளுக்கு நடமாடும் சேவை




மட்டக்களப்பு.நவ.8
நிந்தவூரில் கால்நடைகளுக்காக நடமாடும் வைத்திய சேவை நிந்தவூர், 22 ஆம் பிரிவில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த வைத்திய சேவையில் ஆலோசனை வழங்கல், கால்நடைத் தடுப்பூசி ஏற்றல், சினைப் பரிசோதனை, பண்ணையாளர் பயிற்சி வகுப்பு, விசர்நாய்த் தடுப்பூசி ஏற்றல் போன் றவை இலவசமாக மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிகழ்வில் கால்நடை வைத்தியபிரிவின் அரச கால்நடை வைத்தியர் ஏ.எல்.எம். ரிங்கான், காரைதீவு பிரிவின் அரச கால்நடை வைத்தியர் எஸ்.இ.குணவர்த்தன உட்பட பலர் கலந்து கொண்டு சேவை வழங்கினர். (ச-10)

## உள்ளூர் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை



மட்டக்களப்பு.நவ.8
மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூர் கைவினை உற்பத்தியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மாவட்ட செயலகம் மேற்கொண்டு வருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் உள்ளூர் கைவினை உற்பத்தித் திறன் செயலமர்வு மட்டக்களப்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்தச் செயலமர்வு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸின் ஆலோசனைக்கமைய நடைபெற்றது.

## பயிர்ச் செய்கை மேற்கொள்ள ஒரு லட்சம் ஏக்கர் காணிகள்

### விவசாய அமைச்சு தகவல்

மட்டக்களப்பு.நவ.8
எதிர்வரும் சிறுபோகத்தில் மேலதிக பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதற்காக சுமார் ஒரு லட்சம் ஏக்கர் காணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

காலநிலை மாற்றங்களுக்கேற்ப இந்த மேலதிக பயிர்ச்செய்கை மேற்கொள்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதற்காக அநுராதபுரம், பொலநறுவை, மட்டக்களப்பு, அம்பாறை, குருநாகல் ஆகிய மாவட்டங்களிலுள்ள விவசாயிகளுக்கு சோயா, போஞ்சி, மிளகாய், கச்சான் உட்பட மேலும் சில பயிர் வர்க்கங்களை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)



மக்களுக்கு அசௌகரியங்களைத் தரும் வகையில் ஆங்காங்கே குவிக்கப்பட்டு போக்குவரத்துக்கு தடையாக அமைந்திருந்த கருங்கல் சல்லிக் கற்களைக் கொண்டு வீதியின் சிறு பகுதியை முழுமையாக நிரப்பிச் செப்பனிட்டனர் ஓட்டமாவடி, மாஞ்சோலை இளைஞர்கள்.

## நெற் செய்கைக்கு கிடைத்தது அனுமதி

### அம்பாறை மாவட்ட அரச அதிபர் உறுதி



அம்பாறை.நவ.8
அம்பாறை,பொத்துவில், லஹுகல பிரதேசங்களில் வசிப்போர் வழமையாக விவசாயம் செய்த காணிகளில் பெரும்போக நெற் செய்கையை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படும் என்று அம்பாறை மாவட்ட அரச அதிபர் நீல் த அல்விஸ் உறுதியளித்துள்ளார்.

இந்தக் காணிகளில் நெற் செய்கையை மேற்கொள்ளும்போது பொலிஸார் கைது செய்யாமல் இருப்பதற்கான உத்தரவாதத்தையும் அம்பாறை மாவட்டச் செயலர் வழங்கியுள்ளார்.

நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் பொத்துவில் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்ற மக்களுடனான சந்திப்பின்போதே அவர் இந்த உத்தரவாதங்களை வழங்கியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் பொத்துவில் மற்றும் லகுகல பிரதேசங்களைச் சேர்ந்த பொது மக்கள் எதிர்நோக்கும் பல் வேறு முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. (ச)

## யானை தாக்கி 4 வீடுகள் சேதம்

மட்டக்களப்பு.நவ.8
மட்டக்களப்பு,போரதீவுப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நவகிரி நகர கிராமத்துக்குள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு புகுந்த காட்டு யானையொன்று வீடுகளை உடைத்துள்ளதுடன், பயன்தரும் பயிரினங்களையும் அழித்துள்ளது என்று மக்கள் தெரிவித்தனர்.

கிராமத்துக்குள் புகுந்த குறித்த காட்டு யானை ஒன்று 4 வீடுகளை முற்றாக இடித்து அழித்துள்ளதுடன், மரவள்ளி, பலா, வாழை போன்ற பயிரினங்களையும் அழித்துள்ளது என்று மக்கள் கூறினர்.



கிராமத்துக்குள் புகுந்த காட்டு யானையை வெளியேற்றுவதற்கு தாம் பெரிதும் சிரமமுற்றதாக நவகிரி கிராம மக்கள் குறிப்பிட்டனர்.

நவகிரி கிராமத்துக்கு மின் கம்பங்கள் இடப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்ட போதிலும், அவை இதுவரை மக்கள் பாவனைக்கு விடப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

மக்கள் பாவனைக்கு மின்சாரம் வழங்கப்படும் பட்சத்தில் யானைத் தாக்கு தலில் இருந்து ஓரளவுக்கு பாதுகாப்புப் பெறமுடியும் என்று அந்தக் கிராம மக்கள் தெரிவித்தனர். (ச)

## புனரமைப்பின்றி பொது நூலகம்



மூதூர், நவ.8
திருகோணமலை,மூதூர் பிரதேச சபையின் கீழ் இயங்கி வந்த கட்டைபறிச்சான் பொது நூலகம், கடந்த காலப் போரால் அழிக்கப்பட்டது.

எனினும் இந்த நூலகக்கட்டடம் இன்று வரை புனரமைப்பு செய்யப்படாமல் உள்ளது. இந்த நூலகம் நீண்ட காலமாக கட்டை பறிச்சான் உப அலுவலகத்தில் பல குறைபாடுகளுடன் இயங்கி வருகிறது.

இந்த விடயம் குறித்து மூதூர் பிரதேசசபை கவனம் செலுத்துமா? என்று மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ச-40)

# இசைப்பிரியாவைப் படுகொலைசெய்த காமுகருக்கு தக்க தண்டனை வழங்குக!

## அரசை வலியுறுத்துகின்றது ஜனநாயக மக்கள் முன்னணி




சரணடைந்த ஊடகவியலாளரான இசைப்பிரியாவைப் பிடித்து உலக போர் தர்ம சட்ட திட்டங்களை மீறி காம இச்சைக்கு உள்ளாக்கி - இன்னல் பல புரிந்து மீறி இவ்வுலகை விட்டனுப்பிய காமுகருக்கு இலங்கை அரசு தக்க தண்டனை வழங்கவேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடக செயலாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சி. பாஸ்கரா தெரிவித்துள்ளார்.

இலங்கை அரச படைகளினால் முள்ளிவாய்க்காலில் அரங்கேற்றப்பட்ட இலட்சக் கணக்கான உயிர்க் காவு இச்சையின் வெளிப்பாடுகளின் ஒன்றான இசைப்பிரியா மீதான இச்சை - இன்னல்- படுகொலை இன்று இலங்கைக்கான இன்னலாக பரிணமித்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஒரு நாட்டின் உள்நாட்டு போரில் அதுவும் தனது நாட்டு மக்களை இன்னல் படுத்தி கொன்று குவித்த கொடு ரச் செயலை உலகமே கண் டித்த வேளையில் அதனை இலங்கை அரசு மறுத்து வந்தது புதிய செயல் இல்லை.

அதேபோல்தான் கொடுமைகளை பறைசாற்றி பல காணொலிகள் வந்தபோதும் அதை ஆராய்வதற்கு முன் மறுப்பதில் தீவிரமாக இருந்தது இலங்கை.

அதை இப்போ எதிரணியில் இருக்கும் அப்போதைய இராணுவ தளபதியும் நாசூக்காக அண்மையில் கூறியிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

மேலும், முன்பு கிருஷாந்தி கொலையை உடன் மறுத்த இராணுவம் பின் நிலைமை தலைகீழாக மாறியபின் கற்பழித்து கொலை செய்த இராணுவத்தினரை கைது செய்து தண்டனை வழங்கியது பழைய கதை; உலகறிந்த உண்மை.

இசைப்பிரியா கற்பழிக்கப்பட்டு கொலை செய்த காணொலி பொய் எனின் முறையான வழியில் பொய் என நிரூபிக்க வேண்டும்.

இல்லையேல் சரணடைந்த ஊடகவியலாளரான இசைப்பிரியாவைப் பிடித்து உலக போரில் தர்ம சட்டதிட்டங்களை மீறி காம இச்சைக்கு உள்ளாக்கி - இன்னல் பல புரிந்து மீறி இவ்வுலகை விட்டனுப்பிய காமுகருக்கு இலங்கை அரசு தக்க தண்டனை வழங்க வேண்டும்.

இல்லையெனில், 'அரசன் அன்றறுப்பான் இறை வன் நின்றறுக்கும்' எனும் முதுமொழிக்கிணங்க இலங்கைக்கான இன்னல் இறைவனின் தண்டனையாக மாறுவது தவிர்க்க முடியாததாகப் போய் விடும் - என்றுள்ளது.

# டுபாயில் இலங்கையரின் சடலம் மீட்பு



டுபாயிலுள்ள நீர் தாங்கியொன்றிலிருந்து இலங்கையொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

டுபாய், அல் குவோஸ் பகுதியிலுள்ள திருமணமாகாத அதிகாரிகள் மட்ட உத்தியோகத்தர்கள் வாழும் ஒரு கட்டடத்தின் கூரையிலிருந்தே இந்த சடலம் கடந்த செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

அழுகிய நிலையில் டுபாய் பொலிஸாரால் மீட்கப்பட்ட இந்த சடலம், ஒருவாரகாலமாக காணாமல் போயிருந்த 34 வயதான இலங்கையைச் சேர்ந்த சமையல்காரரின் சடலம் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

மதுவுக்கு அடிமையான இவர், ரஷ்ய உணவகமொன்றிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட நிலையில் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் எனப் பொலிஸார் இறந்தவரது நண்பர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர்.

# அச்சத்தால் மஹிந்த அரசு வழங்கியது விடுமுறை!

## அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் குற்றச்சாட்டு



பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டின் அமர்வுகள் நடக்கும்போது மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதை தடுப்பதற்காகவே நாட்டின் அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும் 8 நாள்கள் விடுமுறையை மஹிந்த அரசு வழங்கியுள்ளது என்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டார குற்றம்சாட்டியுள்ளார்.

கடந்த சில வருடங்களாக மாணவர்கள் மீது பிரயோகிக்கப்படும் துன்புறுத்தல்களுக்கு எதிராக மாணவர்கள் எதிர்ப்புகளை காட்டுவார்களாயின் அரசு மூடி மறைக்க முற்படும் பல விடயங்கள் அம்பலமாகிவிடும். இதற்குப் பயந்தே இந்த விடுமுறையை அரசு வழங்கியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும், பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு பல்கலைக்கழக மாணவர்கள் பலரின் வேண்டுகோளை அடுத்தே சகல பல்கலைக்கழகங்களுக்கும் நாளை சனிக்கிழமை தொடக்கம் எட்டு நாள்கள் விடுமுறை வழங்கப்படவுள்ளது என்று பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தமது விரிவுரைகளுக்கு வருவதில் ஏற்படக் கூடிய போக்குவரத்து சிரமம், பொதுநல வாய தலைவர்கள் மாநாட்டின் அமைப்பு ரீதியான ஏற்பாடுகள் என்பவற்றில் மாணவர்களின் பங்களிப்பு என்பவை காரணமாக மாணவர்கள் விடுமுறை கேட்டதன் காரணமாகவே இவ்வாறு தீர்மானிக்க பட்டது எனவும் அவர் கூறினார்.

இந்த விடுமுறை காலத்தில் விடுதிகளை புனரமைப்பதற்கு வசதியாக மாணவர்களை அங்கிருந்து வெளியேறுமாறும் கேட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

# 23 பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக இடமாற்றம்

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில், திட்டமிட்ட குற்றச் செயல்களைத் தடுக்கும் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர் இடம்மாற்றப்பட்டுள்ளனர்.


23 பொலிஸ் அதிகாரிகள் இவ்வாறு இடம்மாற்றப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் அறிவுரையின் படி இந்த இடம் மாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த அதிகாரிகள் நீண்ட காலமாக குறித்த பிரிவில் பணியாற்றி வருவதாலேயே இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். .

இவ்வாறு இடம்மாற்றப் பட்டவர்கள் அண்மையில் இடம்பெற்ற சூது நிலைய சுற்றி வளைப்பு ஒன்றில் பங்குபற்றியவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது



புளத்சிங்கள, கொபவக பகுதியில் கட்டிடம் கட்டுவதற்கு துப்பாக்கியுடன் சென்றவரை கைது செய்துள்ள பொலிஸார் அவரிடமிருந்து ஆறு ரவைகளையும் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த நபர் கட்டடம் கட்டுவதுடன் கட்டடம் கட்டுவதற்கான ஒப்பந்த வேலைகளிலும் ஈடுபடுபவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட சட்டவிரோத துப்பாக்கியையும் ரவைகளையும் நீதிமன்றில் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்த பொலிஸார், அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்தனர்.

# தண்டவாளத்தைக் கடந்த 7 பேருக்குத் தண்டம் விதிப்பு

கொம்பனி வீதி புகையிரத நிலையத்திற்கு அண்மையிலுள்ள புகையிரத கடவையை நடந்து சென்ற கடந்த எழுவருக்கு தலா 50 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கடவை மூடப்பட்டிருந்த சமயம் தண்டவாளத்திற்கு குறுக்கே கடந்து சென்றனர் என்ற குற்றத்தை ஒப்புக் கொண்ட 7 இளைஞர்களுக்கே கொழும்பு கோட்டை நீதவான் தலா 50 ரூபா தண்டம் விதித்தார்.

சந்தேகத்தின் பேரில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட இவர்களை பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோதே அவர்களுக்கு மேற்கண்டவாறு தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

வேலைக்காக கொழும்பு வந்த மொரட்டுவை, காலி மற்றும் வலன ஆகிய இடங்களை சேர்ந்தவர்களே ரயில்வே கடவை மூடியிருந்த வேளையில் தண்டவாளத்தை கடந்துள்ளனர்.

# ரயிலின் மிதி பலகையில் பயணித்த நபர் எதிர்த்திசையில் வந்த ரயிலில் மோதி பலி

வெள்ளவத்தை ரொக்ஷி மாடி வீட்டுத் திட்டப் பகுதிக்கு முன்னால் ரயிலில் மோதுண்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 07.20 அளவில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காலியில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலின் மிதி பலகையில் நின்று பயணித்த நபர், கோட்டையில் இருந்து பாணந்துறை நோக்கிச் சென்ற ரயிலில் மோதி வீசி எறியப்பட்டு படுகாயமடைந்து உயிரிழந்துள்ளார்.

மொரட்டுமுல்ல பகுதியைச் சேர்ந்த விஜேரத்ன நதுகே ரமேஷ் (வயது 27) என்பரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சடலம் களுபோவில வைத் திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸார் விசாரணைகளை .மேற் . கொண்டு வருகின்றனர்.

# பண்டாரவளை விபத்து: பஸ் சாரதி நேற்றுக் கைது

பண்டாரவளை - பூணாகலையில் இடம்பெற்ற இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் விபத்துடன் தொடர்புடைய சாரதியை பண்டாரவளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த விபத்தில் காயமடைந்த குறித்த பஸ்ஸின் சாரதியான எஸ்.பீ.நீல் பிரியந்த பண்டாவளை வைத்திய சாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்தார்.

சுகமடைந்த அவர் வைத்தியசாலையை விட்டு நேற்று வெளியேறும் போதே பொலிஸார் அவரை கைது செய்தனர்.

பண்டாரவளையிலிருந்து பூணாகலையை நோக்கி கடந்த 4 ஆம் திகதி திங்கட்கிழமை பயணித்த மேற்படி பஸ் சுமார் 200 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் 11 பேர் பலியானதுடன் 26 பேர் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பஸ் விபத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு தோட்டத் தொழிலாளர் சங்கம் அனுதாபம் தெரிவிப்பு

"பண்டாரவளை - பூணாகலையில் இடம்பெற்ற பஸ் விபத்தில் உயிரிழந்த, பாதிப்படைந்தவர்களின் குடும்பங்களுக்கு இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றது. அவர்களின் துன்பங்களில் நாங்களும் பங்குகொள்கின்றோம்."

இவ்வாறு இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் கே. வேலாயுதம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இக்கோர விபத்து துரதிர்ஷ்டவசமானதாகும். இவ்வாறானதொரு துயரச் சம்பவம் நடைபெற்றிருப்பதை மனித உள்ளம் படைத்த எவரும் இலகுவில் மறந்து விட முடியாது.

இருப்பினும் குடும்ப அங்கத்தவர்களை இழந்து தவிப்பவர்களின் சோகத்தில் நாம் பங்குகொண்டாலும் அந்த சோகத்தை அவர்கள் மனதிலிருந்து இலகுவில் அகற்றி விட முடியாது.

இவ்வாறான விபத்துக்களைத் தடுக்கவும் இந்த விபத்தைப்பற்றி விசாரணை செய்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் போக்குவ ரத்து அமைச்சுக்கு கோரிக்கை விடுக்கின்றோம்.

பாதிப்புற்றவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்க அந்தப் பிரதேசங்களின் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க கிளைக் காரியாலயங்கள் தயாராக உள்ளன.

உதவி தேவையானால் கிளைக் காரியாலயங்களை அணுகுமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கெலும் மக்ரேக்கு இங்கு வர விசா; எதிர்பார்க்க இயலாத அதிசயம்...!

இலங்கை அரசின் போர்க் குற்றங்களை அடிக்கடி அம்பலப்படுத்திவரும் உலகப் புகழ்பெற்ற பிரிட்டிஷ் ஊடக வியலாளர் கெலும் மக்ரே, கொழும்பில் அடுத்த வாரக் கடைசி நாள்களில் நடைபெற உள்ள பொதுநலவாய மாநாட் டுக்கு வரவுள்ளார். அதற்கான விசா வழங்கப்பட உள்ளது.

மாநாட்டில் செய்தி சேகரிப்பதற்கு இங்கு வரும் அனைத்துலக ஊடகவியலாளர்களுடன் அவரும் பணிபுரிவார் என்பது ஊர்ஜிதமாகி உள்ளது.

"போர்க் குற்றங்கள்", "போர் தவிர்ப்பு வலயம்" ஆகிய ஆவணப்படங்கள் மூலம் அனைத்துலகையும் அதிர்ச்சிக் குள் ஆழ்த்தியவர் கெலும் மக்ரே. இந்தியா செல்வதற்கு அந்த நாட்டு அரசு அவருக்கு அனுமதி மறுத்துள்ள நிலையிலும், எமது நாட்டு அரசு அனுமதித்துள்ளமை ஒரு வகையில் ஆச்சரியத்துக்கு உரியதே.

அவர் ஆகப் பிந்தி, தமிழீழ விடுதலைப் புலிகளினால் நடத்தப்பட்ட தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியின் செய்தி வாசிப்பாளர் இசைப்பிரியா குறித்த காணொலியைத் தயாரித்து ஒளிபரப்பி இருந்தார். அந்தக் காணொலி குறித்த சர்ச்சை கனத்துப் பெருத்துவரும் சமகாலத்தில், பொதுநலவாய மாநாடு நடைபெற உள்ளது. அதனாலேயே பல தரப்புகளும் இலங்கை அரசு, கெலும் மக்ரேக்கு இங்கு வருவதற்கு அனுமதி வழங்கியமை குறித்து மூக்கில் விரல் வைக்கின்றன. பேராச்சரியம் வெளியிடுகின்றன.

இத்தனைக்கும், பொதுநலவாய மாநாட்டுக்கான நாள் நெருங்கி வந்தபோது, கெலும் மக்ரேக்கு கொழும்பு (இலங்கை) வருவதற்கு விசா வழங்கவே கூடாது என்று தென்னிலங்கையில் உரத்த குரலில் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

அதன் பிரதிபலிப்பாக, அதனைச் சீரணித்துக் கொண்டு, ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, கெலும் மக்ரேக்கும் மற்றும் பதினான்கு அனைத்துலக ஊடகவியலாளர்களுக்கு கறுப்புப் பட்டியலைத் தயாரித்து ஜனாதிபதியின் அங்கீகாரத்தைக் கோரியிருந்தார். ஆனால் ஜனாதிபதி அதனை நிராகரித்துவிட்டார் என்று முன்னர் தகவல்கள் வெளிவந்திருந்தன.

கெலும் மக்ரே நேற்று வியாழக்கிழமை (நவம்பர் ஏழாம் திகதி) இந்தியா வரவும், புதுடில்லியில் போர்க்குற்ற ஆவ ணப் படங்கள் தொடர்பான ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தி ஆவணப் படத்தைத் திரையிடவும் திட்டமிட்டிருந் தார் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

எதிர்வரும் 14 ஆம் திகதி புதுடில்லிக்கு ஒரு நாள் பயணம் மேற்கொள்ளும் பிரதமர் கமெரூனுடன் இலங்கைப் பயணத் தில் இணைந்துகொள்ள கெலும் மக்ரே தீர்மானித்திருந்தார்.

இந்தியா செல்வதற்கான விசா கிடைக்காததால் அவர் லண்டனில் இருந்து கொழும்பு செல்ல புதிதாக விசாவுக்கு விண்ணப்பிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்தது. இது கெலும் மக்ரேக்குப் பெரும் ஏமாற்றம் தந்திருந்ததாகத் தகவல்கள் தெரிவித்தன.

மேலும், மக்ரேயின் இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான ஆவணப்படம், இலங்கையின் எதிர்ப்புக்கு மத்தியில் ஐ.நா. மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஏற்கெனவே திரையிடப்பட்டுவிட்டது.

மலேசியாவில் இது திரையிடப்பட்டபோது பொலிஸாரும், தணிக்கை அதிகாரிகளும் இது திரையிடப்பட்ட மண்ட பத்தை முற்றுகையிட்டு அதன் ஏற்பாட்டாளர்களைக் கைது செய்தனர்.

இந்தியாவில் இந்த ஆவணப்படம் திரையிடப்படுவதைத் தடுப்பதே கெலும் மக்ரேக்கான விசா அனுமதி மறுப்புக்குக் காரணம் என்பது மிகத் தெளிவானது. கெலும் மக்ரேக்கு விசா வழங்குவதன் மூலம், இலங்கையின் அதிருப்தியைச் சம்பாதித்துக்கொள்ள இந்தியா விரும்பாதிருந்திருக்கலாம்.

இலங்கை மீதான போர்க்குற்றங்களைக் காரணம் காட்டி பொதுநலவாய மாநாட்டில் மன்மோகன் சிங் கலந்து கொள்வதை எதிர்ப்போருக்கு, கெலும் மக்ரேயின் இந்திய விஜயமும் அவர் திரையிடும் இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான ஆவணப்படமும் மேலும் தீனிபோடலாம் என்று இந்தியா அஞ்சுவதாகத் தகவல்கள் வெளிவந்தி ருந்தன.

கெலும் மக்ரேக்கு விசா அனுமதி மறுத்ததன் மூலம் இந்திய அரசு மற்றொரு தடவை இலங்கைப் பிரச்சினையில் தனது தளம்பல் போக்கை வெளிப்படுத்தி உள்ளது.

இத்தகைய ஓர் இறுக்கமான சூழ்நிலையில், இலங்கை வருவதற்கு, ஊடகவியலாளர் கெலும் மக்ரேக்கு விசா வழங்குவதற்கு ஜனாதிபதி அனுமதி கொடுத்திருப்பதால், தெற்கின், தமிழர் விரோத தீவிரவாதப் போக்குடைய சக்திகளை, அது கொதிப்படையச் செய்யும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

கொழும்பு வரும் மக்ரே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் சந்தித்துச் செவ்வி பெறுவார் என்று மிகப் பிந்திய தகவல்கள் தெரிவித்தன. அதன் பின்னர் மக்ரே தமது முந்திய நிலையிலிருந்து தடம் புரள்வாரா என்பதனைப் பொறுத்திருந்து தான் பார்ப்போமே.....

# தமிழரின் அரசியல் உரிமைக்காக இறுதிவரை போராடியவர் ஜீ.ஜீ

அ.விநாயகமூர்த்தி
யாழ்.மாவட்ட
நாடாளுமன்ற உறுப்பினர்.

**தமிழ் மக்களின் உரிமைக்காகவும், நலன்களுக்காகவும் இறுதிவரை உழைத்த தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 112 ஆவது பிறந்த தினம் (08.11.2013) இன்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

இராணியாரின் சட்ட ஆலோசகர் (Q.C) கணபதிப்பிள்ளை காங்கேசர் பொன்னம்பலம் 1901 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 08 ஆம் திகதி பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம் புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் கற்ற அவர் தனது மேற்படிப்பை கொழும்பு புனித ஜோசப் கல்லூரியில் தொடர்ந்தார். இலங்கைப் பல்கலைக் கழகத்தின் விவசாயத்துறைக்கான புலமைப் பரிசிலை 1921 ஆம் ஆண்டு பெற்றுக் கொண்ட ஜீ.ஜீ. கேம்பிறிட்ஜ் நகரின் Fizwilliam House இல் இணைந்து கற்று இயற்கை அறிவியற் துறையிலும், சட்டத்துறையிலும் இரண்டாம் வகுப்பின் உயர் தரத்தில் சிறப்புச் சித்தியைப் பெற்றார். 1925 ஆம் ஆண்டு முதுகலை மாணிப் பட்டத்தை கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகம் அவருக்கு வழங்கியது. 1925 ஆம் ஆண்டு லிங்கன்ஸ் இல் சேர்ந்து கொண்ட இவர் 1927 ஆம் ஆண்டு இலங்கை உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக (அட்வகேற்) சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

சொந்தமாகத் தொழில் புரிந்து சட்ட அறிஞராகிய இவர், 1937 ஆம் ஆண்டில் தேச வழமைச் சட்ட ஆணையம் மற்றும் 1959 ஆம் ஆண்டு புதுடில்லியில் நடைபெற்ற அனைத்துலக நடுவர் ஆணையத்திலும் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டு தனது சட்டப் புலமையால் உயர் கௌரவம் பெற்றார்.

அரசியலில் ஆர்வம் காட்டத் தொடங்கிய ஜீ.ஜீ யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தேர்தல் பகிஷ்கரிப்பைத் தொடர்ந்து 1934 ஆம் ஆண்டு பருத்தித்துறை தேர்தல் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றம் செல்லும்வரை தமிழ் சமூகத்துக்காக குரல் கொடுப்பதற்காக எவரும் இருக்கவில்லை. காலஞ்சென்ற எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்காவும் ஏனையோரும் சேர்ந்து சிங்கள மகாசபையை ஸ்தாபித்தபோது ஜீ.ஜீ. அவர்கள் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியை ஸ்தாபித்தார். சமநிலைப் பிரதிநிதித்துவம் (ஐம்பதுக்கு ஐம்பது) என்பதே அவரது அரசியல் கோட்பாடாக முன் வைக்கப்பட்டது.

காலஞ்சென்ற சேர்.பொன். இராமநாதன், சேர்.பொன்.அருணாசலம் ஆகியோருக்குப் பின் அரசியலில் அவர்களது இடைவெளியை நிரப்பிய தமிழர் தம் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் என்றே கூற வேண்டும் என காலஞ்சென்ற பேராசிரியரும், அமரர் செல்வநாயகத்தின் மருமகனுமாகிய எ.ஜே.வில்சன் இலங்கையில் தேசிய வாதம் என்ற தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அமரர் ஜீ.ஜீ அவர்கள் 1939 இல் அரச சபையில் சமநிலைப் பிரதிநித்து வம் பற்றிய தமது உரை யில் 'தமிழ்ச் சமூகத்தின் நிலைப்பாடு இதுதான் என நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன். இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளாக நாம் இங்கு வாழ்ந்து வந்திருக்கின்றோம். தமிழ் சமூகத்தின் ஒரு கிளையினர் சிங்களவர்களை விட நீண்ட காலம் இங்கு வாழ்ந்து இருக்கின்றனர். இதுவே எமது தாயகம். அரசியல் ரீதியாகவும், வேறு வகையிலும் நிரந்தர உரித்துக்களை கோருவதற்கு சிங்கள மக்களுக்கு உள்ள அதே உரிமை எமக்கும் உண்டு. நாம் வேண்டப்படாத அந்நியர்களாக நடத்தப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது". எனத் தெரிவித்தார்.



1945 இல் தமிழ் காங்கிரஸின் சார்பில் ஜீ.ஜீ. பொன்னம்பலம் சோல்பரி கமிஷன் முன் தோன்றி சிறுபான்மை மக்களின் நிலைமையை விளக்கியதுடன், சம பிரதிநிதித்துவக் கோட்பாட்டையும் முன் வைத்தார்.

சிங்களவருக்கும், சிறுபான்மையினரான தமிழர்களுக்கும் நாடாளுமன்றத்தில் சம பிரதிநிதித்துவம் இருக்க வேண்டுமென்பதே அந்தக் கோட்பாடாகும். 1922 இல் அரசியல் நிலைப்பாட்டுக்கு அடித்தளமிட்ட சேர் வில்லியம் மனிங் 'ஒரு பெரும்பான்மையினம் சிறுபான்மையினம் மீது ஆதிக்கம் செலுத்தக்கூடாது" என்ற கருத்தை வெளிப்படுத்தினார். அவரது அரசியல் சீர்திருத்தத்துக்கு அமையவே ஜீ.ஜீ.பொன்னம்பலம் சம பிரதிநிதித்துவக் கோட்பாட்டை முன்வைத்தார். சோல்பரி கமிஷன் சம பிரதிநிதித்துவக் கோட்பாட்டை ஏற்காவிடினும், ஜீ.ஜீ.யின் வாதத்தால் பிரிவு 29 போன்ற சில பாதுகாப்புக்களை சிறுபான்மையினரின் நன்மை கருதி அரசியல் சாசனத்தில் உட்புகுத்த வேண்டுமென பரிந்துரை செய்தது. ஜீ.ஜீ.யின் ஆக்ரோசமான 50 க்கு 50 என்ற சம பிரதிநிதித்துவக் கோரிக்கையை நியாயமற்றது என்று தட்டிக்கழித்தவர்களுக்கு நாட்டில் உள்ள பிரச்சினை பற்றி சரியான பார்வை இருந்திருக்கவில்லை என்பது பின்னால் வெளிச்சமாயிற்று. 1982 இல் கனடாவில் அரசியலமைப்புச் சீர்திருத்தம் பற்றிப் பேசப்பட்டபோது பன்மைத் துவ கலாசாரம் கொண்ட நாடொன்றில் சம பலப் பிரதிநிதித்துவமே பொருத்த மாக இருக்குமென்று அங்குள்ள அரசியலமைப்புச் சட்ட அறிஞர்கள் கருத்து வெளியிட்டிருந்தனர்.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களில் 48 வீதமானோர் வடக்கு, கிழக்கு மாகா ணங்களிலும் மிகுதி 52 வீதமானோர் ஏனைய 7 மாகாணங்களிலும் வாழ்கின்றனர். ஆதலால் இனப் பிரச்சி னைக்குத் தீர்வு என வரும் போது இந்த விடயம் கருத்தில் எடுக்கப்படல் வேண்டும். 1976 ஜனவரி 30 ஆம் திகதியன்று கருணாநிதியின் தமிழ்நாடு அரசாங்கம் ஊழல் குற்றச்சாட்டுக்களின் பெயரில் இந்திராகாந்தியின் மத்திய அரசாங்கத்தால் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்திய உச்ச நீதிமன்றத்தின் நீதியரசர் சர்க்காரியா தலைமையில் தனிமனித விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் அந்த ஆணைக்குழுவின் முன்தோன்றி வாதிட்டார். மத்திய மாநில அரசு உறவில் பின்பற் றுகின்ற இரட்டைத் தரங்களை ஆழ மாக ஆராய்ந்து விளக்கிய அவர் சாட்சி யம் அளிக்க இருப்பவர்களை குறுக்கு விசாரணை செய்ய அனுமதியளிக் கும்படி கோரினார். ஆனால் நீதியரசர் அதனை நிராகரித்தார். அப்போது ஜீ.ஜீ.பொன்னம்பலம், கருணாநிதி மீது பழிவாங்கும் நோக்குடன் நீதிமன்றத்தின் இயல்பும் தொழிற்பாட்டு நடைமுறைகளும் இருக்கின்றன என சட்டவாதங்களுடன் வெளிப்படுத்தினார். பின்னர் தமிழ் நாட்டு வழக்கறி ஞர்களைக் கொண்டதான தமது உயர் வழக்கறிஞர் குழுவினருடன் வெளி நடப்புச் செய்து அந்த நீதிமன்ற விசார ணைகளைத் தொடர்ந்தும் பகிஷ்கரித் தார். அதுவே ஆணைக்குழுவின் கலைவுக்குக் காரணமாக அமைந்த தைத் தொடர்ந்து கருணாநிதி வெற்றியீட்டினார். அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் மற்றும் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதான ஜூரர்கள் இல்லாத (ட்ரயல் -அற்-பார்) நீதிமன்றத்தில் அவர்களுக்காக வாதாடி அந்த நீதிமன்றம் அதனை விசாரிக்க உரித்துடையதல்ல என்ற சட்ட நுட்பத்தை எடுத்துரைத்து அந்த வழக்கைத் தகர்த்தெறிந்தார். மிகத் திறமையான குற்றவியல் வழக்கறிஞராக திகழ்ந்த இவர் றஞ்சினி டக்ஸி கப் வழக்கில் இங்கிலாந்தில் இருந்து வருகைதந்து சாட்சியமளித்த கைவிரல் அடையாள நிபுணரை குறுக்கு விசாரணை செய்ததைத் தொடர்ந்து கைவிரல் அடையாளம் பற்றிய சட்டமே திருத்தியமைக்கப்பட்டது.

தமிழ் மக்களின் உரிமைக் காகவும் நலன்களுக்காகவும் தனது இறுதி மூச்சுவரை அரசியல் ரீதியாகப் போராடி 1977 ஆம் ஆண்டு மாசி மாதம் 09 ஆம் நாள் அமரத்துவம் எய்திய ஜீ.ஜீ. க்கு நன்றி செலுத்த தமிழ்ச் சமூகம் உண்மையிலேயே கடமைப்பட்டுள்ளது.

# "காக்க காக்க கனகவேல் காக்க"

கந்த தியாகராசா



முருகக்கடவுள் செந்நிற வடிவினன். பேரழகன். தமிழ்த் தெய்வம். முருகப் பெருமானுக்குரிய விரதங்கள் பலவுள. அவை எல்லாவற்றிலும் மேலான கந்தசஷ்டி விரதம். மேலைத் தொல்கதிக்கு வழிசெய்வது: இவ்வுலக சுக வாழ்வுக்கும் அருளும் ஒன்றாகும்.

கந்தசஷ்டி விரதம் ஓராறு நாள்கள் ஆறுமுகனை எண்ணி நோன்பிருந்து அனுஷ்டிக்கப்படுவது. கடுந்தவத்துக்கு ஒப்பானது. உடம்பினையொறுத்து, உணவொறுத்து ஆறு நாள்கள் விரதம் அனுஷ்டிக்கப் படுவது.

அரியதான தவத்தை விஞ்சியது ஏதுமில்லை. நிகரானது எதுவுமில்லை. இதனால் பொறி வழி செல்லும் அவாநீங்கும், பொறுமை குடிபுகும். காமம், வெகுளி, ஈயாமை, மயக் கம், கர்வம், காழ்ப்புணர்வு என்பனவும் அற்றுப்போகும். ஸ்கந்தன் என்றால் ஒன்றுபட்டவன் என்றும் பராக்கிரமத்தை வற்றுச் செய்பவன்என்றும்பெரியவர்கள்பொருள் கொள்வர். ஆகவே கந்தனைச் சிந்தையுள் வைத்து விரதத்தை மேற்கொண்டால் தீயவை விலகிப் போகும். நல்லவை உட்புகும்.

ஐப்பசித் திங்கள், தீபத் திருநாளையடுத்து வரும் பிரதமை தொடக்கம் சஷ்டி ஈறாகவுள்ள ஆறு தினங்கள் கந்தக் கடவுளை எண்ணி அனுஷ்டிக்கும் இந்த விரதம் இந்த உலகின் சுகவாழ்வையும், ஓயாப் பிறவி ஏழும் ஓய்ந்து பேரின்பப் பெருவாழ்வை எய்த உதவுவதால் உபவாசம் இருந்தும், இரவில் மட்டும் பால், பழம் அருந்தியும், ஐந்து தினங்கள் ஒருவேளை உணவு உட்கொண்டு இறுதி நாளில் நோன்பிருந்து உணவையொறுத்தும் பக்தியோடு கந்தசஷ்டி விரதத்தை மேற்கொள்வர்.

இந்த ஆறு தினங்களும் முருகன் திருக்கோயில்களில் வழிபாடு செய்தும், முருக நாமங்களை ஓதியும், கந்த புராணத்தை படித்தும், பொருள் கேட்டு அறிந்தும், கந்தசஷ்டி கவசம், கந்தரனுபூதி, கந்தரலங்காரம் போன்ற முருகன் புகழ் பாடும் தோத்திரங்களைப் பாடியும் இறுதி நாளில் ஆரம்ப தினத்தன்று சங்கற்பம் செய்து தரித்த தர்ப்பையை, தட்சணையுடன் சேர்த்து வேதியர்களிடம் ஒப்படைத்து ஏழாம் நாள் விடியும் பொழுதில் நீராடி புனிதராகி அனுஷ்டானங்களை நிறைவு செய்து பாரணைப் பூசையையும் முடித்து விரதத்தை பூர்த்தி செய்வது வழக்கில் உள்ளதொன்று.

ஏழாம் நாள் குமரன் ஆலயங்களில் சூரன் போர் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படும். இந்தப் போரா னது கந்தக் கடவுளுக்கும் சூரபத் மனுக் கும் நடக்கும் மாபெரும் போரன்று. 'உள்ளது அழியாது இல்லது தோன்றாது' என்ற வாதத்துக்கு ஏற்புடையது.

சூரபத்மன் அசுர குலத்தில் பிறந்தவன். சூரர்குலத்துக்கு ஏற்புடையதான யாகங்களைச் செய்தான். சுக்கிராச்சாரியாரை குருவாகக் கொண்டு உபதேசம் பெற்றான். அசுர குலத்தவரான குருவும் நல்லனவற்றை போதித்தாரில்லை. கோபம், கொலை, களவு, காமம், வஞ்சனை என்பனவே வாழ்வுக்கு உகந்ததென்றும், அவற்றைச் செய்தலே சூர்க்குலத்துக்கு மிகவும் தக்க செயலென்றும் நீதி, நேர்மை, தர்மம் என்பன மறக்கப்பட வேண்டியது என்றுங் கொடுமொழிகள் சொன்னார். குருவின் உபதேசம் சூரனுக்கு தேனாய் இனித்தது. தந்தை காசிபனும் அன்னை மாயாவும் குருமுனியின் குருவாக்கு சாலச் சிறந்தவை. எனவே நீ அவற்றை கைக்கொள்ளுதி. மேலும் நூற்றியெட்டு யுகங்கள் உயிர் வாழவும் ஆயிரத்துஎட்டு அண்டங்களையும் அரசாளப் பிறந்தவன் நீ. தம்பி உள்ளான் படைக்கஞ்சுவரோ. எனவே கொற்றவனாய் இருந்து கோலோச்சுவாய். வருந்தி நீ பெற்ற வரங்கள் உனக்கு கை கொடுக்கும். நீ அண்டமெல்லாவற்றையும் ஆளுதி. யுகம் தோறும் வாழுதி என ஆசீர்வதித்தனர்.

இறுமாப்பும் கொடுஞ்சினமும், மாயைகள் நிறைந்தவனுமான சூரன், தேவர்களை வதைத்தான். சிறை வைத்தான். உயிர்களுக்கு எல்லாம் இடையூறு விளைவித்து இம்சைப்படுத்தினான். அவனது கொடுங்கோன்மை, அட்டூழியங்கள் அளவு கூர்ந்துபோயின. துன்பத்தால் துயர் உற்றார், ஈற்றில் ஈசனைச் சென்றடைந்தனர். தஞ்சம் புகுந்தனர். முக்கண் முதல்வனிடம் தங்கள் குறையை முறையிட்டனர். தேவர்கள் தங்கள் இடும்பையைக் களைந்து சிறை மீட்டருள வேண்டினர். வேண்டுவார் வேண்டுவதை ஈய்ந்துவக்கும் ஈசன் அவர்கள் துயர் நீக்கத் திருவுளம் கொண்டார். தனக்கு ஈடான சற்புத்திரன் மூலம் பெருந்துயர் போக்க எண்ணினார். நுதல் விழி சிந்திய தீப் பொறிகள் பொய்கையில் உள்ள ஆறு கமலங்களில் ஆறு குழந்தைகளாக செந்நிற வடிவோடு ஈடிணையில்லா அழகோடு தவழ்ந்தன. மலர்ந்தகுழவிகளை உமையன்னை அணைத்த போது ஆறு திருவுருவும் ஓர் உருவாகி ஆறுமுகனாகி ஜெகஜோதியாக உலகம் உய்ய உருவெடுத்தான்.

கருணை வடிவான கந்தன், தர்மம் வெல்லவும், நீதிதளைக்கவும், பிறர் படுந்துயர் நீங்கவும் வேண்டி போர் செய்தான். அன்னை உமையவள் உவந்து அளித்த சக்திவேலினால் சூர்க்குலத்தை அழித்தார். சிங்க முகாசுரன், தாரகாசுரன் தலைகள் வீழ்ந்தன. கிரௌஞ்ச மலையும் இரு கூறானது. மாயைகளின் வல்லவனான சூரன் மின்னல் போல பல வடிவங்களில் தோன்றி போர் செய்தான்.

ஆறாச்சினத்துடன், மாறாத குணம் கொண்டு நின்ற சூரனுக்கு நல்லுணர்ச்சியை ஏற்படுத்த எண்ணிய முருகன் திருப்பெருவடிவம் கொண்டார். அந்தமும் ஆதியும் இல்லா அப்பெருவடிவம் கண்டு சூரன் திகைத்தான். முருகனின் ஒளியும் சீரும், இளமையும் என்னை மயக்குகின்றதே என ஒரு கணம் வியந்து நின்றான். இவன் பாலன் இல்லை. இவன் பரமனேதான். இவனை வலம் வந்து சிரம் தாழ்த்திப் பணிதல் வேண்டும் என்று ஏங்கிய சூரன் மனதில் மீண்டும் அகந்தை புகுந்தது. மீண்டும் மீண்டும் மாயைகள் காட்டி போர் செய்தான். ஈற்றில் மலைபோல நின்றவன் மரமானான். கூர்வேல் மரத்தை இரு கூறாக்கியது.

சேவலும் மயிலுமாக சூரன் உருமாறினான். சேவல் கொடியானது, மயில் முருகனுக்கு ஊர்தியானது. அதே போல சிங்கமுகாசுரன் அம்பிகைக்கு அரிவாகனமானான். தாரகாசுரன் கரியாகி ஐயப்பனுக்கு வாகனமானான்.

'தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன்னுற்றால் தூயவராகி மேலைத் தென்கதியடைவர்' என்பதை சூரன் வாழ்வு எமக்கு எடுத்தோதுகின்றது. எனவே இன்று கந்தசஷ்டி விரதநாளில் நல்லவற்றை எண்ணி, நல்லவற்றை செய்தால் கந்தன் கருணை கிடைக்கும், எண்ணியவை ஈடேறும், வேண்டும் வரங்கள் கைகூடும்.

துன்பத்தை சுமந்து, துயரப்பட்டு, அச்சப்பட்டு மௌன விரதம் பூண்டு காலத்தைக் கழிக்கும் எம்மினத்துக்கு நல்லாறுதலும் அமைதியும் விடிவும் கிடைக்க கந்தனின் கருணையை இந்தக் கடும் நோன்புக் காலத்தில் வேண்டுவோம். இன்றளவும் கிடைக்காத நல்வாழ்வு இனிமேலாகிலும் கிடைக்க மால் மருகன் மலர்ப்பாதம் பணிவோம். நல்ல பயன் பெறுவோம்! "காக்க காக்க கனகவேல் காக்க"!

# உறைந்த சாட்சிகள்

சேற்றில் வீழ்ந்த செங்காந்தள் மலராக... இசைப்பிரியா வீழ்ந்துகிடக்கும் காட்சி துடிதுடிக்கவைக்கிறது. இன விடுதலைக்காக கள முனையில் கால் பதித்து நின்ற ஒரு பெண் போராளி, அவமானகரமான முறையில் கொல்லப்பட்டிருக்கிறார். எதிரியின் கரங்களில் உயிருடன் பிடிபட்டு, அணு அணுவாக சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட இசைப்பிரியாவின் இறுதி நிமிடங்களை எண்ணிப்பார்க்கவே நடுக்கமாக இருக்கிறது.

இன விடுதலைக்காக இறுதிவரை போர்க்களத்தில் நின்ற ஓர் இளம் போராளிக்கு, அந்தக் கணம் எத்தனை பயங்கரமானதாக இருந்திருக்கும்?

சாகும்போது அந்தப் பெண்ணுக்கு வயது 27. எத்தனை எத்தனை கனவுகள் இருந்திருக்கும்... இளமைத் துள்ளல் உற்சாகத்துடன் பட்டாம்பூச்சியாகச் சுற்றித் திரியவேண்டிய பருவம். விரும்பி அதைத் துறந்தவர் இசைப்பிரியா. இன விடுதலையில் தன் பங்காக ஊடகம் வழியே புகுந்தார். இளையோர் மத்தியில் விருப்பத்துக்குரிய முன்மாதிரியாகத் திகழ்ந்தார். இறுதியில் நந்திக் கடலோரத்தில், கொத்துக் குண்டுகளின் பின்னணி ஒலியில், எதிரிகளின் கரங்களில் சிக்கிச் சிதைக்கப் பட்டார். இது இசைப்பிரியாவுக்கு மட்டும் நேர்ந்த கதி அல்ல; இலட்சம் விடுதலைப் போராளிகளின் காணொலிச் சாட்சி அவர்.



"—"

நிராயுதபாணிகளைத் தாக்கக் கூடாது என்கிறது போர் விதி. அதை நசுக்கி மிதித்து விட்டுத்தான் இலங்கையின் ஹிட்லராக தன்னை நிலை நிறுத்திக்கொண்டார் இலங்கையின் ஆட்சியாளர்.

**இன்னொரு ஹிட்லர்**

நிராயுதபாணிகளைத் தாக்கக் கூடாது என்கிறது போர் விதி. அதை நசுக்கி மிதித்து விட்டுத்தான் இலங்கையின் ஹிட்லராக தன்னை நிலைநிறுத்திக்கொண்டார் இலங்கையின் ஆட்சியாளர். இதற்கு இசைப்பிரியா இன்னொரு சாட்சி. ஆனால், இதுவே முதல் சாட்சி அல்ல; இறுதிச் சாட்சியும் அல்ல. இனிமேலும் இப்படியான மனம் கனக்கவைக்கும் சாட்சிகள் வரலாம்; வரும். இத்தகைய சாட்சிகள் ஏதுமற்றவர் களின் இரக்கத்தைக் கோரிக் கண்ணீரை வர வைப்பதால், எந்தப் பயனும் இல்லை. மாறாக, அதிகாரத்தில் உள்ளோரின் மனச்சாட்சியை அறைய வேண்டும். ஆனால், இப்போதும் இரக்கமற்று உறைந்துபோயிருக்கும் கொடுங் கோல் கொடுமையை என்னவென்று சொல்ல!


நன்றி-ஆனந்தவிகடன் -

# கிளிநொச்சியில் அமைக்கப்படுகின்றது சினைப்படுத்தும் விசேட பண்ணை

யாழ்ப்பாணம், நவ .8
நல்லினமாடுகளைச்சினைப் படுத்தல் செய்வதற்கான விசேட பண்ணை ஒன்று கிளிநொச்சியில் அமைக் கப்பட்டு வருவதாக வட மாகாண கால்நடை, விவ சாய அமைச்சின் செய லாளர் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:-
வடமாகாணத்தின் பால் உற்பத்தியை அதிகரிப்ப தற்கு நல்லினப் பசுமாடு களை உருவாக்க வேண் டியுள்ளது. இதற்கமைவாக விவசாயத் திணைக்களத் தின் திட்டத்துக்கு ஏற்ப மாகாணசபை நிதி மூல மாக கிளிநொச்சியில் விசேட சினைப்படுத்தல் பண்ணை யொன்று அமைப்பதற் கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. பண்ணை அமைக் கும் பணிகள் இந்த வருட இறுதிக்குள் முடிவடைந்து விடும். அடுத்த வருடம் ஜன வரி மாதம் தொடக்கம் மாடுகளைச் சினைப்படுத் தும் நடவடிக்கைகள் ஆரம் பிக்கப்படும். உள்ளூர் மாடு களை நல்லின மாடு களாக மாற்றுவதற்கென சினைப் படுத்தல் மேற்கொள்ளப் படும். இதனூடாக அதிக ளவு பால் உற்பத்தி செய்யப் படும் என எதிர்பார்க்கப் படுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(க-14)

"_"

**கிளிநொச்சியில் விசேட சினைப் படுத்தல் பண்ணை யொன்று அமைப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின் றன.**



கைதடி மத்தி விநாயகர் சனசமூக நிலையத்துக்கு, அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் நேரடியாகச் சென்று சனசமூக நிலைய நிர்வாகத்தினருடன் கலந்துரையாடல் நடத்தி இருந்தார். இதன்போது தலைவர் செல்லையா மயூரனால் அந்தப் பகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில் மாகாணசபை உறுப்பினருக்கு எடுத்துக் கூறப்பட்டது. (வ-5)

# வலி.தென்மேற்கில் சட்டவிரோத மாட்டிறைச்சி விற்பனை

## நடவடிக்கை எடுக்கக் கோருகிறார் பிரதேச சபை உறுப்பினர் நாகேந்திரன்

வலி.தென்மேற்கு, நவ.8
வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள சில மாட்டிறைச்சி கடைகளில், சுகாதார விதி முறைகளுக்கு மாறாக வேறு இடங்களில் வைத்து சட்ட விரோதமான முறையில் வெட்டப் படும் மாடுகளின் இறைச்சி விற் பனை செய்யப்படுவதாகப் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.நாகேந்திரன் சுட்டிக் காட்டி யுள்ளார். இவ் வாறு வெட்டப்படும் மாடு கள் நோய்த் தாக்கத்துக்குள் ளானவையாகவும் திருடப்பட்டவையாக வும் இருக்கலாம் என்று அச்சம் தெரிவித்துள்ளதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் கோரியுள் ளார். வலி.தென் மேற்கு பிரதேசத்தில் ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், பண்டத்தரிப்பு ஆகிய இடங்களில் மாட்டிறைச்சிக் கடைகள் இயங்கி வருகின்றன.
காக்கைதீவு கடற்கரையில் பல வருடங்களாக இயங்கி வந்த கொல்களம் போர்ச் சூழல் காரணமாக மூடப்பட்டதை அடுத்து வலி.தெற்கு, மேற்கு ஆகிய பிரதேசங்களிலுள்ள கொல்களங்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன.
மாட்டிறைச்சிக் கடைக்காரர்களின் கோரிக்கைகளை அடுத்து மாதகல் பகுதியிலுள்ள வலி.தென் மேற்கு பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் பல இலட் சம் ரூபா செலவில் கொல் களம் அமைக்கப்பட்டு இயங்கி வந்தது அந்தக் கொல்களம் இயங்கி வந்த காணியை பிரதேச சபையின் அனுமதியின்றி ஆக்கிரமித்துள்ள பாதுகாப்புப் படையினர் அந்தக்காணியில் முகாம் அமைத்துள்ளனர்.
இதனால் மீண்டும் கொல் களம் இல்லாத நிலை மாட் டிறைச்சிக் கடைக்காரர்களுக்கு ஏற்பட்டது. அவர்கள் கடந்த காலங்களைப் போல் அருகிலுள்ள பிரதேச சபைகளின் கொல்களங்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.
சுகாதாரப் பகுதியினரின் சோதனைகளுக்குப் பின் வெட் டப்படும் மாடுகளின் இறைச்சி முத்திரையிடப்பட்டு விற்பனை செய்யப்படுவது வழக்கம். இந்த நிலையில் வலி. தென் மேற்குப் பிரதேசத்திலுள்ள சில கடைகளில் சுகாதார விதி முறைகளுக்கு மாறாக, வேறு இடங்களில் வைத்து வெட்டப் படும் மாடுகளின் இறைச்சிமாட்டிறைச்சி விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (வ-115)

"_"

**வலி.தென் மேற்கு பிரதேசத்தில் ஆனைக் கோட்டை, நவாலி, மானிப்பாய், பண்டத் தரிப்பு ஆகிய இடங்களில் மாட்டிறைச்சிக் கடைகள் இயங்கி வருகின்றன.**

தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?



**மேடம்:** வியாபார ரீதியாக சிலரைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதி கரிக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக் கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும்.



**இடபம்**: சில வேலைகளை நீங்களே முன் னின்று முடிப்பது நல்லது. யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். தாழ்வுமனப்பான்மை வந்து நீங்கும். உத்தியோகத்தில் முக்கிய கோப்புகளைக் கையாளும் போது அலட்சியம் வேண்டாம்.



**மிதுனம்**: வெளிவட்டாரத்தில் மதிக்கப்படு வீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்தபடி உதவிகள் கிடைக்கும். மறைமுக போட்டிகளை வெல்வீர்கள்.



**கடகம்** : முடியாமல்போன சில காரியங் களை இன்று முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பழைய நண்பர்களின் சந்திப்பு நிகழும். பேச்சில் கம்பீரம் பிறக்கும்.



**சிங்கம்**: உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். வேலை யாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக் கும். உத்தியோகத்தில் மேலதிகாரியிடம் அனுசரித்துப் போவீர்கள். புதிய எண்ணங்கள் மனதில் தோன்றும்.



**கன்னி**: மனக்குழப்பங்கள் நீங்கி தெளி வான முடிவுகளை எடுப்பீர்கள். வெளி வட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள்.

நாளை
ஐப்பசி-23 சனிக்கிழமை 09.11.2013
திதி: ஸப்தமி பி.இ.04.28 வரை
நட்சத்திரம்: உத்தராடம் பி.ப.4.03 வரை
சுபநேரம்: 03.05 - 04.35 வரை
இராகுகாலம்: 9.05 - 10.35 வரை



**துலாம்**: வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். தலைவலி, இடுப்பு வலி நீங்கும். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் வில கும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். கோபம் நீங்கும்.



**விருச்சிகம்**: நீண்டநாள் ஆசைகளைப் பூர்த்தி செய்துக்கொள்வீர்கள். பணவரவு திருப் திகரமாக இருக்கும். வெளியூர்ப் பயணங் களால் சந்தோஷமடைவீர்கள்.



**தனுசு**: அதிக வேலைச்சுமையால் அவ்வப் போது கோபப்படுவீர்கள். அடுத்தவர்களைக் குறைக் கூறிக் கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப் பாருங்கள்.



**மகரம்**: எடுத்த வேலைகளை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை நீடிக்கும்.



**கும்பம்**: எதிர்ப்புகள், இழப்புகள், ஏமாற் றங்கள் நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படு வீர்கள். பணிகளிலிருந்து வந்த தேக்க நிலை மாறும்.



**மீனம்**: வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகை யுண்டு. வீண் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | | | | | | |
| 1 | | | | 9 | 8 | 4 | | 5 |
| | | | | 1 | 5 | | 2 | 8 |
| 8 | 3 | | 9 | 4 | 1 | 2 | | |
| | 1 | | | | | | 3 | |
| | | 7 | 8 | 2 | 3 | | 1 | 9 |
| 6 | 7 | | 3 | 5 | | | | |
| 2 | | 4 | 1 | 8 | | | | 3 |
| | | | | | | 1 | | |

*நேற்றைய சுடோக்கின் விடை*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 8 | 6 | 4 | 3 | 2 | 7 | 9 | 1 |
| 1 | 2 | 3 | 7 | 9 | 8 | 4 | 6 | 5 |
| 7 | 4 | 9 | 6 | 1 | 5 | 3 | 2 | 8 |
| 8 | 3 | 5 | 9 | 4 | 1 | 2 | 7 | 6 |
| 9 | 1 | 2 | 5 | 7 | 6 | 8 | 3 | 4 |
| 4 | 6 | 7 | 8 | 2 | 3 | 5 | 1 | 9 |
| 6 | 7 | 1 | 3 | 5 | 4 | 9 | 8 | 2 |
| 2 | 9 | 4 | 1 | 8 | 7 | 6 | 5 | 3 |
| 3 | 5 | 8 | 2 | 6 | 9 | 1 | 4 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டி 'தே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனன் நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் ரோபோ



இன்றைய காலகட்டத்தில் ரோபோக்களின் உருவாக்கம் அசுர வளர்ச்சி கண்டுள்ளது.

மனிதனுக்கு நிகராக ரோபோவை உருவாக்குவதில் உலகெங்கிலுமுள்ள விஞ்ஞானிகள் முனைப்புக் காட்டி வருகின்றனர்.

இந்நிலையில் டெக்ஸாஸிலுள்ள RoboKin- என்ற நிறுவனம் Zeno R25 என்ற மனித உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடிய ரோபோவை வடிவமைத்துள்ளது. எனினும் இதனை மேலும் மேம்படுத்தும் பொருட்டு Kickstarter தளத்தின் ஊடாக போட்டி ஒன்றை நடத்தி வருகின்றது.

இதேவேளை இந்த ரோபோவுக்கு முன்னதாக உருவாக்கப்பட்ட Zeno R50 என்ற ரோபோவின் பெறுமதி 16,000 டொலராக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மீள்தன்மை கொண்ட ஸ்மார்ட் கைபேசி




சம்சுங் மற்றும் எல்.ஜி நிறுவனங்களைத் தொடர்ந்து SEL என்ற ஜப்பான் நிறுவனம், மீள் தன்மை கொண்ட (Flexible) ஸ்மார்ட் கைபேசிகளை அறிமுகப்படுத்துகின்றது.

இதன் திரை, 4 மில்லி மீற்றர் ஆரையைக் கொண்ட வட்டம் அளவுக்கு சுற்றிக்கொள்ளக் கூடியதாக (Rolle-) வடிவமைக்கப் பட்டுள்ளது.

சிறந்த ஒலிநயம் உட்பட உயர் ரக தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டிருக்கும் இக்கைபேசி ஏனைய நிறுவனங்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட மீள் தன்மை கொண்ட கைபேசிகளுக்குச் சவாலாக விளங்கும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

## குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் ரோபோ



தற்போது அனைத்துத் துறைகளிலும் ஆதிக் கத்தை செலுத்திவரும் கணினித் துறையையே அதிகளவானவர்கள் தெரிவு செய்கின்றனர்.

இதனால் எதிர்காலக் குழந்தைகளின் கணினி அறிவை வளர்க்கும் நோக்கில் வர்ணமயமான ரோபோ ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

Playdi எனப்படும் இந்த ரோபோ கூகுள், அப்பிள், மற்றும் சைமன்ரெக் நிறுவனங்களை சேர்ந்த சில பொறியியலாளர்களால் வடிவமைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலகின் மிக மெலிதான மடிக்கணினி

தற்போது லப்டொப்பின் (மடிக்கணினி) பாவனை அதிகரித்து வரும் வேளையில் அவற்றுள் பல்வேறு தொழில்நுட்பங்கள் மேலும் புகுத்தப்பட்டு வருகின்றன.

இவற்றின் அடிப்படையில் தற்போது உலகின் மிகவும் மெலிதான லப்டொப் ஒன்றினை Maingear நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

17.3 அங்குல அளவுடைய இந்த லப்டொப், விசேடமாக கணனி விளையாட்டுகளுக்கு பயன்படுத்தக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் இவற்றில் Core i7 47 00HQ Processor, உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், பிரதான நினைவகத்தை 16GB வரை அதிகரிக்கும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சேமிப்பு நினைவகமாக 1 ரிபி கொள்ளளவுடைய இந்த லப்டொப்பின் விலை 2,099 டொலராகும்.



## புத்தம் புதிய 'கேம்' விரைவில்




பிரபல கணினி விளையாட்டு வடிவமைப்பு நிறுவனமான Ubisoft நிறுவனம், South Park The Stick of Truth என்ற புத்தம் புதிய விளையாட்டை எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அறிமுகப்படுத்த உள்ளது.

அடுத்த தலைமுறை விளையாட்டாக வெளிவரவுள்ள South Park The Stick of Truth இந்த வருடமே அறிமுகப்படுத்தப்படவிருந்த போதிலும் அடுத்த வருடம் வரை அதன் வெளியீட்டை Ubisoft நிறுவனம் பிற்போட்டுள்ளது.

இதன்படி முதலில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சூரிய சக்தியில் இயங்கும் சைக்கிள்



சூரிய சக்தியிலும், மனித சக்தியிலும் இயங்கக்கூடிய அதிநவீன சைக்கிள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

Ele எனப்படும் இந்த சைக்கிளில் உள்ள இரு சக்கரங்களுக்கு நடுவிலும் வட்ட வடிவிலான சூரியப்படலம் காணப்படுகின்றது. இது சூரிய ஒளி கிடைக்கும் திசையை நோக்கி 30 டிகிரி வரை திருப்பக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

சூரிய சக்தி மூலம் உருவாக்கப்படும் மின்சக்தி, விசேட மின்கலத்தில் சேமிக்கப்படு வதன் மூலம் சைக்கிள் இயங்குவதற்குரிய வலு வழங்கப்படுகின்றது. சூரியசக்தி இல்லாத வேளைகளில் மனிதவலு மூலம் இயக்கக் கூடியதாகவும் காணப்படுகின்றது.

## நீர் உட்புகாத கமரா

ஐ.ஓ.என். என்ற நிறுவனம் Air Pro 3 எனும் நீர் உட்புகாத தொழில் நுட்பத் தைக் கொண்ட கமராவை வடிவமைத்து அறிமுகப்படுத்தியுள்ளது.

நீரினுள் 49 அடி ஆழம் வரை கொண்டு சென்று பயன்படுத்தக்கூடியதான இக் கமரா, 60 fps வேகத்தில் காணொலி பதிவு செய்யக்கூடியதாக உள்ளது.

மேலும் இதில் 12 மெகா பிக்ஷல் சொனி IMX117 CMOS சென்சார் காணப் படுகின்றது. வயர்லெஸ் தொழில் நுட்பமான WidFi இனையும் கொண்டுள்ள இக்கமரா மூலம் 160 டிகிரியில் காட்சிப்பதிவு செய்ய முடியும்.

இதன் விலை 350 டொலராகும்.



## செயலமர்வும் போட்டியும்

மாகாண மட்ட விஞ்ஞான வினாடி வினாப் போட்டிக்கான வினாவங்கி அமைத்தல் வதிவிடச் செயலமர்வு கரவெட்டி மெ.மி. த.க. பாடசாலையில் இன்றும் நாளையும் நடைபெற வுள்ளது. மாகாண மட்ட விஞ்ஞான வினாடி வினாப்போட்டியாழ்.வேம்படிமகளிர்கல்லூரியில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும். (ந-35)

## பரிசளிப்பு விழா

வடமராட்சி, நவ. 8

கரவெட்டி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி வருடாந்தப்பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் திருமதி பாலராணி ஸ்ரீதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப் பாளர் ஆறுமுகம் ராஜேந்திரன் கலந்துகொள் வார். (ந-8)

## வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பும்

தென்மராட்சி, நவ. 8

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாத தின இறுதி நாள் நிகழ்வும், நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நூலக மண்டபத்தில் இடம்பெறும்.

பிரதேச சபைத் தலைவர் சி.துரைராசா தலை மையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப் பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனும் சிறப்பு விருந் தினர்களாகக் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், பிரதேச சபைச் செயலா ளர் செல்வி தி.தர்சினி, ஓய்வுநிலை அதிபர் மு.பாலசுப் பிரமணியம், பிரதேச சபை சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி செ.ஜெகதீஸன் ஆகியோரும் கலந்துகொள்வர். (ந-9)

## நிறுவனமாகப் பதிவு

வடமராட்சி, நவ.8

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிறுவனம் பதிவு செய் யப்பட்ட போதிலும் ஆறு மாத காலத்துக்குப் பார்வையாளர் நிறுவனமாகவே இருக் கும். அதன் பின்னரே முழுமை யான உறுப்புரிமையைப் பெற்றுக் கொள் ளும் எனத் தெரிவிக்கப்பட்டது.

1990 களில் வெளிநாட்டு நிறுவனமான போரூட் நிறுவனத்தின் அனுசர ணையுடன் செயற்படத் தொடங்கிய இந்த நிறுவனம் 2004 ஆம் ஆண்டு போரூட் நிறுவனத்தின் வெளியேற் றத்துடன் சுயாதீனமாக பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி பிரதேச செயலர்களின் கண்காணிப்பில் இயங்கி வந்துள்ளது. (ந-8)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு 03 ★ 12 ★ 1933



இறப்பு 09 ★ 10 ★ 2013

அமரர் உயர்திரு **தம்பு-மயில்வாகனம்**

*எத்தனை நாள்கள் சென்றாலும்*
*உங்கள் நினைவலைகள் எம் மனதை விட்டு அகலவில்லை*
*உங்களை என்றும் அன்புடன் நினைவு கூருகின்றோம்*

கடந்த 09.10.2013 புதன்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர் தம்பு மயில்வாகனம் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (08.11.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்றது. அத்தருணம் தாங் களும் வருகைதந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மற்றும் அவரின் பிரிவுத்துயரில் பங்குகொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)*

மத்திய வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை

**குடும்பத்தினர்.**
தொ.பே.021 227 0734

## 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

அமரர்
**யோண்பிள்ளை ஜோட்ஸ் தவராசா**
(ஓய்வு பெற்ற அதிபர்)



மண்ணக வாழ்வு
13.11.1941

விண்ணக வாழ்வு
09.10.2013

அன்பு அப்பாவே! அன்றைய விடியலில் இடியென வந்தசெய்தி எம்மை நிலைகுலைய வைத்ததே! நம்பவே முடியவில்லை, தவிக்கின்றோம் ஆனால் மீள முடியவில்லை எம் அனைவரின் வாழ்வையும் உயர்த்திய நீங்கள் நிறைவான திருப்தியுடன் சென்றதேனோ! மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர் தவிக்கின்றனர். எத்தனை நாள்கள் சென்றாலும் உங்கள் நினைவுகள் எம் மனதைவிட்டு அகலாது உங்களை அன்புடன் நினைவு கூர்ந்து தங்களின் ஆத்மா சாந்தியடையவேண்டி பிரார்த்திக்கின்றோம்.

எமது தந்தையின் திடீர் இழப்பால் நாம் தவித்த வேளையில் எமக்கு அனைத்து வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். குறிப்பாகத் தூர இடங்களிலிருந்து எமது இல்லத்திற்கு வருகைதந்து ஆறுதலளித்த அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், போதகர்கள், நீதிபதிகள், சட்டத்தரணிகள், மேலதிக அரச அதிபர்கள், உதவி அரச அதிபர், வைத்தியர்கள், கல்வி அதிகாரிகள், வங்கி அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், மாகாணசபை உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

அத்துடன் புலம்பெயர் நாடுகளிலிருந்தும் பல்வேறு இடங்களிலிருந்தும் தொலைபேசி, மின்னஞ்சல் வாயிலாக ஆறுதலளித்தவர்கள், இணையப் பக்கங்கள் வாயிலாக அஞ்சலியுரை வெளியிட்டவர்கள் மற்றும் இறுதி நிகழ்வில் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோர், மலர்வளையங்கள் சாத்தியோர், மேலும் எமது தந்தையின் புகழை உலகறியவைத்து உதயன் நாளிதழில் "நீத்தார் நயப்புரையை" நல்கிய முன்னாள் முல்லை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு செ. செல்வராஜா அவர்களிற்கும் எமது விசேட நன்றிகள். இறுதியாக எமக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவிய அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக நன்றிகள் உரித்தாகுக.

**குடும்பத்தினர்.**

இரணைப்பாலை,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

023 222 2563
077 603 2163

(39761)(45.6.3)

# மரண அறிவித்தல்கள்

## அல்பிரட் அல்போன்ஸ் (சிறிபோன்)



மாரீசன்கூடல் இளவாலை யைப் பிறப்பிடமாகக் கொண்ட வரும் தற்போது ஜேர்மனியில் வசித்துவந் தவருமாகிய அல் பிரட் அல்போன்ஸ் (சிறிபோன்) 01.11.2013 வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் அகால மரண மானார்.

அன்னார் வினியின் அன்புக் கணவரும், யெஸ்ரனின் அன் புத் தந்தையும், அல்பிரட் - செல்ல மணி தம்பதியரின் அன்பு மக னும், பருத்தித்துறையைச் சேர்ந்த அவுறாம்பிள்ளை - காலஞ் சென்ற மணி தம்பதியரின் அன்பு மருமகனும், சகாயராணி (லண் டன்), லெபோன் (ஜேர்மனி), ஜெறிபோன் (லண்டன்) ஆகி யோரின் அன்புச் சகோதரனும், அருமை (லண்டன்), அமலா (ஜேர்மனி), மனோகரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தர்சிகா, ஸ்ரெபான், றயிக்கா ஆகியோரின் அன்பு மாமனும், அனுசிகா, அனிந்தன் ஆகியோரின் அன்புச் சிறிய தந்தை யும், அனோஜ், சுயிக்கா ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (09.11.2013) சனிக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். அன்று பி.ப.4.00 மணிக்கு மாரீசன்கூடல் புனித கயித்தார் ஆலயத்தில் அவரின் ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாரீசன்கூடல்,
TP075 578 0039 (39801) (12.8.3)

தகவல்:
**அல்பிரட் (தந்தை)**

## கணேசன் சிறிதரன் (புங்குடுதீவு-03)



புங்குடுதீவு-3 ஆம் வட்டாரத்தைப் பிறப் பிடமாகவும் கொழும்பு, கனடாவில் வசித்த வருமான கணேசன் சிறிதரன் கடந்த 25.10.2013 கனடாவில் காலமானார்.

அன்னார் கணேசன்-(பங்காளர் T.S.K றைஸ் ஏஜன்சிஸ், 4 ஆம் குறுக்குத்தெரு, கொழும்பு-11) சிவபாக்கியம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், மனோகரன்- கனகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சங்கீதாவின் பாசமிகு கணவரும், சிவகரனின் (சுவிஸ்) அன்புத் தம்பியும், தயாநிதி (சுவிஸ்), சாரங்கன், சுதர்சன், நிசாந்தன் ஆகியோரின் மைத் துனரும், சுயாஸ் (சுவிஸ்), அலிசியா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.11.2013) வெள்ளிக்கிழமை ந.ப. 12.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை அஞ்சலிக்காக பொரளை AF றேமன்ட் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, பின்னர் யாழ். புங்குடு தீவி லுள்ள அன்னாரின் இல்லத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு, (10.11.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் முனைப்புலம் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.07, முஸ்லிம் கல்லூரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
T.P:076 615 4998, 077 147 2446 (39800)(3.6.4)

தகவல்:
**சி. சங்கீதா (மனைவி)**

### கூட்டம்

வன்னிப் பகுதிப் பாடசாலைகளில் நீண்டகாலம் சேவையாற்றி ஆசிரிய உதவியாளர்களாக அண்மையில் நியமனம் பெற்றவர்களுக்கான முக்கியமான கூட்டம் ஒன்று நாளைமறு தினம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு கனகராயன் குளம் மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் கலந்துகொள்ளவுள்ளார்.

மிக முக்கியமான விடயங்கள் தொடர்பான தீர்மானங்கள் இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்படவுள்ளதால் முல்லைத்தீவு, துணுக்காய், கிளிநொச்சி, வவுனியா வடக்கு, மடு, வடமராட்சி கிழக்கு ஆகிய ஆறு கல்வி வலயங்களையும் சேர்ந்த புதிதாக நியமனம் பெற்றஆசிரியஉதவியாளர்கள் அனைவரையும் தவறாது கூட்டத்தில்கலந்து கொள்ளுமாறு வன்னி உதவி ஆசிரியர் ஒன்றியச் செயலாளர் அறிவித்துள்ளார். (க-426)

***

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் 98 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல்10 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில்நடைபெறவுள்ளது.

தலைவர் ந.வித்தியாதரன் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்துக்கு அங்கத்தவர்கள் அனைவரையும் சமுகம் தருமாறு சைவ பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ந)

### கற்றல் உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், நவ.8

தீவகக் கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 12 பாடசாலைகளின் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக் கிழமை காலை 8 மணிக்கு வேலணை மத்திய கல்லூரியில் நடைபெறும்.

தீவக கல்வி வலயமும் நல்லூர் ரோட்டறிக் கழகமும் இணைந்து இதற்கான ஏற்பாடுகளைச்செய்துள்ளன.

வேலணை சரஸ்வதி, வேலணை சைவப் பிரகாசா, வேலணை மேற்கு நடராஜா, வேலணைமத்திய கல்லூரி,சரவணைசின்னமடு றோ.க, அல்லைப் பிட்டி பராசக்தி, நாரந்தனை றோ.க., வேலணை கிழக்கு ம.வி ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை றோ.க. நாரந்தனை கணேசா ஆகிய பாடசாலைகள் இதில் தெரிவு செய்யப் பட்டு 2454 மாணவர் களுக்கு கற்றல் உபகரணத் தொகுதி வழங்கப்படவுள்ளதாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ந-7)

உரிமைக் கோரிக்கைப் படிவம் மூலம்

## 2,817 பேரே வாக்காளர்களாக இணைக்குமாறு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், நவ.8

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 817 பேரே உரிமைக் கோரிக்கை படிவத்தினூடாக தம்மை வாக்காளராக இணைக்குமாறு விண்ணப்பித்துள்ளனர் - என தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புதிய வாக்காளர் பெயர்ப் பட்டியலின் பிரகாரம் 26 ஆயிரம் பேர் நீக்கப்படும் நிலையில் 2 ஆயிரத்து 817 பேரே தம்மை மீள இணைத்துக் கொள்ளுமாறு விண்ணப்பித்துள்ளனர்.

2013 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் கடந்த ஜூன் மாதம் முதல் இடம்பெற்று வருகின்றது.

இதன் பிரகாரம் புதிய வாக்காளர் பெயர்ப்பட்டியலில் 50 ஆயிரம் பேர் வரையில் இணைத்துக் கொள்ளப்படும்அதேவேளை 26 ஆயிரம் பேர் கடந்த வாக்காளர் பெயர்ப்பட்டியலிருந்து நீக்கப்படுகின்றனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் புதிய வாக்காளர் பெயர்ப்பட்டியலில் நீக்கப்டுவர்களது பெயர்கள் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன. இவ்வாறு நீக்கப்படுபவர்கள் உரிமைக் கோரிக்கைப் படிவத்தினூடாக தம்மை வாக்காளர் பெயர்ப்பட்டியலில் இணைத்துக் கொள்ளுமாறு விண்ணப்பிக்க முடியும்.

இதுவரையில் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாண தேர்தல் தொகுதியில் 2 ஆயிரத்து 817 பேரே அவ்வாறு தம்மை மீள இணைத்துக் கொள்ளுமாறு கோரி விண்ணப்பித்துள்ளனர் என்றும் தெரிவிக்கபட்டது. (ஐ-5)

### அன்பு

உலகில் எல்லாவிதமாகவும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் இரண்டு வகையான அன்பு உண்டு. யார்மேல் அன்பு செய்ய விரும்புகிறோமோ அவரையே ஆள விரும்புகிற அன்பு ஒன்று. மற்றையது அவருக்கே ஆட்படுகிற அன்பு. ஆளவிரும்புகிற அன்பைக் காட்டிலும் ஆட்படுகிற அன்பு மிகவும் பக்குவமானது. ஆள விரும்புகிற அன்பில் சுயநலமும், அகங் காரமும் உண்டு. ஆட்படுகிற அன்பில் தியாகத்தைத் தவிர வேறெதுவுமே இல்லை. ஆள விரும்புகிற அன்புக்கு




காதல் என்றும், பிரேமை என்றும் விதம் விதமாகப் பெயர் சொல்கிறார்கள். ஆட்படுகிற அன்புக்குப் பக்தி என்று பெயர் சொல்லுகிறார்கள். அவ்விதமான அன்பின் மூலம் பல அடியார்கள் இறைவனது அருளுக்கு ஆட்பட்டு பேரானந்த வாழ்வு பெற்றுள்ளார்கள். நாமும் அவ்வழி நடப்போமாக.

நன்றி :ஞானச்சுடர்



மூத்த பத்திரிகையாளர் ந.வித்தியாதரன் பத்திரிகைத்துறைக்குத் துணிச்சலுடன் ஆற்றியுள்ள பணிகளைப் பாராட்டி திசைகாட்டி நிறுவனத்தினர் அவரைக் கௌரவப்படுத்தும் வகையில் விழா ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர். கடந்த செவ்வாய்க்கிழமை மாலை வேளை யாழ்.ஆனைப்பந்தியிலுள்ள திசைகாட்டி நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்வில் வித்தியாதரனுக்கு நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்படுவதையும் நிகழ்வுக்கு வருகை தந்திருந்தவர்களையும் காணலாம். (ஓ)

### சூரன் போர் இன்று

வலி.வடக்கு, நவ.8

வரலாற்றுப் புகழ்மிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய ஸ்கந்த சஷ்டி திருவிழா சூரசம் ஹாரம் இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 5.30 மணிக்குநடைபெறவுள்ளது.

மதியம் ஒரு மணிக்கு ஸ்நபனா அபிஷேகமும் 2 மணிக்கு சாயரட்சைப் பூசையும் 2.30 மணிக்கு இரண்டாம் சாமப் பூசையும் 2.45 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் சூரசம் ஹாரத்துக்காக சுவாமி எழுந்தருளி சூரன் போர்த்திரு விழாவின் போது

பிற்பகல் 5.30 மணிக்கு வடக்கு வீதியில் விசுவரூபதரிசனம், சூரசம் ஹாரம், அலங்கார அர்ச்சனை ஆராதனையும், 6 மணிக்கு ஸ்நபனா அபிஷேக பூசையும் திருவிழாவும் நடைபெற வுள்ளன. (ந-86)

***

யாழ்ப்பாணம், நவ.8

புங்குடுதீவு கிழக்கு தல்லையபற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி வேல் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சூரன் கையளிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைத் சேர்ந்த செல்லையா தில்லைநாதன் குடும்பத்தாரின் நிதியுதவியுடன் சூரன் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இன்று மாலை 4 மணிக்கு சூரசங்காரமும் இடம்பெறும். (ஓ-14)

வைத்திய அதிகாரிகளின் இடமாற்றங்கள் தொடர்பில்

## மாகாண ரீதியாக கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம், நவ. 8

வைத்திய அதிகாரிகளின் இடமாற்றங்களை தகுந்த முறையில் மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சால் மாகாண ரீதியாக கலந்துரையாடல்கள் நடத்தப்படவுள்ளன.

வைத்திய அதிகாரிகளின் தில்லு முல்லுகள், அழுத்தங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வழங்கப்பட்ட இடமாற்றங்களை மாற்றியமைப்பது தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் சுகாதார அமைச்சுக்குக் கிடைக்கப் பெறுவதால் இவ்வாறான கலந்துரையாடல்கள் நடத்தப்படவுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் அந்தந்த பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், மாகாண, மாவட்ட, ஆதார மருத்துவமனைகள் ஆகியவற்றின் பொறுப்பதிகாரிகளைக் கலந்து கொள்ளச் செய்யுமாறு மாகாண சுகாதாரப் பணிப்பாளர்களுக்கு சுகாதார அமைச்சின் செயலாளரால் தகவல் அனுப்பப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் வடக்கு மாகாணவைத்தியப்பொறுப்பதிகாரிகளுக்கு இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கும்கிழக்கு மாகாண வைத்தியப் பொறுப்பதிகாரிகளுக்கு எதிர்வரும் 28 ஆம் திகதியும் கலந்துரையாடல்கள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## கூரை உடைத்துத் திருட்டு

மருதனார்மடம் தொலைபேசிக் கடையில்

மருதனார்மடம் சந்தியில் உள்ளதொலைபேசிக்கடைக் கூரையை உடைத்து இறங்கிய திருடர்கள் ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத்திருடிச் சென்ற சம்பவம் புதன் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மருதனார்மடம் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையத்தின் கூரை வழியாக உள்நுழைந்த திருடர்கள் கடையில் வைக்கப்பட்டு இருந்த நாற்பதுக்கும் மேற்பட்ட கையடக்கத் தொலைபேசிகளை திருடிக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

குறிப்பிட்ட மருதனார் மடம் சந்தியில் ஆள்நடமாட்டம் மற்றும் பொலிஸ் , இராணுவத்தினரின் கண்காணிப்பு மிக்க காங்கேசன்துறை வீதியில் இரவுக் காவலாளிகள் கடமையில் இருக்கக் கூடியதாக துணிகரமான முறையில் இடம் பெற்ற இந்த திருட்டுச் சம்பவம் ஏனைய வர்த்தகர்களிடையேயும் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பிட்ட திருட்டுச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்வதுடன் யாழ்ப் பாணத்தில் இருந்து வருகை தந்த விசேட பொலிஸ் பிரிவினர் கைவிரல் அடையாளங்களையும் பதிவு செய்தனர்.

மருதனார்மடம் சந்தியை அண்மித்த பகுதிகளில் நேற்று வரை நான்கு கடைகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. (ந-86-4-7)

## மாணவர்கள் நல்லெண்ணப் பயணம்

மன்னார் மாணவர்கள் நல்லெண்ணப் பயணமொன்றை மேற்கொண்டு நேற்று வியாழக்கிழமை காலை வடக்கு- தெற்கு உறவுப்பால நிகழ்வுக்காக கேகாலைக்குச் சென்றுள்ளனர்.

தலைமன்னார் அரசதமிழ்க் கலவன் பாடசாலையில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் 40 மாணவ மாணவிகளே இவ்வாறு சென்றுள்ளனர்.

நேற்றுக் காலை 7.30 மணியவில் குறித்த மாணவர்கள் பாடசாலை அதிபர் எஸ்.செல்வரஞ்சன் தலைமையில் மன்னார் வலயக் கல்வித் திணைக்களத்திற்கு வருகை தந்திருந்தனர்.

இவர்களை மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எம். சியான் வழியனுப்பிவைத்தார். இவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை தலைமன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.எல்.எம். ஜெமில் மேற்கொண்டார். இந்த பயணத்தின் போது மாணவர்களுடன் அவரும் சென்றுள்ளார்.

நேற்று வியாழன் தொடக்கம் நாளை சனி வரையிலான மூன்று தினங்கள் கேகாலை கல்வி வலயத்தில் நிகழ்வுகள் இடம்பெறும். மேலும் கலை கலாசார நிகழ்வுகளுடன் விளையாட்டு நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

இந்த நல்லெண்ணப் பயணம் தொடர்பாக மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளர் எம்எம்சியான் தெரிவிக்கையில் வடக்கில் உள்ளவர்களும், தெற்கில் உள்ளவர்களும் புரிந்துணர்வுடன்வாழவேண்டும். இந்த நிகழ்வானது ஒரேநாடு ஒரேமக்கள் என்ற கருத்தை மக்களுக்குத் தெளிவுபடுத்தும் முகமாக இடம் பெறுகின்றது என்றார். (க-12)

### ஆடுகள் திருட்டு

வடமராட்சி, நவ.8

அல்வாய் கிழக்கு தெருமூடி மடத்தடி - தம்பசிட்டி வீதியில் உள்ள வீடொன்றின் ஆட்டுக் கொட்டிலில் கட்டி வைக்கப்பட்டிருந்த ஆடும், ஆட்டுக்குட்டியும் இரவு வேளையில் இனந்தெரியாதோரால் அண்மையில் திருடப்பட்டுள்ளது.

திருடப்பட்டுள்ள ஆடும், குட்டியும் சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியானவை எனத் தெரி விக்கப்பட்டது. (ந-8)


## மண்முனை பாலத்தின் வேலைகள் மும்முரம்



மட்டக்களப்பு, நவ.8
மட்டக்களப்பின் மண்முனை, கொக்கட்டிச் சோலை ஆகிய பிர தேசங்களை இணைக் கும் மண்முனை பாலத் தின் நிர்மாண வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.
இந்தப் பாலத்தின் வேலை கள் எதிர்வரும் மே மாதம் அளவில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.
இந்தப் பாலம் ஜப்பானின் 1473 மில்லியன் ரூபா செலவிலும் இலங்கை அரசின் 393 மில்லியன் ரூபா செலவிலும் அமைக் கப்பட்டு வருகின்றது.
இந்தப் பாலம், மேற்கு பகுதி விவசாய மக்கள் கிழக்கு பகுதியுடன் இலகுவாக இணைந்து தமது உற்பத் திப் பொருள்களுக்கான சந்தை வாய்ப்பைப் பெற ஒரு முக்கிய பாதையாக அமையவுள்ளது.
மட்டக்களப்பின் எழுவான் கரையையும் படுவான்க ரையையும் இணைக்கும் மண்முனை பாலத்தின் மூலம் மட்டக்களப்பின் பொருளாதார முன்னேற் றம் பல மடங்கு அதிகரிக் கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. (ச)

# கல்வி வலயங்களை உருவாக்க வேண்டாம்

### பல்கலை ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் போர்க்கொடி



கொழும்பு, நவ.8
புதிய கல்வி வலயங்களை உருவாக்கும் அரசின் செயற்றிட்டத்துக்கு பல்க லைக்கழக ஆசிரியர் சங் கங்களின் சம்மேளனம் கடும் எதிர்ப்புத் தெரிவித் துள்ளது.
இவ்வாறு கல்வி வலயங் களை உருவாக்கினால் வெளிநாட்டுப் பல்கலைக் கழக நிறுவனங்களின் கிளைகள் அந்த வலயங் களில் நிறுவப்படும். அத னால் கல்வி விற்பனைப் பொருளாகிவிடும் என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்தின் தலைவர் நிமால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்தார்.
அதற்கு எப்போதும் அனு மதி வழங்கப்படாது என்று அவர் கூறினார்.
பட்டங்களை விற்பனை செய்யும் இந்தச் செயற் றிட்டத்தை அரசு நிறுத்தி விட வேண்டும்.
இதுகுறித்து மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற் றிட்டம் நடைமுறைப் படுத் தப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)


## 28 இல் தென்படும் வால் நட்சத்திரம்

இதுவரை தென்படாத பிரகாசமான வால் நட்சத்திரம் ஒன்று எதிர்வரும் 28 ஆம் திகதி இலங்கையில் தென்படக் கூடும் என்று கிரகங்களை ஆராயும் ஸ்ரீலங்கா கிரக லோக நிலையம் தெரிவித்துள்ளது. இந்த வால் நட்சத்திரம் எதிர்வரும் 28 ஆம் திகதி அதிகாலை 5.40 இற்கும் 6 மணிக்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கையின் கிழக்கு வானத்தில் தோன்றக் கூடும் என்று கிரகங்களை ஆராயும் ஸ்ரீலங்கா கிரகலோக நிலையம் குறிப்பிட் டுள்ளது. இலங்கையிலுள்ள மக்கள் வெற்றுக் கண்களால் வால் நட்சத்திரத்தைப் பார்க்க முடியும் என்று ஸ்ரீலங்கா கிரகலோக நிலையத்தின் பணிப்பாளர் திருமதி பிரியங்கா குமுதினி கோறலகம தெரிவித்தார். (ச-22)

### பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம்

## கடன் வாங்கும் மின்சாரசபை

கொழும்பு, நவ.8
மின்சார சபை மீண்டும் கடன் அடிப்படையில் டீசல் மற்றும் ஏனைய எரிபொ ருள்களை வாங்க ஆரம் பித்துள்ளது.
பெற்றோலியக் கூட்டுத்தா பனத்துக்கு 16 மில்லியன் ரூபாவை மின்சார சபை பெற் றோலியக் கூட்டுத் தாபனத்துக்குச் செலுத்த வேண்டியுள்ள போதும், மீளவும் கடனுக்கு எரி பொருளைப் பெற்றுக்கொள் வதை மின்சாரசபை ஆரம் பித்துள்ளது என்று பெற் றோலியக் கூட்டுத்தாபனத் தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
இவ்வாறு கடன் அடிப்ப டையில் எரிபொருள்களை மின்சார சபைக்கு வழங்கு வதால் பெற்றோலியக் கூட் டுத்தாபனம் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளது என்று அவர் கூறினார்.
கடந்த செப்ரெம்பர் மாதத் தில் கிடைத்திருந்த அதிக ரித்த மழை வீழ்ச்சியால் நீர்மின் உற்பத்தி உயர் வடைந்திருந்ததோடு,



மின்சாரசபை இலாபமாக 25,000 கோடி ரூபாவை பெற்றுள்ளது.
எனினும் எரிபொருள்க ளால் இயங்கும் மின் உற்பத்தி நிலையங்க ளைச் செயற்படுத்தவே இவ்வாறு கடனுக்கு எரிபொருள் பெற வேண்டிய நிலை மின்சார சபைக்கு ஏற்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ச-22)

## வாகன கண்ணாடியில் 'ஸ்ரிக்கர்' ஒட்டத் தடை

### பொலிஸ் திணைக்களம் தகவல்



கொழும்பு, நவ.8
உடனடியாக நடைமு றைக்கு வரும் வகையில் அனைத்து மோட்டார் வாக னங்களிலும் முன்புறக் கண்ணாடியில் வாகன வரி அனுமதிப்பத்தி ரத்தை தவிர்ந்த வேறு எந்த விதமான 'ஸ்ரிக்கர்'க ளையும் ஒட்டுவது தடை செய்யப்பட்டுள் ளது என்று பொலிஸ் திணைக் களம் தெரிவித்துள்ளது.
2000 ஆம் ஆண்டு மே 19 ஆம் திகதி வெளி யிடப்பட்ட விசேட வர்த்தமானி அறி வித்த லொன்றின் மூலம் இந்தத் தடை உத்தரவு பிறப்பிக் கப்பட்டது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித் தார்.
இந்தத் தடை விதிப்பை மீறிச் செயற்படும் சாரதிக ளுக்கு முதலில் எச்சரிக் கைகள் விடுக்கப்படும். அத னையும் மீறி செயற்படு வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்று அவர் கூறினார். (ச-22)

## கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு 18 மாடிகள் கட்டடம்

கொழும்பு, நவ.8
கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அடுத்த ஆண்டில் 18 மாடிகள் கொண்ட கட்டடம் ஒன்று நிர்மா ணிக்கப்படவுள் ளது.
அனைத்து வசதி களுடனும் நிர்மா ணிக்கப்படவுள்ள இந்தக் கட்டடம் சீன அரசின் நிதி யு த வி யு ட ன் அமைக்கப்படும் என்று சுகாதார அமைப்பு தெரி வித்துள்ளது.
கொழும்பு தேசிய வைத்திய சாலை யின் அபிவிருத்தித் திட்ட வரைபு வைத் தியசாலை நிர்வா கிகளால் கடந்த முதலாம் திகதி சுகா தார அமைச்சர் மை த் தி ரி பா ல சிறிசேனாவிடம் கையளிக்கப்பட் டது. (ச-22)

முதலாம் ஆண்டு நினைவில்

தோற்றம் 26.11.1941 மறைவு 08.11.2012

அமரர்
மேரி திரேசா லீனஸ்



அன்பின் அம்மாவே!
எமைவிட்டுப் பிரிந்து
ஓராண்டு மறைந்திட்டாலும்
உங்கள் நினைவுகளால்
எம் விழிநீரும் ஓயவில்லை
உங்கள் நினைவுகளுடன்
நீங்கள் அருகில் இருக்கும்
உணர்வோடு வாழ்கின்றோம்.

54, புனித யாகப்பர் வீதி,
ஊர்காவற்றுறை.
0777179317.

பிரிவால்துயருறும்
குடும்பத்தினர், உறவினர்.

மரண அறிவித்தல்

திருமதி நாகேஸ்வரி இராசேந்திரம்



முல்லைத்தீவு, வெள்ளாம் முள்ளி வாய்க்காலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது படித்த மகளிர் திட்டம், மிருசுவிலில் வசித்த வருமாகிய திருமதி நாகேஸ்வரி இரா சேந்திரம் நேற்று (07.11.2013) வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோ தரம்பிள்ளை மற்றும் திலகம்மா தம்பதிய ரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர் களான கந்தையா- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், இராசேந்திரத்தின் அன்பு மனைவியும், விமலன், சுகீர் (கணக்காய்வுத் திணைக்களம், யாழ்ப்பாணம்), நோகிலன், சபேசன் (SRAgro Centre, Vavuniya), நிரோஜன் (மாஞ்சோலை வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், நிரஞ்சினி, சுபாஜினி, கேசனா ஆகியோரின் அன்பு மாமியும், டஷ்மியா, விதுஷன், பிரணவி, கோவின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2013) ந.ப. 12.00 மணியளவில் இல.171,படித்த மகளிர் திட்டம், மிருசுவிலில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மிருசுவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.171, படித்த மகளிர் திட்டம்,
மிருசுவில்.

(39806)(3.6.4)

தகவல்:
குடும்பத்தினர்.

## வேலணை பிரதேச சபை

# 2014 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வேலணை பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன் சந்தைகள் இறைச்சிக் கடைகள், வாகனத்தரிப்பிடங்கள், சிற்றுண்டிச்சாலைகள் என்பவற்றை 01.01.2014 தொடக்கம் 31.12.2014 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 08.11.2013-20.11.2013
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: 22.11.2013 நண்பகல் 12.00 வரை
கேள்வி திறக்கும் திகதி: 22.11.2013 பிற்பகல் 12.30 மணி

| இல | சந்தை பெயர் | மாதாந்த வாடகை | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக்கட்ட பணம் (VAT தவிர்த்து) | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் (VAT தவிர்த்து) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (VAT தவிர்த்து) |
|---|---|---|---|---|---|
| 1 | வேலணை துறையூர் மீன் சந்தை (புதிய கட்டடம்) | - | 2,000.00 | 10,000.00 | 200,000.00 |
| 2 | வேலணை செட்டிபுலம் மீன்சந்தை | - | 500.00 | 5,000.00 | 44,165.00 |
| 3 | வேலணை அம்பிகை நகர் மீன்சந்தை | - | 500.00 | 5,000.00 | 33,000.00 |
| 4 | சரவணை மீன்சந்தை | - | 500.00 | 5,000.00 | 14,250.00 |
| 5 | புங்குடுதீவு மடத்துவெளி மீன்சந்தை | - | 2,000.00 | 10,000.00 | 229,658.00 |
| 6 | நயினாதீவு வடக்கு மீன்சந்தை | - | 500.00 | 5,000.00 | 27,500.00 |
| 7 | நயினாதீவு தெற்கு மீன்சந்தை | - | 500.00 | 5,000.00 | 27,500.00 |
| 8 | அல்லைப்பிட்டி மீன்சந்தை | - | 500.00 | 5,200.00 | 51,700.00 |
| 9 | மண்டைதீவு மீன்சந்தை | - | 500.00 | 5,000.00 | 11,000.00 |
| 10 | வேலணை சாட்டி கடற்கரை வாகனத்தரிப்பிடம் | - | 2,000.00 | 10,000.00 | 150,000.00 |
| 11 | புங்குடுதீவு மாட்டிறைச்சிக்கடை | - | 2,000.00 | 10,000.00 | 475,376.00 |
| 12 | குறிகாட்டுவான் வாகனத்தரிப்பிடம் | - | 2,000.00 | 10,000.00 | 1,000,000.00 |
| | வேலணை துறையூர் மொத்த மீன் விற்பனை சந்தையில் அமைந்துள்ள கடைகள் | | | | |
| 13 | கடை இல 2- கடற்றொழில் உபகரணங்கள் விற்பனை | 1300.00 | 500.00 | - | 15000.00 |
| 14 | கடை இல 3 - சிற்றுண்டிச்சாலை | 1300.00 | 500.00 | - | 15000.00 |
| 15 | கடை இல 4 - கருவாட்டுக் கடை | 1300.00 | 500.00 | - | 15000.00 |
| 16 | கடை இல 5 - கருவாட்டுக் கடை | 1300.00 | 500.00 | - | 15000.00 |
| 17 | கடை இல 6 - கோழிக் கடை | 1300.00 | 500.00 | - | 15000.00 |
| 18 | கடை இல 7 - வேலணை ஆட்டிறைச்சிக் கடை | 1300.00 | 500.00 | - | 15000.00 |

* கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **தவிசாளர், வேலணை பிரதேசசபை, வேலணை** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டுத் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதி **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு பதிவுதபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
* கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப்பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
* உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின் கண்டு பிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
  ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும்மீளளிக்கப்பட மாட்டாது.
* கேள்விப் படிவக்கட்டணம் கேள்வித் தொகை என்பவற்றிற்கு 12%(Vat) பெறுமதி சேர் வரி செலுத்தப்படல் வேண்டும்.
* கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக் கைகளை நிராகரிக்கவும் எந்த வொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக் கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
* தெரிவு செய்யபப்படும் இறைச்சிக் கடைக்குரிய கேள்விக்காரர்கள் கேள்வித் தொகை யின்2/3 பகுதியையும் ஏனைய கேள்விக்காரர்கள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியையும் 2013.12.05 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து ெ காள்ள வேண்டும்.
* கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதி நிதியோ சமுகமளிக்கலாம்.
* புங்குடுதீவு மடத்துவெளி மீன்சந்தையில் நயினாதீவிலிருந்து கொண்டுவரப்படும் மீன் களுக்கு சந்தைவரி தவிர்த்தே அறவிடப்படவேண்டும்.
* சந்தைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தைகளின் தூய்மைக்குபொறுப்பாக இருப்பதுடன் கழிவுகள் சேகரிப்பதற்குள்ள கூடைகளில் கழிவுகளை இடவேண்டும்.
* வாகனத்தரிப்பிடங்களில் வேலணை பிரதேச சபையால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங் களையே பற்றுச்சீட்டு வழங்கி அறவிட வேண்டும். மேலும் இலங்கை போக்குவரத்து சபை அரச முத்திரை பொறிக்கப்பட்ட வாகனங்கள் தவிர்த்தே வாகனத்தரிப்பிடக் கட்டணம்அறவீடு செய்யப்பட வேண்டும்.
* கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**பிரதேசசபை,
வேலணை.**

(C/13593)(2.6.3.4)

**- சின்னையா சிவராசா,
தவிசாளர்.**


# கசிப்பு உற்பத்தி கட்டுப்பாட்டுக்குள்

குடாநாட்டில் இந்த வருடம் கசிப்பு உற்பத்தி மற்றும் 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்தல் ஆகிய குற்றச் செயல்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக யாழ். மதுவரித் திணைக்களத்தின் கட்டுப்பாட்டு அதிகாரி எஸ். செந்தூர்ச்செல்வன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் அரச சாராயம் விற்பனை மிகக் குறைவாக இருந்ததன் காரணமாக தீவகம் மற்றும் கிராமப் பகுதிகளில் கசிப்பு விற்பனை இடம்பெற்று வந்தது. எனினும் இந்த வருடம் அனுமதி பெற்ற சாராயத்தை மதுப்பிரியர்கள் அதிகளவு வாங்குவதால் கசிப்பை நாடுவதை குறைத்துக் கொண்டனர். குடாநாட்டில் கசிப்பு உற்பத்தி குறைவடைந்தமைக்கு நீதிமன்றால் விதிக்கப்படும் அதிகூடிய தண்டப் பணம் தான் காரணம். அத்துடன் 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்வது தொடர்பாக வர்த்தகர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதன் விளைவாகவும் இத்தகைய குற்றச் செயல்கள் மிகக் குறைவடைந்துள்ளன - என்றார். (வ-14)

## வீதியில் வீசப்படும் கோழி இறைச்சி கழிவுகள்

கோழி இறைச்சிக் கழிவுகள் வீதியில் வீசப்படுவதால் அருகில் உள்ள குடியிருப்பாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

செம்மணி வீதியிலிருந்து கல்வியங்காட்டுக்குச் செல்லும் வீதியில் உள்ள கோழி இறைச்சிக் கடையில் தினமும் சேரும் கழிவுகளை வீதியில் கொட்டிவிட்டுச் செல்வதால் அவற்றை எடுத்துச் செல்லும் காகங்கள் அயலில் உள்ள வீடுகளிலும், கிணறுகளிலும் போடுகின்றன. அத்துடன் இந்தப் பகுதியில் செல்வோர் மூக்கைப் பொத்திக் கொண்டு செல்லுமளவுக்கு துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவித்தனர். (வ-9)


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**வாகனம் விற்பனைக்கு**
நல்ல நிலையில் உள்ள
NPLJ xxxx Issuzu
கன்ரர் 250. விற்பனைக்கு உண்டு. (375782) (2.6)
தொடர்பு: 077 023 0343

**காணி விற்பனைக்கு**
மானிப்பாய் மகளிர்
கல்லூரிக்கு அருகில்
வீட்டுடன் கூடிய காணி
விற்பனைக்குண்டு. (39802) (3.6.4)
தொடர்பு: 076 680 6338

உ
சிவமயம்

**நிர்வாக அலுவலர் தேவை**

நல்லை ஆதீன அலுவலகத்தில் நிர்வாக அலுவலராகக் கடமையாற்ற, கணக்கு வைத்தல் உட்பட நிர்வாக அனுபவம் உள்ள ஒருவர் தேவை. கணனி அறிவுடையோர் விரும்பப்படுவர். விண்ணப்பங்களை **ஆதீன மேலாளர், நல்லை ஆதீனம், கோவில் வீதி, நல்லூர்,** என்ற விலாசத்திற்கும் அதன் ஒரு பிரதியை கலாநிதி ஆறுதிருமுருகன், நல்லை ஆதீன நம்பிக்கைப் பொறுப்புச் செயளாலர், அகில இலங்கை இந்து மாமன்ற யாழ்.பணிமனை, இல. 211/17, கோயில் வீதி, நல்லூர் என்ற விலாசத்திற்கும் 10 நாள்களுக்குள் அனுப்பவும்.

**நல்லை ஆதீன நம்பிக்கைப் பொறுப்புச் சார்பில்:
ஆறுதிருமுருகன் (செயலாளர்)**

(C/13590)


# பின்னுறுதித் தீர்வை

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

உதயகுமார் பெண் சுரேந்தினி
இலக்கம் 25, மவுண் கார்மல் வீதி,
யாழ்ப்பாணம்.

- வழக்காளி -

வழ.இல.மணநீக்கம்/637

எதிர்

அந்தோனிப்பிள்ளை உதயகுமார்
உயரப்புலம், ஆனைக்கோட்டை.

- எதிராளி -

இவ்வழக்கு 2007ஆம் ஆண்டு வைகாசி மாதம் 10ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் இறுதி நடவடிக்கைக்காக வந்தபோது எதிராளியும் எதிராளி சார்பில் சட்டத்தரணி செ.ந.விஸ்வலிங்கம் அவர்களும் பிரசன்னமாயிருக்க இன்று எதிராளி தரப்பில் ஒருமுக விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டதற்கு அமைய எதிராளியின் சாட்சியத்தை எதிராளியின் சட்டத்தரணி நெறிப் படுத்திய பின்னர் எதிராளியின் மறுமொழி "எ1" ஆவணம் எதிராளி மன்றில் இன்று அளித்த சாட்சியம் ஆகியவற்றை பிராது உள்ளடங்கிய வழக் கேட்டுடன் சேர்த்துப் பரிசீலித்து எதிராளி மறுமொழியில் கோரிய 1ஆம் நிவாரணத்தின்படி வழக்காளியின் வழக்கை தள்ளுபடி செய்து, எதிராளி இன்று மன்றில் கோரியவாறும் 2ஆவது நிவாரணத்தில் எதிராளி வழக் காளிக்கு கட்டிய தாலிக்கொடியும், எதிராளியால் வழக்காளிக்கு அணிவிக் கப்பட்ட 3 மோதிரங்களின் பெறுமதிக்குமான ரூபா இரண்டு இலட்சம் (ரூபா 200,000/-) பெறத் தகுதியுடையவரெனக் காணப்படுகின்றது.

எனவே வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 2003ஆம் ஆண்டு வைகாசி மாதம் 26ஆம் திகதி நிறைவேறிய பதிவுத் திருமணத்தை வழக்காளி எதிராளியை வேண்டுமென்றே விட்டு வன்ம உறவறுப்புச் செய்த குற்றத்திற்காக இரத்துச் செய்து வெற்றும் வெறிதும் ஆகும் என்று கட்டளையிட்டுத் தீர்வை செய்யப்படுகின்றது.

எதிராளி வழக்காளிக்கு கட்டிய தாலிக்கொடியினதும் வழக்காளிக்கு அணிவிக்கப்பட்ட 3 மோதிரங்களினதும் பெறுமதியான ரூபா இரண்டு இலட்சத்தையும் (ரூபா 200,000/-) வழக்காளி எதிராளிக்கு செலுத்த வேண்டுமென்றும் கட்டளையிட்டுத் தீர்வை செய்யப்படுகின்றது.

பின்னுறுதித் தீர்வையின் பிரதியை உதயன் தேசிய தினசரிப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தல் மூலம் வழக்காளிக்கு பதில் சேவகம் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ஆட்சேபனை எதுவும் தெரிவிக் கப்படாதவிடத்து இப்பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப் படுமெனவும் இத்தால் கட்டளையிட்டுத் தீர்வை செய்யப்படுகின்றது.

2007ஆம் ஆண்டு வைகாசி மாதம் 10ஆம் திகதி

**மாவட்ட நீதிபதி**

(39807)(7.6.3)

# டெங்கை ஒழிப்பதற்கு புதிய நுளம்பினம்

கொழும்பு, நவ.8

டெங்கு குடம்பிகளை உண வாகக் கொள்ளும் நுளம்பி னம் ஒன்று களுத்துறை மாவட்டத் தின் மத்துகம பிரதேசத்தில் கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

கொழும்பு மருத்துவ ஆய்வு கள் நிறுவனத்தின் குடம்பி கள் விஞ்ஞான ஆய்வுப் பிரிவில் மேற் கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் இருந்து இனம் காணப்பட் டுள்ள இந்த நுளம்பு இனம் 'ரொக்கோமியா' இனத் தைச் சேர்ந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

இரத்தத்தை உறிஞ்சாத இந்த 'ரொக்கோமியா' நுளம்பின மானது பயிர்க ளின் இலைகளிலுள்ள சாற்றை உறிஞ்சிக் குடிப்ப தாக கண்டறியப்பட்டுள் ளது.

"-"

இரத்தத்தை உறிஞ் சாத இந்த 'ரொக் கோமியா' நுளம் பின மானது பயிர்க ளின் இலைகளி லுள்ள சாற்றை உறிஞ்சிக் குடிப்ப தாக கண்டறி யப்பட்டுள்ளது.

இந்த 'ரொக்கோமியா' நுளம்பைப் பயன்படுத்தி டெங்கு நுளம்புகளை ஒழித்து விட உயிரியல் கட்டுப்படுத்தல் முறைமை ஒன்றை ஆரம்பிப்பதற்கு தற்போது ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன என்று கூறப்படு கிறது. (ச-22)



அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்றத் திறப்பு விழா செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம், பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் ஆகியோர் அழைத்து வரப்பட்டனர். (ச-10)

பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு

# அரச தரப்பு எம்.பிக்கள் வெளிநாடு செல்ல தடை

கொழும்பு,நவ.8

அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் நவம்பர், டிசெம்பர் ஆகிய இரு மாதங் களிலும் வெளிநாட்டுப் பய ணங்களை மேற்கொள்வ தற்கு அரசு தடை விதித் துள்ளது.

பொதுநலவாய அமைப்பு நாடுகளின் அரச தலைவர் கள் மாநாடு மற்றும் நாடா ளுமன்ற வரவு- செலவுத் திட்ட விவாதம் நடை பெறவுள்ளதை முன்னிட்டே இந்தத் தடை விதிக்கப்பட் டுள்ளது.

இந்தத் தடை அரச தரப்புக் கட்சிகளுக்கான அலுவல கத்தால் அரச தரப்பு நாடா ளுமன்ற உறுப்பினர்க ளுக்கு எழுத்து மூல அறி வித்தலாக விடுக்கப்பட்டுள் ளது.

பொதுநலவாய அமைப்பு நாடுகளின் மாநாடு எதிர் வரும் 10 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடை பெறவுள்ளது. அடுத்த ஆண் டுக்கான வரவு- செலவுத் திட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நாடாளு மன்றத்தில் முன் வைக்கப் படவுள்ளதோடு வரவு- செல வுத் திட்ட விவாதம் டிசெம் பர் மாதம் 21 ஆம் திகதி வரையிலும் இடம்பெற வுள்ளது.

அதனால் இந்த இரு மாதங் களிலும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் அரச நிறுவனங்களின் பிரதானி களுக்கும் கூட வெளிநாட் டுப் பயணங்களில் கலந்து கொள்வதற்கு அரசு தடை விதித்துள்ளது.

இந்தத் தடை விதிப்புக் குறித்து ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க வால் அமைச்சுக்களின் செயலர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் பிரதானி களுக்கு சுற்றறிக்கை மூல மாக அறிவிக்கப்பட்டுள் ளது. (ச-22)

# தகவல் வழங்க 'டொக்ளர் ரேடர்'



கொழும்பு,நவ.8

பொது மக்களுக்கும் மீன வர்களுக்கும் துல்லியமாக வானிலை முன்னறிவிப்புகளை வழங்குவதற்காக 'டொப்ளர் ரேடர்' முறையை அறிமுகப்படுத்த நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனூடாக, கடந்த காலங்களில் ஏற்பட்ட சில குறைபாடுகளை நிவர்த்திக்க முடியும் என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அண்மைக்காலங்களில் துல்லியமான எதிர்வு கூறல்கள் வழங்குவதில் சில பிரச்சினைகள் ஏற்பட்டன. உலக மற்றும் வலய மற்றும் உள்நாட்டு தரவுகளையும் அடிப்படையாக கொண்டு வானிலை முன் னறிவிப்புகள் வெளியிடப் படுகின்றன. எதிர்வு கூறல்கள் எப்பொழுதும் நூறு வீதம் சரியாக இருப்பதில்லை. 85 வீதமான எதிர்வு கூறல் களே உண்மையாகின்றன.

கணிப்பை மீறும் 15 வீத எதிர்வு கூறல்கள் தொடர் பிலே தான் அதிகமாக பேசப்படுகிறது. வானிலை அவதான நிலையத்தை மேலும் மேம்படுத்தி அதிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

# ரூ.60 மில்லியன் பெறுமதியான சிகரெட்டுகள் தீவைத்து அழிப்பு

கொழும்பு,நவ.8

சுங்க அதிகாரிகளால் கைப் பற்றப்பட்டிருந்த 29 லட்சம் சட்டவிரோத சிகரெட்டுகள் தீ வைத்து அழிக்கப்பட்டன என்று சுங்க அத்தியட் சகரும் பேச்சாளருமான லெஸ்லி காமினி தெரிவித் தார்.

அழிக்கப்பட்ட சிகரெட்டுக ளின் மொத்தப் பெறுமானம் 60 மில்லியன் ரூபாவாகும்.

சுமார் ஒரு வருடத்துக்கு முன்னர் இலங்கை நபர் ஒருவரால் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த சிகரெட்டுகள் சட்ட விரோ தமாக நாட்டுக்குள் கொண்டு



வரப்பட்டமையினால் அர சால் பறிமுதல் செய்யப்பட் டன என்று அவர் கூறினார். 40 அடி நீளமான கொள் கலனில் அடைத்து வைக் கப்பட்டிருந்த இந்த 29 லட் சம் சிகரெட்டுக்களும் ஊடக வியலாளர்கள் முன்னி லையில் கிராண்ட் பாஸில் வைத்து தீ மூட்டி அழிக் கப்பட்டன என்று அவர் தெரிவித்தார். (ச)

# மட்டக்களப்பில் விபசார விடுதி முற்றுகை

மட்டக்களப்பு,நவ.8

மட்டக்களப்பு,காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஹோட்டல் ஒன்றில் இயங்கி வந்த விபசார விடுதி முற் றுகையிடப்பட்டது.

மட்டக்களப்பு நீதிவான் நீதி மன்றில் பெற்றுக் கொண்ட முன் அனுமதிக்கு அமைய காத்தான்குடி பொலிஸார் குறித்த ஹோட்டலை சுற்றி வளைத்துள்ளனர்.

இதன்போது மூன்று பெண்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண் கள் வவுனியா மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந் தவர்களாவர்.

சந்தேகநபர்கள் மட்டக்க



ளப்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட வுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைக ளை மேற்கொண்டு வரு கின்றனர். (ச)

# மாநாட்டு பாதுகாப்பில் 20,000 பொலிஸார்

## கொழும்பு ஸ்தம்பிதம் அடையாது என்கிறது பொலிஸ் தலைமையகம்

கொழும்பு,நவ.8

பொதுநலவாய அரச தலை வர்கள் மாநாட்டை முன் னிட்டு விசேட பாதுகாப்புக் கடமைகளில் 20 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட வுள்ளனர். இதில் 5000 போக்குவரத்து பொலிஸா ரும் உள்ளடங்கியுள்ளனர் என்று பொலிஸ் தலைமை யகம் தெரிவித்துள்ளது.

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களுக்கான பாதுகாப்பு, அவர்கள் தங்கி இருக்கும் ஹோட்டல்க ளின் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்குத் தேவை யான தங்குதடையற்ற போக்குவரத்து வசதிகளை யும் பொலிஸ் திணைக் களமே மேற்கொள்ளவுள் ளது என்று பொலிஸ் ஊட கப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரு மான அஜித் ரோஹண தெரிவித்தார்.

பொது நலவாய அரச தலை வர்களின் மாநாட்டை முன்னிட்டு பொலிஸ் திணைக் களம் முன்னெடுத்து வரும் விசேட பாதுகாப்பு நடவடிக் கைகள் மற்றும் போக்குவ ரத்து ஏற்பாடுகள் தொடர் பாக ஊடகங்களுக்கு விளக்க மளிக்கும் செய்தியாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நடை பெற்றது.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கை வரும் அரச தலைவர்களின் வருகை யும், பொது மக்களின் அன் றாட நடவடிக்கைகளும் ஒன்றையொன்று பாதிக் காதவகையில் தேவையான சகல நடவடிக்கைகளையும் பொலிஸ் திணைக்களம் திட் டமிட்ட அடிப்படையில் முன்னெடுத்து வருகிறது என்று அவர் தெரிவித்தார்.

மாநாட்டை முன்னிட்டு கொழும்பு நகரும் அதனை அண்டிய பிரதேசமும் முற் றாக ஸ்தம்பிதம் அடை யும். அதனால் அன்றாட நடவடிக்கைகளை பொது மக்கள் முன்னெடுக்க முடி யாத நிலைமை ஏற் படும். இதனால் பொதுமக்கள் கொழும்புக்கு வரவேண் டாம் என்று தவறான பரப்புரைகள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன என்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அநுர சேன நாயக்க தெரிவித் தார். (ச)

# பொருத்தமான பொறிமுறை ஆணைக்குழுவிடம் இல்லை

மன்னார் பிரஜைகள் குழு குற்றச்சாட்டு

காணாமற் போனவர்களின் உறவுகளிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியான - பொருத்தமான பொறிமுறை ஜனாதிபதி ஆணைக்குழுவினால் ஏற்படுத்தப்படவில்லை என்று மன்னார் பிரஜைகள் குழு குற்றம் சாட்டியுள்ளது.

காணாமற்போனவர்கள் தொடர்பிலான பதிவுகளை ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சமர்ப்பித்த போதே மன்னார் பிரஜைகள் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

மன்னார் பிரஜைகள் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில்:

காணாமற் போனவர்கள் உயிருடன் இருக்கின்றனரா? இல்லையா? என்பதை ஒவ்வொரு விண்ணப்பம் சார்பிலும் முதலில் உறுதிப் படுத்தும் பணியை ஜனாதிபதி ஆணைக்குழு மேற்கொள்ளும் என்று உளப்பூர்வமாகவும் ஆழமாகவும் நம்புகின்றோம்.

இந்த வகையில் ஒருவர் உயிரோடு இருந்தால் தற்சமயம் அவர் எங்கு இருக்கிறார்? உறவினர் அவரை தாமதமின்றி காண முடியுமா? அடுத்த செயற்பாடு என்ன? உயிரோடு இல்லையெனில் அவருக்கு என்ன நடந்தது? எப்படி? எப்போது? யாரால் அது நடந்தது? அடுத்த செயற்பாடு என்ன?

இந்தக் கேள்விகளுக்கான விடைகள் காணப்படாவிட்டால் விசாரணைக்குழுவின் நோக்கம் கேள்விக்குறியாகும் என்பது வெளிப்படை.

இந்த ஆணைக்குழுவானது வெள்ளை வான்களால் கடத்தப்பட்டு காணாமற் போனவர்கள் தொடர்பில் விசாரிக்காது என்று தெரிய வருகின்றது. ஆணைக்குழுவின் விசாரணைக்காலம் 1990 ஆம்ஆண்டுக்கும் 2009ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்டதே. அத்துடன்வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டுமே விசாரணை மேற்கொள்ளப்படும் என்று தெரிகின்றது.

போருக்குப் பிந்திய காலத்திலும் கட்டாயமான காணாமற்போதல்கள் இடம்பெற்றுள்ளன. தென்பகுதியிலும் காணாமற் போதல்கள் இடம் பெற்றுள்ளன.

உள்நாட்டு வெளிநாட்டு மனித உரிமை அமைப்புக்கள் தங்கள் முறைப்பாடுகளை ஆணைக்குழுவிடம் முன்னிலைப்படுத்துவதற்கு சாதகமான எந்த விதமான வாய்ப்புக்களும் இருப்பதற்கான அறிகுறிகள் காணப்படவில்லை. இதனால் ஆணைக்குழுவின் நம்பகத் தன்மை கேள்விக்குறியாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

# வட மாகாண சபை வரவு செலவு திட்டம்

## முதலாவது அமைச்சரவைக் கூட்டம் நேற்று

வடக்கு மாகாணசபையின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் முதலமைச்சர் தலைமையில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. இதில் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடமாகாணசபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றி தமிழர் அர்சை நிறுவியுள்ளது. இந்த அரசுக்கான கன்னி அமர்வு இடம் பெற்று முடிந்துள்ளது. இந்த நிலையில் எதிர்வரும் பதினோராம்திகதி வடக்கு மாகாண சபையின் முதலாவது கூட்டம் இடம்பெறவுள்ளது.

இந்த நிலையில் வடக்கு மாகாண சபையின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம், நேற்று மாலை 4.30 மணியளவில் முதலமைச்சரின் உத்தியோகபூர்வ வதிவிடத்தில் இடம்பெற்றது.

இதில் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், மீன்பிடி அமைச்சர் ப.டெனீஸ்வரன் ஆகியோரும் பிரதம செயலாளர் திருமதி.ஆர்.விஜயலட்சுமி மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களும் கலந்துகொண்டனர்.

அமைச்சரவைக் கூட்டத்தில் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் ஆராயப்பட்டது. (ஐ-5)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## காணாமற்

கில் 5 ஆயிரம் படையினர் காணாமற் போயுள்ளதாக முறைப்பாடு கிடைத்துள்ளது- என்றார். (த-5)

## வருகிறார்

எந்த முடிவும் எட்டப்படவில்லை. ஆயினும் அவர் மாநாட்டில் பங்கேற்பதற்கு முடிவு செய்துள்ளார் என்று புதுடில்லி வட்டாரங்களில் இருந்து நேற்று இரவு அறிய முடிந்தது.

பிரதமரின் இந்த முடிவை பகிரங்கமாக அறிவித்தால், தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு மேலும் உக்கிரமடைந்து நிலைமை மோசமடையலாம் என்ற அச்சத்தாலேயே இதுவிடயத்தில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்று மத்திய அரசு சமாளித்துவருகின்றது .

கொழும்புப் பயணத்துக்கு மத்திய அமைச்சரவை மன்மோகனுக்கு ஒப்புதல் வழங்கினாலும், உள்நாட்டு அரசியல் நெருக்கடி உட்பட முக்கிய சில காரணங்களால் அவரது கொழும்பு பயணத்துக்கு முதல்நாளே மாநாடு குறித்த அறிவிப்பை டில்லி உத்தியோக பூர்வமாக விடுக்கும் எனவும் அவ்வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது.

இலங்கையில் நடைபெறும் பொது நலவாய மாநாட்டில் இந்தியாவின் சார்பில் எவரும் பங்கேற்கக்கூடாது என ஆரம்பம் முதலே வலியுறுத்தி வந்த தமிழக சட்டசபையிலும் இதனை மீள வலியுறுத்தி ஏகமனதாக தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன், தமிழகத்தில் ஆங்காங்கே மாநாட்டு எதிர்ப்புப் போரும் இடம்பெற்று வருவதால் இந்திய மத்திய அரசுக்கு மாநாடு விடயத்தில் கடும் நெருக்கடி ஏற்பட்டது. இவை ஒருபுற மிருக்க மறுபுறத்தில் மத்திய அமைச்சர்களான ப.சிதம்பரம், வாசன், ஜெயந்தி நடராஜன், அந்தோனி ஆகியோரும் மாநாட்டுக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கியதால் மத்திய அரசுக்கு மேலும் நெருக்கடி ஏற்பட்டது.

இவ்வாறு எதிர்ப்புகள் வலுத்தாலும், இந்திய வெளியுறவுத்துறை - மாநாட்டில் பிரதமர் கட்டாயம் பங்கேற்க வேண்டும் எனப் பரிந்துரை செய்தது. இதனையடுத்து, இதுவிடயத்தில் முடி வெடுக்கும் அதிகாரத்தை பிரதமரிடம் ஒப்படைத்துவிட்டு மத்திய கூட்டணி அரசின் பிரதான கட்சியான காங்கிரஸும் அதிலிருந்த நழுவியது.

எனவே, முடிவெடுக்கும் சக்தி அமைச்சரவைக்கு வழங்கப்பட்டது. மாநாட்டில் பங்கேற்க மன்மோகன் முடிவெடுத்துள்ளதால் அதற்கு அமைச்சரவை பச்சைக்கொடி காட்டும் என்ற கருத்தில் மாற்றத்துக்கும் இடமில்லை என்று டில்லி அரசியல் நோக்கர்கள் குறிப்பிடுகின்றனர்.

இழுத்தடிப்பை மேற்கொண்டு வந்த பிரதமர் மன்மோகன் சிங் கொழும்பு மாநாட்டில் பங்கேற்கும் முடிவை எடுப்பதற்கு கீழ்வரும் காரணங்கள் ஏதுவாக அமைந்தன என்றும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அவற்றில்,

1) தெற்காசிய நாடொன்றில் பொதுநலவாய மாநாடு நடைபெறவுள்ள நிலையில், குறித்த வலயத்தில் பலம் பொருந்திய நாடான இந்தியா அதைப் புறக்கணிப்பதால் சர்வதேச ரீதியில் ஏற்படும் தாக்கங்கள்.

2) மாநாட்டை புறக்கணித்தால் இலங்கையில் காலூன்றும் சீனாவின் ஆதிக்கம் மேலும் தலைதூக்கும். இதனால் இந்தியாவுக்கு பொருளாதார ரீதியில் இழப்புகள் ஏற்படும் அபாயம்.

3) இலங்கை சம்பந்தப்பட்ட மாநாடு அல்ல. பொதுநலவாய அமைப்பின் மாநாடு. எனவே, அதன் அங்கத்துவ நாடாக இருந்துகொண்டு அதில் பங்கேற்காவிட்டால் எதிர்காலத்தில் ஏற்படும் சர்வதேச நெருக்கடிகள்.

4) இலங்கையுடன் அண்மையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள்.

இவையே பட்டியலில் முன்னிலையில் இருக்கும் காரணிகளாகும்.

அதேவேளை, கொழும்பு மாநாட்டுக்குச் சென்றால் தமிழகத்தில் ஏற்படும் நெருக்கடிகளை சமாளிக்கவும் சவுத் புளொக் பிரதமருக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. அதாவது, இலங்கைப் பயணத்தின் போது யாழ்ப்பாணத்துக்கு முதலில் சென்று அங்கு கூட்டமைப்புடன் பேச்சு நடத்தினால் நெருக்கடிகளை ஓரளவேனும் சமாளிக்கலாம் என்பதே அந்த ஆலோசனை என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும், பிரதமர் மன்மோகனின் பயண நிகழ்ச்சி நிரலை இந்தியா இன்னும் வெளியிடவில்லை. எது எப்படியிருப்பினும், கொழும்பு மாநாட்டுக்கு மன்மோகன் வருவாரா? வரமாட்டாரா என்ற கேள்விக்கு, வருவார் என்ற பதில் தற்போது கிடைத்துள்ளது.

இது தொடர்பில் தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஞானதேசிகனிடம் உதயன் வினவியபோது, "இது காங்கிரஸ் கட்சி சம்பந்தப்பட்ட விடயமல்ல. எனவே, அது குறித்து கருத்து கூறமுடியாது. பொதுநலவாய மாநாடு தொடர்பில் மத்திய அரசே முடிவெடுக்க வேண்டும்"- என்றார்.

"கொழும்புக்கு இந்தியாவின் சார்பில் ஒரு துரும்புகூட போகக்கூடாது என கலைஞர் கருணாநிதி தெளிவாகக் கூறியுள்ளார். இதையும் மீறி பிரதிநிதிகள் செல்வார்களாயின் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும். அதற்காக தமிழகம் தயாராகின்றது" என்று உதயனிடம் கூறினார் தி.மு.கவின் செய்தித் தொடர்பாளர் டி.கே.எஸ். இளங் கோவன். (த-5)

## வலி.வடக்கில்

களை இந்து மற்றும் சிவில் அமைப்புகள் மேற்கொண்டுள்ளன.

கடந்த 20 வருடங்களாக இடம்பெயர்ந்து பல்வேறு துன்ப துயரங்களுக்கு மத்தியில் நலன்புரி நிலையங்களிலும், தனியார் வீடுகளிலும் வாழ்ந்து வரும் வலி.வடக்கு மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்கு அருள் கிடைக்க வேண்டி இந்தக் கூட்டுப் பிரார்த்தனை இடம்பெறுகிறது.

இந்தப் பிரார்த்தனையில் இடம்பெயர்ந்த மக்கள் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-400-86)

## போகக்

பொதுநலவாய மாநாட் டில் இந்தியா கலந்துகொள் ளக்கூடாது என்ற கோரிக்கையை வலியுறுத்தி, திண்டுக்கல் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் சட்டத் தரணிகள் நேற்றுப் போராட்டம் நடத்தினர்.

இதேவேளை, அரியலூரில் வழக்கறிஞர்கள் சங்க அவசரக் கூட்டம் சங்கத் தலைவர் செல்வராஜ் தலைமையில் நடத்தது. இதன் போது, பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாதென்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

பின்னர் அவரது தலைமையில் வழக்கறிஞர் கள் நீதிமன்ற வளாகத்தில் இருந்து ஊர்வலமாகத் தபால் நிலையத்துக்குச் சென்று அலுவலகத்துக்குப் பூட்டுப் போட்டு மூடும் போராட்டத்தை நடத்த முயன்றுள்ளனர். இதன் போது 19 பேர் கைது செய்யப்பட்டனர்.

மாணவர்கள் மறியல்

தமிழக மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் கூட்டமைப்பின் சார்பில் ஈரோடு பஸ் நிலையம் முன்பாக சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. அப்போது, இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக்கூடாது என்பதை வலியுறுத்தி மாணவர்கள் முழக்கமிட்டனர். இதனையடுத்து மறியலில் ஈடுபட்டவர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

இதேபோன்று திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில், தமிழின உணர்வாளர்கள் கூட்டமைப்பினர் பேரணியாகச் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடையடைப்பு

எதிர்வரும் 12ஆம் திகதி தமிழகம் முழுவதும் கடையடைப்புப் போராட்டம் நடத்துமாறு ம.தி.மு.க. உள்ளிட்ட 21 அமைப்புக்கள் அழைப்பு விடுத்துள்ளன. (முன்னர் வந்த செய்தி 6ஆம் பக்கத்தில்) (த-5)

## சிசு கொலை

சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அந்தப்பெண் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பூம்புகார், கல்மடு பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில்மேலும் தெரிய வருவதாவது:

பூம்புகார் கல்மடு பகுதியைச் சேர்ந்த திருமணமான பெண் ஒருவரே இந்த ஆண் சிசுவைப் பெற்றெடுத்துள்ளார். இதன் பின்னர் அவரது வீட்டு மலசல கூடத்துக்கு அருகில் சிசு கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டதாக தெரிய வருகிறது.

குழந்தையைப் பெற்றெடுத்த பெண் அதிக இரத்தப் போக்குக் காரணமாக உடல் சோர்வடைந்தநிலையில்வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் சேர்க்கப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணைகளின் மூலம் குறித்த பெண்ணின் வீட்டுக்குச் சென்ற பொலிஸார் புதைக்கப்பட்ட ஆண் சிசுவைச் சடலமாக மீட்டெடுத்தனர்.

இதனையடுத்து குழந்தையைப் பெற்றெடுத்த பெண்ணைப் பொலிஸார் கைது செய்து விசாரணைக்குட் படுத்தியுள்ளனர். (த-4)

## காணாமற்

ளது.

14ஆம் திகதி போராட்ட முடிவில் ஆயிரக்கணக்கானோர் திரண்டு, நகர மண்டபத்திலிருந்து சுதந்திர சதுக்கம் வரை மெழுகுவர்த்தி ஏந்திக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்துவர் - என்றார். (த-5)

## இலங்கை

மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் இறுதிக்கட்டப் போரின் போது காணாமற் போனவர்கள் தொடர்பில் உரிய முறையில் விரிவான விசாரணைகளை நடத்துமாறு இலங்கை அரசை பிரிட்டன் பிரதமர் வலியுறுத்துவார்.

இலங்கையில் காணாமற் போனமை தொடர்பில் 5 ஆயிரத்து 676 முறைப்பாடுகள் விசாரணை செய்யப்படாமல் நிலுவையில் இருக்கின்றன என்பது குறிப்பிடப் பட்டுள்ளது.

காணாமற் போனவர்கள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று இலங்கையை வலியுறுத்து வோம் - என்றார். (த-5)

## காணி

வொரு மாவட்டங்கள் தோறும் அலுவலகங்கள் கடந்த மார்ச் மாதம் திறந்து வைக்கப் பட்டன.

இதற்குப் பொறுப்பாக அதிகாரிகள் நியமிக்கப்பட்ட போதும் அவர்கள் அந்தப் பதவியில் தொடர்ந்தும் இருக்காமல் விலகி விட்டனர். மக்களின் காணிகளை இராணுவத்துக்குப் பறித்துக் கொடுப்பது மனச் சாட்சிக்கு விரோதமாக இருந்தமையாலேயே அவர்கள் அந்தப் பதவிகளில் தொடர்ந்து நீடிக்கவில்லை. அத்துடன் அந்தப் பதவிக்கு புதிதாக யாரும் விண்ணப்பிக்கவும் இல்லை.

இந்த நிலையில் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் அரசுக்குச் சிக்கல் நிலை தோன்றி இருந்தது. இதனையடுத்து காணி சுவீகரிப்பைத் தொடர்ந்து முன்னெடுக்க வசதியாக அந்தந்தப் பகுதிகளின் பிரதேச செயலர்களையே காணி சுவீகரிப்பு அதிகாரிகளாக நியமிக்கத் திட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளதாக நம்பகரமாகத் தெரியவருகிறது. (த-5)

# கரைச்சி பிரதேச சபையின் விளையாட்டுப் போட்டிகள்

கிளிநொச்சி, நவ.8

கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட சன சமூக நிலையங்களுடன் இணைந்த விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான உள்ளூராட்சி வாரத்தையொட்டிய துடுப் பாட்டம், ஆண்களுக்கான 6 பேர் கொண்ட மென்பந்து துடுப்பாட்டம் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியும் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கனகபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.



"-" எதிர் வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கனகபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்த கழகங்கள் அனைத்தையும் அன்றைய தினம் காலை 8 மணிக்கு முன்பதாகவே வருகை தருமாறும் விண்ணப்பிக்காத போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் இருப்பின் அன்றைய தினம் காலை 7.30 மணிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

# மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலராக வடக்கு மாகாணத்தில் ஐந்து பேர் சித்தி



மதியழகன்



சசிகுமார்



சிவகௌரி சசிகரன்



சி.சிவச்செல்வன்



ர.சிறிரமணன்

வலி.வடக்கு, நவ.8

இலங்கை மெய்வன்மைத் தேசிய தொழில் நுட்ப அலுவலர்களாக வடக்கு மாகாணத்தை சேர்ந்த ஐவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். இந்த ஐவரில் இருவர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உடற்கல்வி போதனாசிரியர்கள் மூவர் ஆசிரிய சேவையைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்கள் கடந்த 2011 ஆம் ஆண்டு இலங்கை மெய்வன்மைச் சங்கத்தினால் நடத்தப்பட்ட சர்வதேச மெய்வன்மைச் சங்கங்களின் சம்மேளன மெய்வன்மைத் தரம் ஒன்று பயிற்சி நெறியைப்பூர்த்தி செய்து குறிப்பிட்ட பரீட்சையிலும் சித்தி அடைந்துள்ளனர்.

குறிப்பிட்ட ஐவரும் அடுத்த மாதம் 7 ஆம் திகதி கொழும்பு தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகத்தில் நடைபெறவுள்ள சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் தேசிய தொழில்நுட்ப அலுவலர்களாக நியமனம் பெறவுள்ளார்கள்.

தேசிய தொழில்நுட்ப அலுவலர்களாக புதிதாக நியமனம் பெறும் அலுவலர்களுடன் சேர்த்து வடக்கு மாகாணத்தை சேர்ந்த 10 அலுவலர்கள் தேசியமட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளில் மத்தியஸ்தம் வகிக்கத் தகுதி பெற்றுள்ளார்கள்.

தேசிய தொழில்நுட்ப அலுவலர்களாக நியமனம் பெறவுள்ளவர்களின் விவரம் வருமாறு:-

ஜே.டி.மதியழகன் (யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உடற்கல்வி போதனாசிரியர்), திருமதி சிவகௌரி சசிகரன் (யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உடற்கல்வி போதனாசிரியர்), ர.சிறிரமணன் (கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலய ஆசிரியர்), சி.சிவச்செல்வன் (கிளிநொச்சி இந்துக் கல்லூரி ஆசிரியர்), எம்.சசிகுமார் (நீர்வேலி அத்தியார் இந் துக் கல்லூரி ஆசிரியர்). (த-86)

# நட்சத்திர ஆட்டத்தில் அசத்திய அணிகள்

யாழ்ப்பாணம், நவ. 8


மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தும் நட்சத்திர உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-



முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் நவ ஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் விண்மீன் விளையாட்டுக்கழகம் 7:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொற்றவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம் 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# சதுரங்கப் பயிற்சி கிளிநொச்சியில்



கிளிநொச்சி.நவ.8

கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் வட மாகாண ஆளுநர் செயலகத்தினால் ஒழுங்கு படுத்தப்பட்ட சதுரங்கப் பயிற்றுவிப்பாளர் செல்வி. எஸ். வித்தியாராணியினால் கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்களுக்கு சதுரங்கப் பயிற்சி வழங்கப்பட்டது.

கடந்த 29 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி வலய உடற்கல்வி பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் பி. விஷ்ணு தலைமையில் இந்தப் பயிற்சி வகுப்பு ஆரம்பமானது.

ஆரம்பநிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட சதுரங்க சங்கத் தலைவர் தி.சிவரூபன் கல்லூரியின் உடற் கல்வி ஆசிரியர் திருமதி நந்தினி திருக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தப் பயிற்சியானது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனவும் ஏனைய பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (த-405)

# வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், நவ.8

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'யாழ்ப்பாணச் சமர்' உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணிக்கும், வல்வை விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத் தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் 3:0 என்ற கோல் கணக்கில் வென்றது.

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணிக்கும் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# மகாஜனா மூன்றாமிடம்

வலி.வடக்கு.நவ.8

'நாயகர்களின்போர்' உதைபந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி கடந்த பல வருட கால இடைவெளியின் பின்னர் மீண்டும் நாயகர்களின்போர் உதைபந்தாட்டப் போட்டியை இம்முறை ஏற்பாடு செய்திருந்தது.



மூன்றாம் இடத்துக்கான போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும், ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் பலம் பொருந்திய அணிகளாக காணப்பட்ட போதிலும் மகாஜனக் கல்லூரி முதல் பாதி ஆட்டத்தில் அதிரடியாகக் கோல்களைப் பெற்று 2:0 என்ற நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் கூட யூனியன் கல்லூரி கடும் எதிர்ப்பைக் காட்டி விளையாடிய போதிலும் மீண்டும்ஒரு கோலை பெற்று மகாஜனக் கல்லூரி முன்னிலையில் இருந்தது.

ஆட்ட நிறைவில் மகாஜனக் கல்லூரி 3:0 என்ற கோல்கள் கணக்கில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை பெற்றுக் கொண்டது. (த-86)

# மன்னார் ஸ்ரார் ஈகிள்ஸ் கொழும்பில் அபார வெற்றி

மன்னார், நவ.8

மன்னார் பெரியகடை ஸ்ரார் ஈகிள் அணிக்கும் கொழும்பு முகத்துவாரம் கிரிக்கெட் அக்கடமி அணிக்கும் இடையிலான கிரிக்கெட் ஆட்டம் ஒன்று கடந்த வாரம் கொழும்பு மூர்ஸ் கிரிக்கெட் அக்கடமி யாட்டு மைதானத்தில் இடம் பெற்றது. இதில் மன்னார் பெரிய கடை ஸ்ரார் ஈகிள்ஸ் அணி அபார வெற்றிபெற்றது.


நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற முகத்து வாரம் கிரிக்கெட் அக்கடமி அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதற்கு அமைய முதலில் துடுப்பெடுத்தாடிய மன்னார் பெரிய கடை ஸ்ரார் ஈகிள் அணி 15 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றது. இதில் றோய் 76 ஓட்டங் களையும், அஜந்தன் 30 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் முகத்துவாரம் கிரிக்கெட் அணி சார்பாக கலும் 4 பந்துப்பரி மாற்றங்கள் பந்து வீசி 5 இலக்குகளை வீழ்த்தினார்.

137 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய முகத்து வாரம் கிரிக்கெட் அக்கடமி அணி 15 பந்துப் பரிமாற் றங்கள் நிறைவில் 8 இலக் குகளை இழந்து 115 ஓட்டங் களை மட்டும் பெற்றது.

இதில் ருவி 20 ஓட்டங்களையும், நிரேசன் 18 ஓட்டங்களையும், கிசோர் 15 ஓட்டங்களையும், கவிதாஸ் 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மன்னார் பெரிய கடை ஸ்டார் ஈகிள் அணி சார்பில் அமல் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 3 இலக்குகளையும், அகிலன் 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 2 இலக்குகளையும், ஜக்சன் 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (த-23)



# பாகிஸ்தானை வென்றது தென்னாபிரிக்கா



ஐக்கிய அரபு இராச்சியத்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னா பிரிக்க அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமி டையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் 3ஆவது போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றுள்ளது. அபுதாபியில் இடம்பெற்ற இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னா பிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.
இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னா பிரிக்க அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 259 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.
20 ஓட்டங்களுக்கே முதலாவது இலக்கை அந்த அணி இழந்த போதிலும், இரண்டாவது இலக்காக 77 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்தன. ஆனால் 2ஆவது, 3ஆவது இலக்குகள் இலகுவாக வீழ்த்தப்பட, 4ஆவது இலக்காக 70 ஓட்டங்களும், 5ஆவது இலக்காக 61 ஓட்டங்களும் பகிரப்பட்டிருந்தன.
துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஜே.பி.டுமினி 88 பந்துகளில் 64 ஓட்டங்களையும்.டு பிளெஸிஸ் 60 பந்துகளில் 55 ஓட்டங்களையும், குயின்டன் டீ கொக் 57 பந்துகளில் 40 ஓட்டங்களையும், ஏபி.டி.வில் லியர்ஸ், டேவிட் மில்லர் இருவரும் தலா 34 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக மொஹமட் இர்பான் 46 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், சயீட் அஜ்மல் 38 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ஷகிட் அப்ரிடி 41 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை யும், சொஹைல் தன்வீர் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.
260 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 44.3 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குளையும் இழந்து 191 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 68 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.
சிறப்பான ஆரம்பமாக முதலாவது இலக்குக்காக 50 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, அதன்பின்னர் தொடர்ச்சி யாக இலக்குகளை இழந்திருந்தது. 7 இலக்குகளை இழந்து 116 ஓட்டங்க ளுடன் காணப்பட்ட அவ்வணி சார்பாக பின்வரிசை வீரர்கள் ஓரளவு சிறப்பாக ஆடிய போதிலும், அவ்வணிக்கு வெற்றி கிட்டவில்லை.
துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக வகாப் றியாஸ் 47 பந்துகளில் 33 ஓட்டங்களையும், அஹமட் ஷெஹாத் 24 பந்துகளில் 34 ஓட்டங் களையும், சொஹைல் தன்வீர் 38 பந்துகளில் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக இம்ரான் தாஹிர் 53 ஓட் டங்களுக்கு 4 இலக்குகளையும், றயன் மக்லரன், மோர்னி மோர்க்கல் இருவ ரும் தலா 2 இலக்குகளையும், லொன் வபோ சொற்சொபி, டேல் ஸ்ரெய்ன் இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். இப்போட்டியின் நாயக னாக தென்னாபிரிக்க அணியின் டு பிளெஸிஸ் தெரிவானார். 5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் 3 போட்டிகளின் நிறைவில் தென்னா பிரிக்க அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக் கின்றமை குறிப்பிடத் தக்கது. (த)

# பெடரரை வீழ்த்தினார் ஜோகோவிச்



ஏ.டி.பி உலக ரென்னிஸ் தொடரின் முதல் சுற்றில் சேர்பியாவின் ஜோகோவிச், சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரரை வீழ்த்தினார்.
லண்டனில் ஏ.டி.பி உலக ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதில் ஏ.டி.பி தரவரிசையில் ஒற்றையர் மற்றும் இரட்டையரில் முதல் 8 வரிசையில் உள்ள வீரர்கள் விளையாடுகின்றனர். இதில் ஒற்றையருக்கான பி பிரிவு போட்டியில், சேர்பியாவின் ஜோகோவிச், சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரரை எதிர்கொண்டார்.
இதன் முதல் செற்றை 6-4 எனக் கைப்பற்றிய ஜோகோ விச், 2ஆவது செற்றை 6-7 எனக் கோட்டைவிட்டார். தொடர்ந்து நடந்த மூன்றா வது செற்றில் எழுச்சிகண்ட ஜோகோவிச் 6-2 என சுலபமாக செற்றைத் தன்வசப்படுத்தி னார். முடிவில் ஜோகோவிச் 6-4, 6-7, 6-2 என்ற செற்களில் வெற்றி பெற்றார். 'ஏ' பிரிவில் நடந்த மற்றொரு ஒற்றையர் பிரிவு போட்டியில் உலகின் முதல்நிலை வீரரான ஸ்பெயினின் ரபேல் நடால், சகவீரரான டேவிட் பெரரரை 6-3, 6-2 என்ற நேர் செற்களில் வீழ்த்தினார். (த)

# இலங்கைக் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளராக அத்தபத்து?




இலங்கைக் கிரிக்கெட் அணியின் பிரதான பயிற்றுவிப்பாளர் பதவிக்கான இறுதி நேர்முகப் பரீட்சைக்காக மாவன் அத்தபத்து மற்றும் தென்னா பிரிக்காவின் மார்க் டெவிஸ் ஆகியோரின் பெயர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.
இலங்கைக் கிரிக்கட் நிறுவனம் இந்ததகவலை வெளியிட்டுள்ளது.
இது தொடர்பாக இடம்பெற்று இலங்கைக் கிரிக்கட்டின் உயர் மட்ட சந்திப்பின் போது, குறித்த இருவரின் பெயர்களும் இறுதி செய்யப்பட்டுள் ளன. அவர்கள் இருவரில் யார் இலங்கையின் பயிற் றுவிப்பாளர் என்பது தொடர்பில், விரைவில் தீர்மா னிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# விண்வெளிக்கு செல்லும் ஒலிம்பிக் சுடர்




2014ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் சுடர் விண்வெளிக்கு எடுத்துச் செல் லப்படுகிறது. அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் ரஷ்யாவில் ஒலிம்பிக் போட்டி கள் நடைபெறவுள்ளன.
இந்த போட்டிகளுக்கான ஒலிம்பிக் சுடர் உலக நாடுகள் பலவற்றின் ஊடாக எடுத்துச் செல்லப்பட்டு, தற் போது விண்வெளிக்கு எடுத்துச் செல் வதற்கான நடவடிக்கையை ரஷ்யா மேற்கொண்டுள்ளது.
இதன் நிமித்தம் ரஷ்யாவின் விண் வெளி வீரர்கள் மூன்று பேர் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
அவர்கள் எதிர்வரும் சனிக்கிழமை ஒலிம்பிக் சுடருடன் விண்வெளியை அடைவதுடன், சுடருடன் விண்வெ ளியில் நடப்பார்கள் என்று தெரிவிக் கப் படுகிறது. விண்வெளியில் முதன் முதலில் நடந்தவர், யூரி ககாரின் என்ற ரஷ்ய விண்வெளி வீரர் என் பது குறிப்பிடத்தக்கது. (த)

# விவியன் ரிச்சர்ட்ஸின் நினைவுச் சின்னம் சூறை



கிரிக்கெட் உலக ஜாம்பவான்களில் ஒருவ ரான விவியன் ரிச்சர்ட்ஸின் நினைவுச் சின்னம் சூறையாடப்பட்டுள்ளது.
கிரிக்கெட் உலக ஜாம்பவான்களில் ஒருவ ரும், மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் அணித்தலைவருமானவர் விவியன் ரிச்சட்ஸ். இவரது வீடு உள்ள சென்.ஜோன்ஸில் தெருவில் நினைவுச் சின்னம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.
இதனை விஷமிகள் சிலர் சூறையாடி உள்ளனர்.
இதற்கு ஆண்டிகுவா- பார்புடா கிரிக்கெட் சங்கத் தலைவர் சோரோல் பார்த்லே கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.
மேலும் அவர் கூறுகையில், இது தேசிய அவமானம், வருத்தத்திற்குரிய செயல். தேசியப் பெருமையின் முக்கியத்துவத்தை உணராதவர்கள் செய்த செயல் இது. இதற்காக நான் அவமானப் படுகிறேன் என்று கூறியுள்ளார். (த)

# சர்மா, அஸ்வின் அதிரடி மீண்டது இந்தியா



இந்தியா, மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் இடையேயான 2 டெஸ்ட் போட்டித் தொடரில் முதல் போட்டி கல்கத்தா ஈடன்கார்டன் மைதானத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. சச்சின் டெண்டுல்கரின் பிரிவுபசார டெஸ்ட் தொடர் என்பதால் இதற்கு அதிக எதிர்பார்ப்பு இருந்தது. மேற்கிந்தியத்தீவுகள் அணி முதல் இன்னிங்சில் 234 ஓட்டங்களுக்குள் சுருண்டது. சாமுவேல்ஸ் அதிகபட்சமாக 65 ஓட்டங்களையும், சந்தர்பால் 36 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் முகமது ஷமி 4 இலக்குகளையும், அஸ்வின் 2 இலக்குகளையும், டெண்டுல்கர், புவனேஸ்வர்குமார் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பின்னர் முதல் இன்னிங்ஸை விளையாடிய இந்தியா முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் இலக்குகள் இழப்பின்றி 37 ஓட்டங்கள்எடுத்து இருந்தது. தவான் 21 ஓட்டங்களுடனும், முரளி விஜய் 16 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

நேற்று 2 ஆவது நாள் ஆட்டம் நடந்தது. இருவரும் தொடர்ந்து ஆடினார்கள். இந்திய அணியின் தொடக்கம் சிறப்பாக அமையவில்லை. ஆரம்பத்தில் இலக்குகளை இழந்து தடுமாறியது இந்திய அணி இருந்த போதும் ரோகித் சர்மா மற்றும் அஷ்வின் ஆகியோரின் துடுப்பாட்டத்தால் சரிவில் இருந்து மீண்டது அவ்வணி. தொடக்க வீரர்கள் சொற்ப ஓட்டத்துடன் ஆட்டம் இழந்தனர். ஆட்டம் தொடங்கிய 3ஆவது பந்துப் பரிமாற்றத்தில் ஷிகார் தவான் மேலும் 2 ஓட்டங்களை எடுத்து 23 ஓட்டங்களில் ஷில்லிங் போர்டு பந்தில் இலக்கை பறிகொடுத்து வெளியேறினார். தவான் ஆட்டம் இழந்த சிறிது நேரத்தில் மற்றொரு தொடக்க வீரரான முரளி விஜய்யும் பவிலியன் திரும்பினார். அவர் 26 ஓட்டங்கள் எடுத்தார். அவரது இலக்கையும் ஷில்லிங் போர்டே கைப்பற்றினார்.

3 ஆவது இலக்குக்காக புஜாராவுடன் டெண்டுல்கர் ஜோடி சேர்ந்தார். தனது 6 ஆவது பந்தில் அவர் தனது முதல் ஓட்டத்தை எடுத்தார். ஷில்லிங் போர்டு வீசிய அடுத்த பந்து பரிமாற்றத்தில் டெண்டுல்கர் அடுத்தடுத்து 2 நான்கு ஓட்டங்களை அடித்தார்.அணியின் எண்ணிக்கை 79 ஆக இருந்த போது புஜாரா 17 ஓட்டங்களில் கோட்ரெல் பந்தில் ஆட்டம் இழந்தார். அதை தொடர்ந்து அனைவராலும் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட டெண்டுல்கரும் ஆட்டம் இழந்தார். அவர் 10 ஓட்டங்களே எடுத்து ஏமாற்றம் அளித்தார். அவர் வெளியேறி சிறிது நேரத்தில் விராட் ஹோக்லியும் 3 ஓட்டங்களுடன்ஆட்டம் இழந்தார்.

இந்திய அணி 5 இலக்கு இழப்புக்கு 83 ஓட்டங்கள் என்ற பரிதாபநிலையில் இருந்தது. 6 ஆவது இலக்குக்காக இணைந்த ரோகித் சர்மா, டோனி ஜோடி இலக்குகள் சரிவை தடுத்து நிறுத்தியது. மதிய உணவு இடைவேளையின் போது இந்திய அணி 5 இலக்கு இழப்புக்கு 120ஓட்டங்களை எடுத்து இருந்தது.

50.1 ஆவது பந்து பரிமாற்றத்தில் 150 ஓட்டங்களைப் பெற்றது. அணி 156 ஓட்டங்களைப் பெற்ற போது இந்த ஜோடி பிரிந்தது. சிறப்பாக ஆடிய டோனி 42 ஓட்டங்களில் பவிலியன் திரும்பினார். அவரது இலக்கை பெஸ்ட் கைப்பற்றினார். 7 ஆவது இலக்குக்காக ரோகித் சர்மாவுடன் அஸ்வின் ஜோடி சேர்ந்தார். இருவரும் நிதானமாக விளையாடி ஓட்டங்களை சேர்த்தனர். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய அறிமுக வீரர் ரோகித்சர்மா டெஸ்ட் அரங்கில் தனது கன்னிச் சதத்தை பதிவு செய்தார். எதிர்முனையில் இவருக்கு நல்ல ஒத்துழைத்த அஸ்வின் அரைச் சதம் அடித்தார். 2 ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் இந்திய அணி 6 இலக்குகளை இழந்து 354 ஓட்டங்களைச் சேர்த்து 120 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது. ரோகித் 127 ஓட்டங்களுடனும், அஸ்வின் 92 ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர். இன்று போட்டியின் 3ஆவது நாளாகும். (400)

## துடுப்பாட்டத்தில் ஏமாற்றம் பந்து வீச்சில் சாதிப்பு



மேற்கிந்தியதீவுகள் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில், சச்சின் 10 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார்.

இந்தியா வந்துள்ள மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டி கல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் நடக்கிறது.

மேற்கிந்தியதீவுகள் அணி முதல் இன்னிங்சில் 234 ஓட்டங்கள் எடுத்தது.

முதல்நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி முதல் இன்னிங்சில் இலக்கு இழப்பின்றி 37 ஓட்டங்கள் எடுத்திருந்தது. முரளி விஜய் 16 ஓட்டங்களுடனும், தவான் 21 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இரண்டாவது நாள் ஆட்டத்தை தொடர்ந்த இந்திய அணிக்கு ஷிகர் தவான்(23 ஓட்டங்கள்) நீண்ட நேரம் தாக்குபிடிக்கவில்லை.பொறுமையான ஆட்டத்தை வெளிப்படுத்திய முரளி விஜய்(26 ஓட்டங்கள்) ஷில்லிங் போர்ட் சுழலில்' சிக்கினார். தொடர்ந்து 199ஆவது டெஸ்டில் களமிறங்கிய சச்சின்(10 ஓட்டங்கள்) ஏமாற்றினார். புஜாரா(17 ஓட்டங்கள்), ஹோக்லி (3 ஓட்டங்கள்) நிலைக்கவில்லை.

இதேவேளை துடுப்பாட்டத்தில் ஏமாற்றிய சச்சின் பந்து வீச்சில் அசத்திச் சாதனை படைத்தார். நேற்றைய தினம் ஷில்லிங் போட்டின் இலக்கை வீழத்தியதன் மூலம் 200 இலக்குகளை வீழ்த்திய மைல்கல்லை எட்டினார். (த)

## சச்சினும், நானும்

சச்சின் டெண்டுல்கர் பற்றி உணர்ச்சி வசப்பட்டு பேசியுள்ளார் முன்னாள் அணித்தலைவர் சௌரவ் கங்குலி.

சச்சின் டெண்டுல்கர் குறித்து மனம் திறந்து பேசியுள்ளார் கங்குலி.

அவர் கூறுகையில், பயிற்சியாளர் சப்பலுக்கும் எனக்கும் இடையே இடைவெளி ஏற்பட்டபோது என் பக்கம் நின்றார் சச்சின்.

சப்பல் பேச்சைக் கேட்டு என்னை அணியிலிருந்து விலக் கியபோது, எனக்கும், சப்பலுக்கும் தான் பிரச்சினை என்று நினைத்தேன்.

ஆனால் நான் மீண்டும் அணிக்குத் திரும்பியபோது தான் சப்பலுக்கும், அத்தனை பேருக்கும் பிரச்சினை என்பதை உணர்ந்தேன்.

சப்பல், என்னுடன் மட்டுமல்ல சச்சினுடனும் மோதியுள்ளார் என்பதை அப்போதுதான் அறிந்தேன்.

மிகவும் அமைதியான வி.வி.எஸ். லட்சுமணனையே பதற்றப்படுத்தியவர். அவருக்கு இந்தியாவில் உண்மையிலேயே 'நல்ல' பெயர் கிடைத்தது.

எல்லோரையும் போலவே சச்சினும் பலமுறை நிலை தடுமாறுபவர்.ஆனால் அதை ஒருபோதும் வெளியில் காட்டிக் கொள்ள மாட்டார்.

விமர்சனங்களைக் கண்டு அவர் மனம் துவண்டாலும் கூட வெளியில் காட்டிக் கொள்ள மாட்டார் என்று தெரிவித்துள்ளார்.

சச்சினும், கங்குலியும் கிட்டத்தட்ட 10 வருடம் அணியில் ஒன்றாக இணைந்து விளையாடியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

போட்டிப் பரீட்சை
கருத்தரங்கு
காதல நினைக்கள
விவசாய அபிவிருத்தி
உத்தியோகத்தர் தெரிவுக்கு
ஒவ்வொரு சனியும்
பிப 1.00 - 4.00 மணி வரை
SLEAS
ஒவ்வொரு ஞாயிறும்
காலை 10.00 மணி–4.00 வரை
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி
கொமர்ஷல் வங்கி அருகில்)

G.A.Q, B.A யாழ், பேராதனை
G.A.Q, B.A Part - I, B.A Final
துரித மீட்டல், வினா விடை வகுப்புக்கள்
ஆரம்பம்: 09.11.2013 சனி - 9 Am
தொடர்பு: 077 175 3838
பட்டப்படிப்புக்கள் கல்லூரி
57/18, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(இலங்கை வங்கி முன்பாக)

பணிப்பெண் தேவை
வவுனியாவில் உள்ள வீடு ஒன்றில் தங்கி நின்று வீட்டு வேலைகள் மற்றும் சமையல் வேலைக்கு உதவிசெய்ய பணிப்பெண் தேவை. (வவுனியாவை அண்டிய பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0777585 913

உதயன் அங்காடி - இலவச விளம்பரம்
இன்று 5.00 மணிக்கு முன்னர் எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்படும் "மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு" விளம்பரம் வரும் ஞாயிறு அங்காடியில் இலவசமாக பிரசுரிக்கப்டும்.
மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
07 6603 6604, 021 567 4455

FALC FRENCH LANGUAGE CENTRE
CENTRE FOR FRENCH
FRENCH CLASSES
France,Canada,Belgium செல்வோர், சிறுவர்கள்(8-13வயது) French கற்று International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்..
ஆசிரியர்: Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற்கொள்பவரும்.
வடக்கில் இருந்து எம் மாணவர்கள் மட்டுமே கடந்த DELF A1 Exam இல் சித்தி... நேரம்,பணம் வீணாகாது 8 மாதத்தில் DELF Exam எழுதலாம்....
ஆரம்பம் : 09.11.13 Sat at 8am.
No. 23, Palaly Road, ஆரியகுளம்.
(அப்பலோ Hospital க்கு அண்மையில்).
11.11.13 Mon at 4.30pm.
No. 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)
0779 789 456
Deutsch,IELTS,B1,Sinhala Classes உம் நடைபெறுகிறது...

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.